# களத்தில்

தமிழீழத் தாயே!
அன்னை பூபதியே!

உன்னை நீ!
செத்துச் செத்துச்
செதுக்கிக் கொண்டாய்!

உன் ஈகத்திற்குத் தலை
வணங்குகின்றோம்.

அன்னையின் ஏழாம் ஆண்டு வணக்க நாளை முன்னிட்டு வெளியிடப்படும் கட்டுரை நடுப்பக்கத்தில். →

திருவள்ளுவர் ஆண்டு 2026 மீனம் 24 (07.04.1995) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவருஞ் செய்தித்தாள் | அன்பளிப்பு 40p


## சிங்களப் பொலிசார் அராஜகம்!

# விடுதலைப் புலிகளின் மண்டூர்ப் பொறுப்பாளர் சயனைட் அருந்தி வீரச்சாவு

களுவாஞ்சிக்குடி மருத்துவமனைக்கு சைக்கிளில் சென்று கொண்டிருந்த, ஆயுதம் எதுவும் தரிக்காத நிலையில் இருந்த தம்பிராஜா நவனீதன் எனும் இயற்பெயருடைய லெப்டினன்ட் சிறிநிவாசன் எனும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மண்டூர்ப் பொறுப்பாளர், சிங்களப் பொலிசாரால் தடுத்து நிறுத்தப்பட்டார். அவரைச் சோதனையிட்ட சிறீலங்காப் பொலிசார் ஒரு டோர்ச்லைட்டைக் கண்டெடுத்து, அவரிடம் நீ விடுதலைப்புலிப் போராளியா? எனக் கேட்டனர். அவர் ஆம் என்று பதிலளித்ததும் தகாதவார்த்தைகளால் அவரைத் திட்டிய பொலிசார், சைக்கிளை உதைத்து விழுத்தி, அவரை மூர்க்கமாகத் தாக்கியுள்ளனர்.

சிறீலங்காப் படையினரைத் தாக்கக்கூடாது என்ற மோதற் தவிர்ப்புக் கட்டுப் பாட்டினால் எதுவும் செய்யாது இருந்த அப்போராளி பொலிசாரின் மூர்க்கத்தனமான தாக்குதல்களைத் தொடர்ந்து தாங்க இயலாமல் சயனைட்டைக்கடித்து, தனது உயிரைத் தற்கொடையாக்கிக் கொண்டார். தனது பேச்சு எதையும் கேட்கமறுத்து, சித்திரவதைசெய்த பொலிசாரின் கொடுமைத்தனத்தின் அடையாளமாக இப்போராளி உயிர் இழந்துள்ளார்.



தமிழீழத்தை நோக்கிப் படையெடுக்கும் வெளிநாட்டுச் செய்தியாளர்கள்

இச்சம்பவம் தொடர்பாகக் கடும் ஆட்சேபனைக் கடிதம் ஒன்றை சிறீலங்கா அரசின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தைக்கு அனுப்பி வைத்த விடுதலைப் புலிகளின் அரசியற் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், இச்சம்பவத்தை மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தினை வன்முறைக்கு உள்ளாக்கி, மீறிய செயலாகும் எனக் குறிப்பிட்டுள்ளதுடன், இத்தகைய சம்பவம் இனியும் நடைபெறாது, உடன் நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தி உள்ளார்.

சிறீலங்காப் படையினரின் பொறுப்பற்ற செயலையும், அரசின் அசமந்தப் போக்கையும், சமாதான விரும்பிகள் கண்டித்துள்ளனர். விடுதலைப் புலிகள் நிரந்தர போர் நிறுத்தத்தைக் கோரும் அதே வேளை, சிறீலங்கா அரசு அதை அலட்சியப்படுத்துவதாகக் குறிப்பிட்ட அவர்கள், இந்த நிலை தொடரும் வரை இப்படியான விரும்பத்தகாத சம்பவங்கள் தொடரவே செய்யும் எனவும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

மோதல் தவிர்ப்பு நடைமுறைக்கு வந்ததன்பின் இடம்பெற்ற மிக மோசமான சம்பவம் என இதனை வர்ணித்துள்ள, கொழும்புச் செய்தித்தாளில் அதன் கட்டுரையாளர் ஒருவர் இவ்வாறான ஒரு நிலை ஏற்படாமல் தடுப்பதற்கு, மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையில் உள்ள விடயங்கள் போதுமானதாக இல்லை எனத் தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகள் இதனைப் பலதடவை வலியுறுத்தி வந்துள்ளதையும் அதனை வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழுவினர் ஏற்றுக்கொண்டுள்ளதையும் குறிப்பிட்டுள்ள அக்கட்டுரையாளர் அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய போர்நிறுத்த உடன்படிக்கை ஒன்றின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். சமாதானப் பேச்சுக்கு இது அவசியமானது எனத் தெரிவித்த அவர், இல்லையேல் மட்டக்களப்பில் இடம்பெற்றது போன்ற சம்பவங்கள் தொடரவே செய்யும் என எச்சரித்தும் உள்ளார்.

# அரசியற் தீர்வா? அன்றாடத் தீர்வா?

## காலங்கடத்துவதற்கு சிறீலங்கா அரசின் கபடம்

மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஆர்வம் காட்டாது அரசியல் பேச்சுவார்த்தையில் அக்கறை காட்டும் சிறீலங்காவின் முயற்சியானது, கால இழுத்தடிப்புக்கான ஒரு உத்தி என தமிழ் மக்களிடையே அபிப்பிராயம் எழுந்துள்ளது.

சமீபத்தில் யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்த பேராயர் கென்னத் பெர்னாண்டோவும், சந்திரிகா அரசு முன்பு போல் அதிக அக்கறை காட்டாததே பேச்சுவார்த்தையில் இழுபறிநிலை ஏற்பட்டுள்ளமைக்கான காரணம் என மக்கள் கருதுவதாகக் கூறியுள்ளார்.

இதற்கிடையே போர்க்கைதிகளாயிருந்த 13 சிறீலங்காப் பொலிசாரையும் ஒரு இராணுவத்தினனையும் விடுதலை செய்த வைபவத்தில் உரையாற்றிய தமிழீழ அரசியற்றுறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன், சனாதிபதி திருமதி சந்திரிகா மீதும் அவரது சமாதான முயற்சிகள் மீதும் எமக்கும் எம்மக்களுக்கும் தொடக்கத்தில் இருந்த நம்பிக்கை இப்போது முழுமையாக அற்றுப் போய்விட்டது. இதனால் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள நாம் போராட வேண்டியது தவிர்க்கமுடியாத ஒன்றாகியுள்ளது. இந்த நிலைமையில் எமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக உறுதியான முடிவெடுக்க வேண்டியவர்களாக உள்ளோம் எனக் கூறியுள்ளார்.

மட்டுநகரில் தமிழீழ அரசியற்றுறைத் துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் விடுத்துள்ள அறிக்கையொன்றில் எமது இனப்பிரச்சினை 50 ஆண்டுகாலப்

(தொடர்ச்சி..12ஆம் பக்கம்)

# சிறீலங்காவில் புதிய அரசியலமைப்பு

## ~சந்திரிகா உத்தரவு

எதிர்வரும் ஆடி மாதம் 11 ஆம் நாளுக்கிடையில் சிறீலங்காவின் புதிய அரசியலமைப்பினை எழுதி முடித்துவிடல் வேண்டுமென சிறீலங்காவின் சனாதிபதி சந்திரிகா உத்தரவிட்டுள்ளார்.

புதிய அரசியலமைப்பு முழு உருவம் பெறுவதற்கு இன்னும் மூன்று மாதங்களே உள்ள நிலையில் இதுவரை சந்திரிகாவின் அரசு தமிழ்மக்களின் பிரச்சினை குறித்து எந்தவிதமான உருப்படியான யோசனைகளையும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, தற்போதைய அரசியலமைப்பின் கீழ் உருவாக்கப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் எனும் மனித உரிமைகளை மறுக்கும் சட்டத்தினை நீக்குவது குறித்தும் இதுவரை சந்திரிகாவின் அரசு எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்பதும் கண்கூடு. இப்பயங்கரவாதத்தடைச்சட்டம் 1978 ஆம் ஆண்டு சித்திரை மாதம் முதல் சிறீலங்காவால் அமுல் செய்யப்பட்டுவருகிறது. இப்பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பெயராலேயே சிறீலங்காவால் பல மனித உரிமை மீறல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன், அப்பாவித் தமிழ் இளைஞர்கள் காலவரையற்ற மனித நேயமற்ற கைதுகளுக்கு ஆளாகி, விசாரணை என்ற பெயரில்

(தொடர்ச்சி...12 ஆம் பக்கம்)

# காலக்கெடு நீடிப்பு

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் பங்குனி 28 ஆம் நாள்வரை காலக்கெடு விதித்து, சிறீலங்கா சனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்திற்கு, சிறீலங்கா சனாதிபதி பங்குனி 24 ஆம் நாள் பதில் கடிதம் அனுப்பியிருந்தார். இதில் பொருண்மியத்தடையை நீக்குவது, மீன்பிடித்தடையை முற்றாக நீக்குவது போன்ற விடயங்களில் சாதகமான பதில் அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. இதனை வரவேற்ற தலைவர் பிரபாகரன் மேலும் மூன்று வாரத்திற்குக் காலக்கெடுவை நீடித்து, பதில் கடிதம் ஒன்றைச்

(தொடர்ச்சி...12 ஆம் பக்கம்)

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

# புலிகளின் கோரிக்கைகள் நியாயமானவையே

## -யாழ் ஆயர் செவ்வி

'விடுதலைப் புலிகளின் கோரிக்கைகள் நியாயமானவை என்று என்னால் கூறமுடியும். அவர்களே வேலியாக நின்று சகல விதத்திலும் தமிழ்மக்களைக் காப்பாற்றி இன்றைய நிலைக்கு வருவதற்கு மூலகர்த்தாவாக விளங்கியவர்கள்.' இவ்வாறு யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள்'சண்டேலீடருக்கு'வழங்கியபேட்டியில் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், நாம் தற்பொழுது விடுதலைப் புலிகளின் சட்டங்களில் உறுதியான நிலைப்பாட்டுடன் இருக்கிறோம். அதற்கேற்ப சரியான வழிமுறைகளிலேயே எல்லாம் இயங்கி வருகின்றன. ஆகவே, அவர்களது நியாயபூர்வமான கோரிக்கைகளுக்கு அரசு செவிசாய்த்து விட்டுக்கொடுத்து நடக்கவேண்டும். அத்துடன், விடுதலைப் புலிகளின் கோரிக்கைகள் நியாயமானவையும் ஆக்கபூர்வமுடையனவும் ஆகும் என்றார். அவர் வழங்கிய செவ்வியின் விபரம் வருமாறு:-

கேள்வி- அரசுஇனப்பிரச்சினைகுறித்துஎடுக்கும் முயற்சிகளைப்பற்றிஎன்னநினைக்கின்றீர்கள்?

பதில்- அதனை நாம் வரவேற்கின்றோம். ஏனென்றால்இதுவரைகாலமும்நாட்டுமக்களின் சொத்துக்களும் உயிர்களும் அழிந்தனவே ஒழிய வேறொன்றும் இல்லை. அத்துடன், தமிழர்களின் பாதுகாப்பு முற்றாக விடுதலைப் புலிகளிடமே தங்கியுள்ளது. ஆகவே இந்த விடயம் வரவேற்கத்தக்கது.

கேள்வி- இதற்கேற்ற தீர்வு என்ன என்பதை உங்களால்கூறமுடியுமா?

பதில்- நான் அரசியல்வாதி அல்ல. இருந்தாலும் அரசியல் தீர்வு மூலமே இதற்கு முடிவு எடுக்கவேண்டுமென்பதேஎனதுஅபிப்பிராயம்.

கேள்வி- விடுதலைப் புலிகளின் கோரிக்கைகள் நியாயமானவையெனநீங்கள்நினைக்கிறீர்களா?

பதில்- நிச்சயமாக. அவர்களின் கோரிக்கைகள் நியாயமானவையே என என்னால் கூறமுடியும். உதாரணமாக, பதினேழு ஆண்டுகளாக தமிழ்மக்கள் சொல்லொணாத் துன்பங்களையும், அழிவுகளையும், உயிர்ச்சேதங்களையும் அனுபவித்துள்ளார்கள். கடற்தொழிலாளர், கமக்காரர்கள் அன்றாட உழைப்பின்றி வறுமையில் வாடியுள்ளனர். இவ்வேளையில் விடுதலைப் புலிகளே தமிழ்மக்களின் வேலியாக நின்று சகலவிதத்திலும்மக்களைக் காப்பாற்றி இன்றைய நிலைக்கு வருவதற்கு மூலகர்த்தாவாக விளங்கியவர்கள். ஆகவே, எல்லா விடயமும் நல்லமுறையில்தீர்க்கப்படல்வேண்டும்.

கேள்வி- இராணுவத்தை பூநகரியிலிருந்து நீக்க வேண்டும்என்றவிடுதலைப்புலிகளின்கோரிக்கை நியாயமானதா?

பதில்- இதற்கான சகல விடயங்களையும் அரசும் விடுதலைப் புலிகளும் சேர்ந்து தீர்க்க வேண்டும். இதைப்பற்றி விளக்கம் கொடுப்பது எனது நோக்கமல்ல. மக்கள் துன்பம் இல்லாமல் நடமாடப் போக்குவரத்தை மேற்கொள்வது மிக அவசியம். ஆகவே பூநகரி அல்லது ஆனையிறவுப் பாதையைத் திறப்பது இதில் முக்கியமானஒருவிடயமாகும்.

கேள்வி- நீங்கள் கூறியதன்படி, அரசுடன் பேச்சுவார்த்தையின் மூலம்தான் ஏற்ற ஒரு முடிவை எடுக்கலாம் எனக்கூறியுள்ளீர்கள். ஆனால் மூன்றாம் கட்டப் பேச்சுவார்த்தை யாழ்ப்பாணத்தில் நடந்தபோது விடுதலைப் புலிகளை அடுத்த கட்டப் பேச்சிற்குக் கொழும்பு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் அதனைஅவர்கள்ஏன்விரும்பவில்லை?

பதில்- பொதுவாக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் அரசியல் தீர்வு குறித்துபேசுவதில்அர்த்தமில்லை. அதனால்தான் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்ட பின்னரே இறுதி அரசியல் தீர்வை முன்வைக்க முடியும் என்பதே அவர்களின் கருத்தும்நிலைப்பாடுமாகும்.விடுதலைப்புலிகள் விடுக்கும் இக் கோரிக்கைகள் மக்களின் கோரிக்கைகளே.

கேள்வி- மற்றைய தமிழ்க் கட்சிகளுடனும் இது சம்பந்தமாக ஆலோசனைகள் நடத்தப்படல் வேண்டும் என்பது சரியென நீங்கள் நினைக்கின்றீர்களா?

பதில்- கட்டாயமாக மற்றைய தமிழ்க் கட்சிகளுடன் மட்டுமல்ல, சிங்களவர்களுடனும் இணைந்துகலந்துஒருஇறுதிமுடிவுஎடுக்கவேண்டும்.

கேள்வி- அப்படியாயின் அரசு ஏன் விடுதலைப் புலிகளுடன்மட்டும்பேசுகின்றது?

பதில்- இதற்கு முக்கிய காரணம், விடுதலைப் புலிகள் மட்டுமே இறுதிவரை போராடித் தமிழ்மக்களைக் காப்பாற்றி வருகின்றார்கள். அதில் எந்தவித சந்தேகமும் இல்லை. மேலும் மற்றக்கட்சிகள் எவையும் வடக்கில் இல்லையே! எனஅவர்மேலும்குறிப்பிட்டார்.

# ஏமாற்றுகிறாரா சந்திரிகா?

சனாதிபதி சந்திரிகா யாரை ஏமாற்றுகின்றார் என்று தெரியவில்லை. அதாவது தன்னைத்தானே ஏமாற்றுகின்றாரா? அல்லது மக்கள் அனைவரையும் ஏமாற்றுகின்றாரா என்று தெரிய வில்லை. அவர் சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடு உள்ளதால், கேள்விகள் எழவேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. திருமலையில்இந்தமாதம்ஐந்தாம்நாள் கப்பற்துறைமுகக் கிராமத்தில் திறப்பு விழாவில் பேசிய சனாதிபதி, வடக்கு - கிழக்கு மாகாணங்களில்அபிவிருத்தியைப்பாரியஅளவில் செயற்படுத்துவதற்கு, அங்கு முதலில் சமாதானம் வேண்டும் எனத் தெரிவித்திருந்தார். அவரின் இவ்வறிப்பானது, எவ்வித விவாதமும் இன்றி ஏற்றுக்கொள்ளக்கூடியது. ஒன்றே. இதனையே தொடக்கத்தில் இருந்து விடுதலைப் புலிகள் இயக்கமும் வற்புறுத்திவருகின்றது. இந்த வகையில்போர்நிறுத்தமும்பொருண்மியத்தடை நீக்கமும் ஏற்பட்டு, மக்கள் அமைதித்தீர்வு உறுதிப்பாடுகொண்டபின்பேஅமைதிமுயற்சிகள் வெற்றியளிக்கமுடியும். ஆனால் திருமலைக் கூட்டத்தில் அவர் பேசியதுபோலச் செயற்படுவதாகத் தெரியவில்லை. இதற்கு அமைதிப் பேச்சுவார்த்தையில் இணக்கங்காணப்பட்ட பின்னரே, வடபகுதி அபிவிருத்திபற்றி அவர் பேசவதைக் குறிப்பிடலாம். அத்தோடு அவ்விருத்தியில் தன்னை மிக ஆர்வமுள்ளவராகக் காட்டிக்கொள்ளும்முயற்சியிலும்அவர்இறங்கிஉள்ளார். இந்த வகையிலே யாழ். குடாநாட்டிற்கு இரண்டு மின்பிறப்பாக்கிகளை அனுப்பிவைத்ததைக் குறிப்பிட முடியும். அது அமைதி ஏற்பட முன்னர், அபிவிருத்தியைமேற்கொண்டதுபோன்றதாகும். ஆயினும் அவர் நோக்கம் குறித்து, ஐயமே எழுகின்றது. போரும் அபிவிருத்தியும் ஒன்றுக்குள் ஒன்று முரணானவை என்று தெரிந்துகொண்டிருந்தும், தனது அரசியல் இலாபம் கருதி முரண்பாடான செயற்பாட்டில் இறங்கினார் என்றே கூறலாகும். அதாவது போருக்காக உருவாக்கப்பட்ட பொருண்மிய த்தடையும் எரிபொருட்தடையும் நீக்கப்படாமல் அபிவிருத்தி என்பது கனவிலேயே மேற்கொள்ளக்கூடியதாகும். சிலசமயம் அவர் தற்பொழுது நடைமுறையில் உள்ள மோதல் தவிர்ப்பு உடன்பாடு இரண்டு மாதங்கள் பெரும் மோதலின்றி கடந்துவிட்டமையும் இலங்கையில் அமைதி திரும்பிவிட்டது என்ற எண்ணத்தை உருவாக்கிவிட்டதாகத் தெரிகின்றது. ஆனால் இது உண்மையில், அமைதி இல்லை என்ற ஒரு நிலையே ஆகும். இருதரப்பும் மோதல் தவிர்ப்பு நிலைக்கு ஒப்புக்கொண்டார்களே தவிர, எவரும் ஆயுதங்களைக் கீழே வைக்கக்கூட உடன்படவில்லை. உடன்பாடு ஒப்பந்தம் எதுவும் கைச்சாத்தாகவும் இல்லை. இந்த நிலையில் அமைதி உருவாகிவிட்டது. அபிவிருத்தி நேரம் வந்துவிட்டது எனச் சனாதிபதி கருதுவதும் அதற்கு ஏற்றாற்போல் அபிவிருத்திகளைச் செய்வதும் அனைவரையும் ஏமாற்றும் நடவடிக்கையே ஆகும். ஏனெனில் அமைதிப் பேச்சுக்களில் தொடக்கநிலையே நிலையுறாத நிலையில், இறுதிநிலையைப் பற்றிச் சிந்திப்பது, மடமைத்தனமாகும். இதனால் அவரின் அறிவிப்புக்கள் அவர் அமைதிக்கு விசுவாசமாக இல்லை என்பதையே காட்டுவதாக உள்ளது. அமைதிப் பேச்சுக்களின்போது விடுதலைப் புலிகள் இயக்கம் விடுத்த கோரிக்கைகளை நிறைவு செய்யமுடியாத அரசு, புனர்நிர்மாண ரீதியில் இருமின்பிறப்பாக்கிகளை அனுப்பியுள்ளது. இது அமைதி முயற்சிகளை ஏற்படுத்தப்போது மானதல்ல.

# மோதல்தவிர்ப்பில் மாற்றம் இல்லையாம்

## -அனுருத்த ரத்வத்த

சிறுசிறு சம்பவங்கள்நடைபெற்றிருந்தாலும்கூட சிறீலங்கா அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல் தவிர்ப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன என்றுமின்சக்திஎரிபொருள்துறைஅமைச்சரும், பிரதிப்பாதுகாப்பு அமைச்சருமான கேணல் அனுருத்த ரத்வத்த அண்மையில் பாராளுமன்றத்தில்தெரிவித்தார்.

இத்தகையநிலைமைகளில்சிறுசிறு சம்பவங்கள் நடைபெறுவது தவிர்க்க முடியாதது. இருந்தபோதிலும்அரசு, விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தி இந்தப் பிரச்சினைக்குமுடிவுகாணமுனைந்திருக்கிறது என்றுஅமைச்சர்கூறினார்.

வட-கிழக்கில் உள்ள சில பகுதிகளிலும், கொழும்பிலும் கம்பகாவிலும் சில பிரதேச செயலகங்களிலும் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதகாலத்திற்கு நீடிப்பது பற்றிய பிரேரணைமீதுஅமைச்சர்உரையாற்றினார்.

அரசியல் பேச்சுவார்த்தை மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என தற்போது தமிழ்மக்கள் கருதுகின்றனர். சமாதான முயற்சிகள் தற்போது தொடங்கப்பட்டிருப்பதாக அவர்மேலும்குறிப்பிட்டார்.

இருந்தபோதிலும் அரசு இந்தப் பிரச்சினையை விரைவில் தீர்த்து வைக்க உறுதிபூண்டுள்ளது என்றார்.

# இசைபாடும் திரிகோணம்

## -ஒலிப்பேழைநாடாவெளியீடு

'திருமலை மாவட்டத்தின் சோகத்தையும், இதன் பெருமைகளையும், இந்த மண்ணில் மாவீரர்களின் காவியத்தினையும், இந்த மண்ணின் வரலாற்றையும் இங்கே போற்றும் முகமாக, வெளிக்கொணரும் இந்த 'இசைபாடும் திரிகோணம்' என்ற ஒலிப்பதிவு நாடா இன்று உங்கள்முன்வைக்கப்படுகிறது.

இவ்வாறு அண்மையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி திறந்த வெளியரங்கில் நடைபெற்ற 'இசைபாடும் திரிகோணம்' என்னும் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு நிகழ்விற்கு தலைமை தாங்கி உரைநிகழ்த்திய தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பொறுப்பாளர் ரவி தெரிவித்தார்.

# அடுத்தகட்டப்பேச்சு

நான்காம் கட்டப்பேச்சுவார்த்தைகள் சித்திரை மாதம்முதல்வாரத்தில்நடைபெறும்எனசிறீலங்கா அரசு அறிவித்துள்ளதாக பிபிசி சிங்கள ஒலிபரப்பு 'சந்தே சதெரிவித்துள்ளது

சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விடுதலைப் புலிகளுக்கு எழுதிய கடிதத்தில் எதிர்வரும் 2 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் ஒரு திகதியை குறிப்பிடுமாறும்அத்திகதியில்தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை வைத்துக்கொள்ளலா மென்றும் குறிப்பிட்டுள்ளதாக 'சந்தேசிய' வானொலிமேலும்தெரிவித்துள்ளது.

# இலக்கு நோக்கிய இலக்கியம் .....

வியூகம் விதைக்கப்பட்ட அமைப்பிலிருந்து சற்று விலக வேண்டிய சூழ்நிலை.

சரோஜினியின் ஆயுதம் திடீரென இயங்க மறுக்கிறது.

பயிற்றப்பட்ட எதிரிக்கு அக்கணம் வழிசமைத்துக் கொடுத்துவிடுகிறது.

அந்தோ! காயப்பட்டுவிட்டாள் அந்தக் கன்னிகை.

தூரத்தே கவனித்துவிட்ட தோழி அவளை நோக்கி ஓடுகிறாள்.

அதே கடோத்கஜன் போன்று சரோஜினி.

மரணத்தின் தறுவாயில் மண்ணின் நினைவுகளுடன்...

அவள் வயிற்றுப் பகுதியில் சன்னத்தின் சின்னம்...

இரத்தம் ஆறாக ஓடுகிறது.

வந்தவள் தோழி மீட்க முனைகிறாள்.

தலைவியோ தடுக்கிறாள்.

***"என்னை மீட்க முனையின் நீயும் உயிரிழப்பாய்."***

***"என்னை மீட்பதற்கு முனைவதை விடுத்து மண்ணை மீட்க முனைந்து கொள்."***

தனது ஆயுதத்தைக் கையளிக்கின்றாள்.

சயனட் விடத்தை கையிலெடுக்கின்றாள்.

ஓ... மரணம் அருகில்

மண்ணிற்காக மரணிக்கப் போகின்றேன்.

இனியும் என் தேவை என்ன? இனியும் என்னால் என்ன முடியும்.

சரோஜினி சஞ்சலப்படுகிறாள்.

அதே கடோத்கஜன் நினைத்தது போன்று இந்தக் காயப்பட்ட வேளையிலும் எதிரிகள் படையை என்னால் ஏதாவது விதத்தில் அழித்திட முடியுமோ? சிந்திக்கின்றாள்...

கைக்குண்டொன்றைக் கையிலெடுக்கின்றாள்.

தோழியை விலகிப் போகுமாறு உத்தரவிடுகின்றாள்.

ஒரு கையில் சயனட், மறு கையிற் கைக்குண்டு....

எதிரிப்படையின் பலவீனம் அறிந்தவள்.

கோரப்படைகள் இறந்தோரையும் விட்டுவைக்காத் தன்மையை உணர்ந்தவள்.

தான் குப்புற இறந்தவள் போன்று பாவனை செய்து எதிரியின் வருகைக்காகக் காத்திருக்கிறாள்.

இதோ! வருகின்றனர்.

அருகே காலடிச்சத்தம் கேட்கிறது.

வந்தவர்கள், வெல்லமுடியா ஆத்திரத்தை இறந்து போய்க் கிடக்கும் உடல்கள் மீது காட்டிக் கொண்டு வருகிறார்கள்.

இப்போ சரோஜினியின் முறை.

வந்தவன் எட்டி உதைக்கிறான்.

பிரதேசமே அதிர்கிறது.

கண்ணியுடன் கன்னி காவியமானாள்.

இதோ!.... இலக்கை நோக்கிய இலக்கியங்கள்.

# இலங்கைவிஞ்ஞானியின் கண்டுபிடிப்பு

கணனிமூலம்புற்றுநோயைக்கண்டறிவதற்கான தொழில் நுட்பம் ஒன்றினை தமிழ் விஞ்ஞானியொருவர் நோர்வேயில் கண்டு பிடித்துள்ளார்

நோர்வேயிலுள்ள ரேடியோ மாஸ்ரர் உரத்தடுப்பு ஆய்வகத்தில் கணனி விஞ்ஞானியாகப் பணியாற்றும் கலாநிதி யோகேசன் கனகசிங்கம் என்ற இந்தத் தமிழ் விஞ்ஞானியே இப்புதிய கண்டுபிடிப்பை மேற்கொண்டவராவார். இத்தொழில்நுட்பம்மூலம் புற்றுநோய்க் கலங்களைத்தானாகஇனங்காணமுடியும்.

# இயலாமை

கடந்தவாரம் இந்தியாவிற்கு விஜயம் செய்த இலங்கை சனாதிபதி சந்திரிகா எரிபொருட்கள் மீதான தடையையும் மீன் பிடித்தலுக்கான தடையையும் அகற்றுவது குறித்து தமது அரசு ஆலோசித்து வருவதாக செய்தித்தாளுக்குக் கூறியுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளின் "காலக்கெடு"வுடனான கடிதம் சிறீலங்கா சனாதிபதிக்கு அனுப்பட்டுள்ள சூழ்நிலையில் சந்திரிகா கூறியுள்ள வார்த்தைகளுக்கு மதிப்பளித்து சமாதானத்தின் மீதான தமது அவாவை மேலும் தெளிவுபடுத்தக்கூடிய வகையில் விடுதலைப் புலிகள் ஏப்ரல் 19 வரை மூன்று வாரகால அவகாசம் கொடுத்துள்ளனர்

சந்திரிகா அவர்கள் தேர்தலுக்கு முன்பும் ஆட்சிக்கு வந்த பின்பும் முன்னோடியான பல கருத்துக்களைக் கூறுவதும் பின்னர் சிறீலங்காவின் நிறைவேற்று அதிகாரமுள்ள அவராலேயே தான் கூறியவற்றை நிறைவேற்ற முடியாத "இயலாமை" நிலையை அனுபவிப்பதும் சமீபகால நிகழ்வுகள்.

சிங்களத் தலைமைகளால் "தமிழர் பிரச்சினை குறித்துத் தீர்வு காண்பதிற் காணப்படும் "இயலாமை" நிலை இன்று புதிதான ஒன்றல்ல". வரலாற்றுரீதியான வெளிப்பாடு. அந்நியர் ஆட்சியை அகற்ற ஒத்துழைத்தால் உங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பேன் என நிபந்தனையுடனான ஒத்துழைப்பை தமிழர்களிடம் இருந்து பெற்ற டி.எஸ் சேனநாயக்காவாலும் இயலவில்லை. சமஸ்டி ஆட்சிமுறையே இலங்கைத்தீவின் அமைதிக்கு ஒரே வழி என்ற சந்திரிகாவின் தந்தை எஸ். டபிள்யு. ஆர். டி பண்டாரநாயக்காவாலும் இயலவில்லை. இந்த இயலாமை நிலை பௌத்த சிங்கள பேரினவாதத்தின் ஆயுதமயப்படுத்துவற்கான கால அவகாசமாக மாறி இறுதியில் சிங்கள-பௌத்த பேரினவாதம், ஒற்றையாட்சியின் கீழ் தமிழரும் சிங்களவரும் சனநாயக ஆட்சியில் இணைவதற்கு விதித்த நிபந்தனைகளையும் மீறியது.

இவ்வாறு தமிழர் பிரச்சினையை தீர்க்க இயலாச் சிங்கள சிறீலங்காவின் செயலானது, இன்றைய அரசியல் விஞ்ஞான அறிஞர்களில் ஒருவரான அன்ரனி எச். ஜோர்ச் கூறுகின்ற, (இச்செய்தித்தாளில் இன்னொரு பக்கத்தில் அவர் கூறிய கருத்து உள்ளது) தனிநாடொன்றை அமைப்பதற்கான நியாயப்பாட்டை பூர்த்தி செய்கின்றது. தமிழர்கள் தமது மக்கள் அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் மூலம் தமது தேசிய பாதுகாப்பைத் தாமே ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய வலிமையைப் பெற்று நிற்கின்றனர்.

இந்நிலையில் இலங்கைத்தீவின் இரு தேசத்தவரான தமிழரும் சிங்களவரும் தமது புவியியல் ஒருமைப்பாட்டின் அடிப்படையில் எவ்விதமான அரசியல் முறைமூலம் இலங்கைத்தீவில் அமைதியான ஒரு ஆட்சியை ஏற்படுத்தலாம் என்கிற தொழில்நுட்பப் பிரச்சினையே இனப்பிரச்சினைக்கான தீர்வின் அடிப்படையாகவுள்ளது.

பூநகரி இராணுவ முகாம் மூலம் சிறீலங்கா குடாநாட்டு மக்கள் மீதான முற்றுகையையே மையப் படுத்தியது. இதே பூநகரி இராணுவ முகாம் தமிழர் தாயகத்தை வடக்கு நிலம் - கிழக்கு நிலம் எனக் கூறுபோடும் சிங்கள-பௌத்த பேரினவாதத்தின் இராணுவ வெளிப்பாடாகவும் உள்ளது. எனவே இந்த மனோநிலைகள் தொடராது என்பதை உறுதி செய்வதற்கு இந்தப் பூநகரி இராணுவ முகாமை அகற்ற வேண்டிய தேவை உண்டு.

சிங்களப் போர்க் கைதிகளை விடுதலை செய்ததன் மூலம் மனித அவலங்களைப் பேரப் பொருட்களாக்கக் கூடாது என்பதைத் தெளிவுபடுத்தியுள்ள விடுதலைப் புலிகள் எரிபொருள் - மீன்பிடித் தடைகளை அகற்றுவதுடன் பூநகரி முகாமையும் அகற்றும்படி கேட்பது மக்கள் மீதான முற்றுகை மனோபாவத்தை விட்டுவிட வேண்டும் என்பதை உறுதிப்படுத்தவே. இம்முகாமை பின்னோக்கி நகர்த்துவதால் தமிழீழ மக்களின் தேசியப் பாதுகாப்பில் எவ்வித மாற்றமும் ஏற்படப் போவதில்லை. இதை விடுதலைப் புலிகள் அனுமதிக்கமாட்டார்கள் என்பது சந்திரிகாவிற்கு தெரியாத ஒன்றல்ல.அவர் அதற்கு மறுப்பதன் மூலம் அவர் வெளிப்படுத்துவது அவரின் இயலாமையையே.

# பிரபாகரன் மனிதாபிமானமுள்ளதோர் தலைவன்

## — விடுவிக்கப்பட்ட கைதி செவ்வி



விடுவிக்கப்பட்ட யுத்தக் கைதிகள்

"எங்கள் விடுதலையில் விடுதலைப் புலிகள் காட்டியுள்ள நல்லெண்ணத்தை எப்படிப் பாராட்டுவது என்று எமக்குத் தெரியவில்லை. பிரபாகரன் மனிதாபிமானம் மிக்கவர். முன்பு சிங்கள மக்கள் அவரைப் பற்றி க்கொண்டிருந்த கண்ணோட்டம் தவறானது என்பது இப்பொழுது தெளிவாகிறது."

இவ்வாறு யாழ்ப்பாணத்திலிருந்து விடுதலையாகிக் கொழும்பு வந்த எம். எச். பியரட்ணா என்ற பொலிசார் கொழும்பு மருத்துவமனையில் வைத்துக் கூறினார்.

"எங்கள் அரசு நாம் செய்த உண்ணாவிரதத்தில் அவ்வளவு அக்கறை காட்டவில்லை. ஆனால் தலைவர் பிரபாகரன் ஒவ்வொரு நிமிடமும் எங்கள் நிலையைப் பற்றித்தான் கேட்டுக்கொண்டிருந்தார். சாகும்நிலையில் இருந்த எங்களை அவர் சாகவிடவில்லை. எவ்வித நிபந்தனைகளும் இன்றி, எங்களை விடுதலைசெய்ய உத்தரவு பிறப்பித்தார். அந்த மனித உள்ளத்தைச் சிங்கள மக்கள் இன்று நன்கு அறிவர்" என்றார்.

# நோர்வே வெளிவிவகார செயலாளரும் 16 செய்தியாளர்களும் கொழும்பில்

நோர்வேயின் வெளிவிவகார அமைச் சின் செயலானர் அஸ்ப் ஜோன் மற்றும் நோர்வேயை சேர்ந்த 16 செய்தியாளர்களும் கொழும்புக்கு இருவேறான விஜயங்களை மேற்கொண்டனர். இவர்கள் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு பற்றிய விடயத்திலும் அதிக அக்கறை காட்டியதாக தெரிகிறது.நெடுங் காலமாகவே நோர்வே இலங்கையின் இனப்பிரச்சனையில் அதிக அக்கறை காட்டிவருவது அறிந்ததே.

## கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம் அம்பாறைக்கு இடமாற்றம்?

கிழக்கிலங்கை பல்கலைக்கழகத்தை அம்பாறைக்கு இடம்மாற்ற அண்மையில் சிறீலங்கா அரசு முயற்சிகள் எடுத்துவருவதாக செய்திகள் இடம்பெற்றதையடுத்து அதனைக் கண்டித்து இப்பகுதி மக்கள் கிளர்ந்தெழுந்து அப்பகுதி மாணவர்களுடன் இணைந்து ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியுள்ளனர். இவ்வூர்வலத்தில் சுமார் 5000 இக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். அம்பலத்தடியில் தொடங்கிய இந்த ஊர்வலம் வந்தாறுமூலைப் பல்கலைக்கழகப் பகுதியை வந்தடைந்தது. தமிழர்களின் கல்விவசதியில் எப்படியெல்லாம் கை வைக்கமுடியுமோ அப்படியெல்லாம் கை வைக்கத் துணிந்த சிங்கள அரசின் இவ்வடாவடித்தனநடவடிக்கையைக் கண்டித்து மக்கள் கோசங்களை எழுப்பினார்கள். இப்பல்கலைக்கழகம் ஏற்கனவே சிங்கள அரசின் பல கெடுபிடிகளுக்கு மத்தியில் இயங்கிவந்தமை குறிப்பிடத்தகுந்தது.

# எங்கள் மீனவரை விடுங்கள்! உங்கள் மீனவரை விடுகின்றோம்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்கள் விடுதலை பற்றி செய்தியாளர்கள் கேட்டபொழுது, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மீனவர்களை விடுதலை செய்ய எப்பொழுதும் நாம் தயாராகவே உள்ளோம். ஆனால் சிறீலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள எமது நூற்றுக்கும் மேலான மீனவர்களை விடுதலை செய்தால், நாமும் தாமதமின்றி மீனவர்களை விடுவிப்போம் என்றார்.

வேறொரு செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய அன்ரன் பாலசிங்கம் அவர்கள், காலக்கெடு விதிக்கப்பட்டபடியாற்தான் சிறீலங்கா அரசு தமது நிலைப்பாட்டை மாற்றி இணக்கத்துக்கு (மீன்பிடித்தடை, பொருண்மியத்தடைகளை நீக்குவதில்) வந்துள்ளனர். தற்போதைய நிலையில் மேலும் 3 வார காலக்கெடு கொடுக்கப்பட்டுள்ளதாகவும் இவ்வாறு காலக்கெடு கொடுக்கபடாவிடின் இவை கூட நடைபெறாது எனவும், இக்கால எல்லைக்குள் இணக்கம் காணப்பட்டவற்றை நடைமுறைப்படுத்த சிறீலங்கா முன்வர வேண்டும் என்றார்.

# ஏன் தென்னிந்தியத் திரைப்படங்களை நாம் தடை செய்தோம்

## - தமிழீழத் திரைப்படப் பொறுப்பாளர் பாஸ்கரன்

வளரும் சந்ததிகள் வீரமுள்ள, அறிவுள்ள நல்ல ஒழுக்கமுள்ள சந்ததிகளாக சமுதாயத்தில் வாழவழி செய்யும்முகமாகவே தென்னிந்தியத் திரைப்படங்களை நாம் தடைசெய்துள்ளோம். எமது மண்ணை மீட்டு, சிந்தனையற்ற ஒரு சமுதாயத்திடம் கொடுக்க நாம் தயாரில்லை. எனவேதான் எமது சமுதாயத்தில் வாழ்கின்ற மக்களுக்காகவே நாம் அனைத்துத் துறைகளிலும் நிர்வாகக் கட்டமைப்புக்களை உருவாக்கியுள்ளோம். இவ்வாறு அண்மையில் தென்மராட்சிக் கலை, பண்பாட்டுக் கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட கலைவிழாவொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழீழத் திரைப்படப் பொறுப்பாளர் திரு. பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் பேசுகையில், கலை என்பது வாழ்வோடு பின்னிப் பிணைந்தது. ஒரு மனிதன் பிறந்ததும் தாலாட்டுப் பாட்டுப் பாடப்படுகின்றது. தவழும்போது விளையாட்டுப் பாட்டு. இளைய வயதில் காதற்பாட்டு பின்னர், தொழிற்பாட்டு இறுதியில் ஒப்பாரிப்பாட்டு இப்படியே ஒருவரோடு கலையென்பது சேர்ந்து உள்ளது. முன்னைய படைப்பாளிகள் காதற்கவிதைகள் உருவாக்கினர். ஆனால் இன்று புதிய தலைமுறையொன்று எமது தமிழீழத்தில் மிளிர்கின்றது. எமது போராட்டத்தில் அரிய சரித்திரம் படைத்து இருக்கின்றது. போராட்டம் எங்களுக்குச் சொல்கின்றதைக், கலைஞர்கள் கதை மூலம் மக்களுக்கு எடுத்துக்காட்டுகின்றார்கள். எனவேதான் கலைஞர்கள், பொதுமக்கள், எழுத்தாளர்கள் எமது போராட்டத்தில் இருந்து விலகக்கூடாது. என்றோ ஒருநாள் எமது மண் விடுதலை அடையப்போகின்றது. அப்போது பிள்ளைகள் உங்களைப் பார்த்து, அப்பா, அம்மா முன்னர் போராட்டம் நடந்ததாமே?. அப்போது கரும்புலிகள், கடற்புலிகள் என இளைஞர்கள் இருந்தார்களாமே. அப்போது நீங்கள் இந்த மண்மீட்புப் போரில் என்ன உதவிசெய்தீர்கள் என உங்கள் சந்ததியினர் உங்களைக் கேட்கத் தான் போகின்றனர். அப்போது நீங்கள் என்ன செய்யபோகின்றீர்கள். கலைஞர்கள் காலத்துத் தேவையையும் தன்மையையும் ஆவணப்படுத்துகின்ற சேவையையும் செய்யவேண்டுமென்றார்.

# செய்தித் திரட்டல்

## புனரமைப்பில்நல்லூர்ப். பகுதிகட்குமுதலிடம்.

சிறீலங்கா அரசு யாழ்ப்பாணத்தில் வீதிப் புனர் நிர்மாண வேலைகளை ஆரம்பிக்குமானால்அது முதலில் நாவலர் வீதியினை கைலாசபிள்ளையார் கோவிலடியில் இருந்து செப்பனிடுவதன் மூலம் ஆரம்பமாகுமென அங்கிருந்து கிடைக்கும் செய்திகள்தெரிவிக்கின்றன.

யாழ் மாநகரசபை மின்சாரக் கம்பங்களை சீரமைத்து அறுந்த கம்பிகளை இணைக்கும் பணியில் யாழ் மாநகரசபை ஊழியர்கள் துரித கதியில் ஈடுபட்டு வருவதாகவும் வீடுகளிலும் மக்கள்,சீரழிந்த மின்சாரக்கம்பிஅமைப்புக்களைப் பல இடங்களில் புனரமைத்து வருவதாகவும் செய்திகள்தெரிவிக்கின்றன.

## சந்திரிகாவின் கூற்றுக்கு பாலசிங்கம்பதில்.

"சந்திரிகாவின் கரங்கள் சுத்தமானவை; அவரைக் கொலை செய்வதற்கு எவ்வித காரணமும் எமக்குக்கிடையாது.எமதுபிரச்சினையைநன்கு புரிந்தவர் அவர். சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமை யிலான சிறீலங்கா அரசு இனப்பிரச்சினைக்குஅரசியல்தீர்வு காணவேண்டும்என்பதில் அக்கறை கொண்டுள்ளது. இந்த அரசு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு" என, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், வாசுதேவ நாணயக்காரா குழுவில் கலந்து கொண்ட செய்தியாளர்களை உள்ளடக்கிய, செய்தியாளர் மாநாட்டில் பேசுகையில் கூறினார் என, கொழும்பு திரும்பியசெய்தியாளர்கள்கூறுகின்றனர்.

சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா, விடுதலைப் புலிகளாலும் தமது உயிருக்கு அச்சுறுத்தல் உண்டு எனக் கூறிய கருத்துக்குப் பதிலாக கலாநிதிஅன்ரன்பாலசிங்கம்மேற்படிகூறினார்.

## நாடு இரண்டுபடுவதை இராணுவம்அனுமதிக்காது

"வடக்கு – கிழக்குப் பிரிவினைவாதிகள் இந்த நாட்டைக் கூறுபோடுவதற்கு முயன்று வருகின்றார்கள். அதற்குப் பாதுகாப்புப் படையினர்ஒருபோதும்இடமளிக்கமாட்டார்கள். இதனை இராணுவ வீரர்கள் ஒவ்வொருவரும் மனதிற்கொண்டு, இதற்காக உறுதி கொள்ள வேண்டும்"

இவ்வாறுசிறீலங்காவின்13ஆவதுபடைப்பிரிவுத் தலைவர் பிரிகேடியர் ஆர். பி. இலியனகே, பூசா இராணுவமுகாமில்கூறினார்.

## செம்மண்ணில்நிலக்கடலை பரீட்சார்த்தவெற்றி

செம்மண் தரையில் நிலக்கடலை பரீட்சார்த்தமாகச் செய்கை பண்ணப்பட்டபோது, பெரும் வெற்றி அளித்துள்ளது. தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் மேஜர் பிரதாப் செட்டிப் பண்ணையில் இப்பரீட்சார்த்த முயற்சியை மேற்கொண்டனர். இப்பண்ணையில் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் நிலக்கடலை செய்கை மெற்கொள்ளப்பட்டபோது, சுமார் ஐந்நூறு கிலோவரை அறுவடை செய்யப்பட்டுள்ளது.

## தமிழ் நாட்டு மீனவர் 25 பேர் கைது

தமிழ்நாட்டைச்சேர்ந்த 25மீனவர்களை சிறீலங்கா கடற்படையினர், அவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை கைது செய்து சிறீலங்காவுக்குக்கொண்டுசென்றுள்ளனர்.

மூன்று தினங்கள் காவலில் வைத்திருந்த பின்னர் இந்திய அரசின் வேண்டுகோளின் பேரில் சிறீலங்கா அரசின் உத்தரவினால் இவர்களை கடற்படையினர் விடுதலை செய்துள்ளதாக தெரிகிறது.

ஆயினும் தமிழக மீனவர்கள் கைதாவதை ஆட்சேபித்து சென்னையில் ஊர்வலங்கள் நடைபெறுகின்றன.

## வந்துசேரும்பிரான்ஸ் படகுகள்

### ஐ.தே.க.காலத்தில்வாங்கப்பட்டதாம்

ஐ.தே.க ஆட்சிக்காலத்தில் கடற்படைக்கு என தருவிக்கப்பட்ட இரு பிரான்சு அதிவிரைவு தாக்குதல் படகுகள் விரைவில் கொழும்பு வந்து சேரவுள்ளன.1992இல்நான்குபிரான்சு அதிவிரைவு தாக்குதல் படகுகளைக் கொள்வனவு செய்தபோதும், இரு படகுகளே இதுவரை கொழும்பு வந்து சேர்ந்திருந்தன. மற்றைய இரு தாக்குதல்படகுகளும்விரைவில்கொழும்புவந்து சேரும்எனக்கூறப்படுகிறது.

இதே சமயம், கடற்படையில் 14 விரைவுத் தாக்குதல் படகுகளில் 10 படகுகள் செயலிழந்து நிற்பதாகக்கடற்படைவட்டாரங்கள்தெரிவித்தன.

## விமர்சித்தால்தாக்குதலா?

### பத்திரிகையாளர்அங்கலாய்ப்பு

முகமூடி அணிந்து தம்மை உருமறைப்புச் செய்த நிலையில், இலக்கத்தகடற்ற வெள்ளைநிற கையேஸ் வாகனங்களில் வந்தவர்களே தம்மீது தாக்குதல் நடத்தினர் என சண்டே லீடர் பிரதம ஆசிரியர் வசந்த விக்கிரமசிங்க பி.பி.சியின் சிங்கள சேவைக்குத்தெரிவித்தார்.

கொழும்பு மருத்துவமனை விபத்துப் பிரிவில் இருந்தவாறுபி.பி.சிக்குஅவர்செவ்வியளித்தார்.

தானும் மனைவியும் அலுவல்களை முடித்து விட்டு வீடுதிரும்பிக் கொண்டு இருக்கும்போது, வீதிக்குக் குறுக்கே தமது வாகனத்தை நிறுத்திவிட்டு தன்மீதும் தனது மனைவி மீதும் தாக்குதல் தொடுத்தனர் எனவும் வாகனத்தையும் பலமாகச்சேதப்படுத்தியதாகவும்அவர்கள்பின்னர் அதேவேகத்தில் தப்பிச் சென்றுவிட்டதாகவும் தெரிவித்தார்.

## பாவனைக்குதவாத மருந்து வகைகள்கொள்வனவு

இந்தியாவிலுள்ள மருந்துகள் உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்றிலிருந்து இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்ட சுமார்பத்து மில்லியன் சேலைன் போத்தல்கள் பற்றிய விவகாரம் சம்பந்தமாக விசாரணை நடத்துமாறு சுகாதார அமைச்சு பணித்துள்ளது.

உணவு மற்றும் மருந்துகள் தரக்கட்டுப்பாட்டு திணைக்களத்தினால் பாவனைக்குதவாதவை என இவை கண்டுபிடிக்கப்பட்டபோதும், இவை இறக்குமதி செய்யப்பட்டதன் பின்னணியை அறியுமாறும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இத்தகைய சேலைன் போத்தல்களின் இறக்குமதியில் சுமார் பத்து மில்லியன் ரூபா வரை தரகுப்பணம் பெறப்பட்டிருக்கலாம் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மருத்துவத்திருடர்கள்

### திருடியவை ஆயிரம் பேரின் சிறுநீரகங்கள்

மனித அவயவங்களைத் திருடி விற்ற குற்றச்சாட்டின் கீழ், பெங்களூர் பகுதியில் மூன்று மருத்துவர்கள் காவல்துறையால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த மருத்துவர்களில் ஒருவர் அரச மருத்துவமனையில் கடமை யாற்றும் மூத்த மருத்துவ அதிகாரியாவார். இவர்கள்சுமார்1000பேரின் சிறுநீரகங்களைதிருடி மத்திய கிழக்கு நாடுகளுக்கு விற்பனை செய்துள்ளனர். இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது: சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சையில் ஈடுபடும் இந்த மருத்துவர்கள் மூவரும் சம்பந்தப்பட்டவர்களின் விருப்பத்தை கோராமலேயே அவர்களிடமிருந்து சிறுநீரகங்களை அகற்றியுள்ளனர். கடந்த சில ஆண்டுகளாக இவ்வாறு ஈடுபட்ட இவர்கள், நூற்றுக்கணக்கான சிறுநீரகங்களை சம்பந்தப் பட்டவர்களின் விருப்பத்தைக் கோராமலேயே அகற்றியுள்ளனர் எனக் காவல்துறையினர் கூறியுள்ளனர்.இவ்வாறுதமக்குத்தெரியாமலேயே தமது சிறுநீரகத்தை இழந்தவர்களில் பெரும்பாலானோர்தமிழ்நாட்டைச்சேர்ந்தஏழைத் தொழிலாளிகள் ஆவர். தமிழ்நாட்டிலிருந்து வேலை கிடைக்கும் என்ற உறுதிமொழியோடும் 5000 ரூபா கிடைக்கும் என்ற நம்பிக்கையோடும் வரவழைக்கப்பட்ட இவர்களில் பலருக்கு, இரத்ததானம் செய்ய வேண்டும் என்பது மட்டுமே நிபந்தனையாக இருந்தது. இரத்ததானம் செய்யப்படுவதற்கு பதிலாக பின்னர் அவர்களது விருப்பத்தையும், சம்மதத்தையும் கோராமலேயே சிறுநீரகம் அகற்றப்பட்டுள்ளது. அண்மையில் இவ்வாறு இரத்ததானம் செய்த ஒருவர் கீழே விழுந்து அடிபட்டதைத் தொடர்ந்து வேறு ஒரு மருத்துவரால்சோதிக்கப்பட்டார்.அப்போதுதான் அவரது சிறுநீரகம் திருடப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

## திடீரென வந்த தீவிரஅக்கறை

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் உலகநாடுகள் குறிப்பாக மேற்குலகநாடுகளும், சிறீலங்காவிற்குஉதவிவழங்கும்நாடுகளும்தீவிர அக்கறைகாட்டி வருகின்றன. இதனைத்தொடர்ந்து இந்நாடுகளின் மக்கள் தொடர்புச் சாதனங்களின் கவனமும் இனப்பிரச்சினை குறித்துத்திரும்பியுள்ளதுடன்,இதன்காரணமாக இலங்கையில் நடக்கும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டும் வருகின்றன. விடுதலைப் புலிகள் இயக்கம், உலகில் இன்று விடுதலைப் போராட்டத்தை முனைப்பாக முன்னெடுத்துச்செல்லும் முன்னணி அமைப்பாக இருப்பதைத் தொடர்ந்தும், இனப்பிரச்சினைக்கு சமாதானத்தீர்வு காண்பதற்கு விடுதலைப்புலிகள் இயக்கம் தயாராக இருப்பதைத் தொடர்ந்துமே இன்று இனப்பிரச்சினை விடயத்தில் மேற்குறிப்பிட்ட கவனம் இலங்கை குறித்து ஏற்பட்டுள்ளது. கடந்த காலத்திலும் இனப்பிரச்சினை தொடர்பாகவேமேற்குலகநாடுகள்தீவிரஅக்கறை காட்டுவதாக உள்ளது. இதேவேளை, இவ்வாறான அக்கறை காட்டுவதற்கும் புதிய பொதுசன ஐக்கிய முன்னணி அரசின் எதிர்கால நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வதற்கும் அவசியமாக உள்ளது. இதனைத்தொடர்ந்தே தற்பொழுது மேற்குலக நாடுகளும், உதவி வழங்கும் நாடுகளும் அக்கறை காட்டத்தொடங்கியுள்ளன. இதில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் நடைபெறுவதை அறிவதில் ஆர்வம் கொண்டுள்ளன. இதனைத்தொடர்ந்து பல நாடுகளின்பிரதிநிதிகள்வடக்கே வந்து சென்றனர். இதேசமயம் உலகில் உள்ள பன்னாட்டுச் செய்தியாளர்களும் படப்பிடிப்பாளர்களும் யாழ். குடாநாட்டிற்குப் படையெடுத்து வந்து, சென்றவண்ணமேஉள்ளனர்.

## பயணிகள்மீதுபுளட்குழு சோதனை

தாண்டிக்குளமூடாகத் தென்பகுதி நோக்கிப் பயணம் செய்யும் வடபகுதிப்பயணிகள் புளட் குழுவினரின் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே இராணுவச்சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். இராணுவச்சோதனைச் சாவடியிலிருந்து 150 யார் தூரத்துக்கப்பால் பயணிகள் வரிசையில் நிறுத்தப்பட்டு தமக்கு விரோதமானவர்கள் நிற்கின்றனரா? எனப் பயணிகளின் முகங்களை உற்றுக் கவனித்ததன் பின் இராணுவத்தினரின்காவலரணுக்குப்பயணிகளைப்போகஅனுமதிக்கின்றனர்.

## திசைமாறும்அரசு

சரியான பாதையில்இருந்து திசைமாறிச் செல்லும் அரசிற்கு நிர்ப்பந்தங்கள் அளித்து, அதனைச் சரியான வழிக்குக் கொண்டுவர வேண்டியது மக்களின் கடமையாகும். இவ்வாறு இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான வாசுதேவ நாணயக்காரதெரிவித்துள்ளார்.

சிங்கள மக்கள் போரை வெறுப்பதற்கும் இதுவே காரணம். போரைக் கண்டு பயந்து அவர்கள் போரைவெறுக்கவில்லைஎன்றார்

## கம்பன்கழக மகரயாழ்விருது

வழமைபோல்இவ்வருடமும்இலங்கைக்கம்பன் கழகம் மக்கள் கருத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு மகரயாழ் விருதினை வழங்கி கௌரவிக்கவுள்ளது 15 ஆண்டுகளை நிறைவுசெய்யும் கம்பன் கழகம் இவ்வருடத்திலிருந்து மகரயாழ் விருதுக்கான பணமுடிப்பை ரூபா ஒருஇலட்சமாக வழங்கவுள்ளதாய் அறிவிக்கிறார்கள் அதைவிட தங்கப்பதக்கமும் வெள்ளியிலான மகரயாழ் விருதும்வழங்கப்படும்.

தரம் சார்ந்த துறையூடு தியாக உணர்ச்சியோடும் இனப்பற்றோடும் மனிதாபிமானத்தோடும் எம் மண்ணுக்காகத் தொண்டாற்றி எமது இளைய தலைமுறைக்கு முன்னுதாரணமாக வாழ்ந்து கொண்டிருக்கும் ஒருவரையே இவ் விருதுக்காகத் தேர்ந்தெடுப்பது இக்கழகத்தின் மரபு.

1993ம்ஆண்டுக்கான விருதைவைத்தியகலாநிதி ச.சிவகுமாரன் அவர்களும், 1994க்கான விருதினை அமரர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அ.துரைராசா அவர்களும் பெற்றமைகுறிப்பிடத்தகுந்தது.

## 507 இலங்கை அகதிகள் தலைமன்னார் வந்தனர்

இராமேஸ்வரத்திலிருந்து இராமானுஜம் கப்பல் மூலம் இலங்கைக்கு சுமார் 507 தமிழ் அகதிகள் தலைமன்னாருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.இதுவரை இரண்டாயிரத்துக்கும் அதிகமானோர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் மேலும் எதிர்வரும் 15ம் திகதிக்கு முன் மேலும் 2000பேர் அனுப்பிவைக்கப்படுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

## மட்டக்களப்பில்தேடுதல்.

மட்டக்களப்பில் இலங்கை இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கையை மேலும் தீவிரப்படுத்தியுள்ளனர் இத்தேடுதல்கள் வாழைச்சேனைப் பகுதியிலும் மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளிலும் அடிக்கடி இடம்பெறுகிறது. கைது செய்யப்படுவது குறைவாயினும் தாக்குதல்களும் துன்புறுத்தல்களும் அதிகமாயிருக்கிறது.கடந்த சில தினங்களில் மாமாங்கம் புன்னைச்சோலை புளியந்தீவுப் பகுதிகளில் இராணுவத்தினரும் பொலிசாரும் பலதடவைகள் சோதனை நடவடிக்கைகளில்ஈடுபட்டனர்.

## அமெ. வானொலி நிலைய வாகனங்கள்மீதுகல்வீச்சு

அமெரிக்க வானொலி அஞ்சல் நிலையம் அமைந்துள்ள இரணவிலவில் அவ்வானொலி அஞ்சல் நிலையத்துக்குச் சொந்தமான வாகனங்களுக்கு கல்வீச்சு நிகழ்த்தப்பட்டதாய் அறியப்படுகிறது. மேற்படி நிறுவனத்துக்குச் சொந்தமான 9 வாகனங்களும் கல்வீச்சுக்கு உள்ளாகியிருப்பதாய் அமெரிக்க செய்தி நிறுவனம் செய்திவெளியிட்டுள்ளது.

அண்மைக்காலமாய் மேற்படி அஞ்சல் நிலையத்துக்கு எதிராக மக்கள் கிளர்ந் தெழுந்ததும் அவ்வஞ்சல் நிலையத்தின் பணிப்பாளர்கள் தாக்கப்பட்டதும் வாசகர்கள் அறிந்ததே. இந்நிலையில் இக்கல்வீச்சுச் சம்பவம் அந்நிலையத்திற்கான இருப்பினைஇல்லாமற்செய்யாதாயினும் எதிர்ப்பைக்காட்டுவதாய்அமைந்துள்ளது.

# சுதந்திரத்தைத்தேடி



பூத்துக் குலுங்கும் நெல் வயலும், பசுமை நிறைந்த பனை மரங்களும், பார்ப்பவர் மனங்கவரும் கடலும், கடலுடன் சேர்ந்த கண்ணகி அம்மன் கோவிலும், தம்மையே அறியாது தம் மனங்களைப் பறிகொடுக்கும் பக்தர் கூட்டமுந்தான் அவ்வூரின் சிறப்பு. அப்படி எல்லோரையும் தன்வசம் இழுக்கும் அந்த ஊர்தான் உதயராணியின்ஊர்.அது...புங்குடுதீவு.

17.01.1966 அன்று செல்லையா, உருத்திராதேவியர் தம்பதிக்குப் புத்தம் புது மலராக வந்துதித்தாள் உதயராணி.அவர்களின்மூன்றாவது மகளான இவள் தனது தொடக்கக் கல்வியைப் புங்குடுதீவுப் பாடசாலையிலும் உயர்தரக் கல்வியைக் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் பயின்றாள். தனது மேற்படிப்பைப் பட்டப்படிப்புக்கள் கல்லூரியில் கற்றுக்கொண்டிருக்கும்போதுதான்அந்த எண்ணம் தோன்றியது. நீண்டகாலமாக நீறுபூத்த நெருப்பாக அவள் உள்ளத்தினுள்ளேயே இருந்த எண்ணம் அவள் தன் படிப்பை முடித்ததும்நிறைவேறியது.

தாய்போல் நேசித்த தாய் மண்ணை அந்நியனிடம்இனியும்விடமுடியாது என்றெண்ணியவள், புறப்பட்டாள் புலியாக; இனி அவள் கிளி அல்ல; புலியே.

படிப்பிலே படு சுட்டியாக இருந்த இவள், விளையாட்டிலும் துடியாட்டமாகவே இருந்தாள். குண்டெறிதல், தட்டெறிதல் சான்றிதழ்கள் எல்லாமே இவளின் கைக்கே வரும். அதுபோலவேபயிற்சிப்பாசறையிலும் சூட்டிகையாகவேஇருந்தாள்.

ஒரு நாள் காலை. பாசறை மைதானத்திலே ஓடிக்கொண்டிருந்த அவளுக்கும் தோழிக்குமிடையே ஒரு உரையாடல்,

"எடி விஜயா! ஓடக் களைக்குது. இந்தமுறை நிண்டுவிட்டு, அடுத்த றண்ணோடைஓடுவமே?"

"என்னடி நீ என்ன சின்னப் பிள்ளையோ? அக்காமார் ஆரும் உன்னை வீடு தேடிவந்து, இயக்கத்துக்குவாஎண்டுகூப்பிட்டதோ?"

என்று தொடங்கி, இயக்கத்தையும் பயிற்சி எடுப்பதன் முதன்மைத்துவத்தையும் பற்றி ஓடிக்கொண்டிருக்கும்போதே ஒரு குட்டிப்பிரசங்கம் செய்துவிட்டாள். இதைக் கேட்ட தோழி மறுபேச்சுப் பேசாமல் ஓடினாள்.

இப்படி எதையுமே யோசித்து முடிவெடுக்கும் இயல்பைக்கொண்டவள்அவள்.

அன்றொரு நாள் தன் அறைத் தோழி ஒருத்தியிடம் அன்றைய வகுப்பில் பயிற்சியாசிரியர் கற்பித்ததைப்பற்றிக் கதைத்து அலசிக்கொண்டிருந்த போது ஒரு விசில்சத்தம்.எல்லோரும் விழுந்தடித்துக்கொண்டு வரிசையாக நின்றார்கள். உடனேயே வரா விட்டால், தண்டனையில் ஓடுபாதையில்ஓடவேண்டுமே!

அணியின்முன்வந்த பயிற்சிஆசிரியர், "எல்லோரும் சமையலறைக்குப் போங்கோ. எல்லோருக்கும் புண்ணாக்குத்தரப்போறன்".

என்றார். விஜயாவின் அறைத்தோழி விஜயாவைப் பார்த்து, "என்னடி? எங்களைப் பார்க்க ஆடு, மாடு மாதிரியே கிடக்குது? புண்ணாக்குத் தரப்போகினமாம்".

என்றாள். அதற்கு அவள், "நீ ஏன் இப்படிஅவசரப்பட்டுக்கண்டதையும் நினைச்சுக் கஸ்ரப்படுறாய்? ஏதாவது எங்களுக்குத் தெரியாதசாப்பாடாகவும் இருக்கலாமெல்லோடி? இப்படியெல்லாம் நினைக்காமல் வரிசைக்கு வா. உன்ரை கேள்விக்கு அங்க பதில் கிடைக்கும்"

என்றாள். அங்கே சென்றவுடன் உண்மை நிலை புரிந்துவிட்டது. புண்ணாக்கு எனப்படும் எள்ளினால் ஆன உணவு தரப்பட்டது. விஜயாவைப் பார்த்து அசட்டுச் சிரிப்புடன் தலையாட்டினாள்தோழி.

இப்படிச் சிரிப்பும் பயிற்சியுமாக நாட்கள் கழிந்து கொண்டிருந்த போதுதான், கோட்டை க்குச் செல்வதற்காக அழைப்பு வந்திருப்ப தாகஎமக்கு அறிவிக்கப்பட்டது. இரவு பகலாக அங்கே கோட்டை வாசலையே நோக்கியபடி ஏந்திய துப்பாக்கிகளுடன் காவல் நின்ற எம் மூத்த சகோதரிகளுக்குத் துணையாக நாமும் அங்கே சென்றோம். எமக்குத் தரப்பட்ட வேலைகள் பதுங்குகுழி வெட்டுவது, காப்பகழிகளை அமைப்பதுஎன்பனவேயாகும்.

அங்கே எனக்கு அடுத்த குழுவினருடன் நின்ற இவளுக்கு, இடையிடையே என்னையும் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும். அப்படி ஒரு நாள் சந்திக்கும் போதுதான்நான்கேட்டேன்:

"என்னடி விஜயா? அடிபாட்டுக்கு எண்டு கூட்டிவந்து, இஞ்சை என்ன மண்வெட்டியோடையும் பிக்கானோடையுமோ அடிபாடு நடத்திறது?" இந்தக் கேள்விக்கு அவள் தந்த பதிலை இன்று நான் மட்டுமல்ல, அன்று எம்மோடு நின்ற இன்னும் பலரும் கூட ஞாபகத்தில் வைத்திருக்கின்றார்கள்.

"சுவர் இருந்தால்தான் சித்திரம் கீறலாம். அத்திவாரம் ஒழுங்காக இருந்தால்தான் கட்டிடம் பலப்பாநிக்கும்"என்றாள்.

உடனே நான், "சுவர் மறைவு இருந்தால் மணியா அடிபடலாம்" என்றேன்.என்பதிலைக்கேட்டுஅவள் மகிழ்வுடன் சிரித்தாள். இப்படிச் சின்னச் சின்னச் சிரிப்புகளுடனும் வேலைகளுடனும் நாட்கள் போய்க்

**கப்டன் பூமகள் / விஜயா**



**உதயராணி செல்லையா**

புங்குடுதீவு

பிறப்பு:- 1966-01-17

வீரச்சாவு:- 1993-11-11

கொண்டிருந்தபோது, திரும்பவும் பயிற்சிப் பாசறைக்குச் செல்வதற்காக அழைப்பு வந்தது. மீண்டும் அங்கே சென்று பயிற்சியைத் தொடர்ந்தோம். பயிற்சிமுடிவுக்குவந்துவிட்டது.

ஒவ்வொருவரும்ஒவ்வொருதுறைக்குப் பிரிக்கப்பட்டனர். அப்போது விஜயாவின் பெயர் மருத்துவப் பிரிவில் வந்துவிட்டது. இதை அறிந்த விஜயாவின் முகம் போன போக்கை வார்த்தைகளால் சொல்ல முடியாது. விஜயாவின் முகம் மாறியதை அறிந்த எங்களின் பயிற்சி ஆசிரியர் கப்டன் திலகா விஜயாவைக் கூப்பிட்டு,

"என்ன விஜயா? ஒரு உயிரைக் காப்பாற்ற உங்களுக்கு விருப்பமில்லையோ? இயக்கத்தில் இதுவும் வேலைதான். இதுவும் சண்டை பிடிப்பதுபோலமுக்கியமானதுதான்" என்றார்.

கனவு நினைவெல்லாம் சண்டையைப் பற்றியே எண்ணிக்கொண்டிருந்தவளின் எண்ணத்தில் மண் விழுந்தது. அவள் இதயத்திலே சிறு புயல் வீசி ஓய்ந்தது. ஆனாலும் சமாளித்துக்கொண்டு,

"செய்கிறேன் அக்கா"என்றாள்.

அன்றுமுதல் அவள் மருத்துவப் போராளிகளுக்குரிய பயிற்சிக்குத் தன்னை உட்படுத்தினாள். மூன்று மாதகாலம் இடைவிடாத படிப்பில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியவள் நல்ல மதிப்பெண்களைப் பெற்றது மட்டுமல்ல, நல்ல மதிப்பையுமேபெற்றிருந்தாள்.

சிறந்த ஓர் மருத்துவப்போராளியாக வெளியேறினாள். எந்த ஒரு பிரிவானாலும் அதிலே முழுமையான அறிவைப் பெற்றிருக்கவேண்டுமெனப் பேரவா கொண்டவள் அவள். அவளின் எண்ணம் அப்போது நிறைவு செய்யப்படமுடியாதுபோனாலும், தற்போதைய மருத்துவப் போராளிகள் முழுமையான ஓர் பூரண அறிவைப் பெற்றிருக்கின்றார்கள். செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அவளது அன்றைய எண்ணம் இன்றைய போராளிகளால் நிறைவு செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

"எந்தத் துறையானாலும் எந்தப் பிரிவானாலும் அதில் ஆண்–பெண் என்ற பேதம் கூடாது" என்ற கொள்கையுடையவள் அவள். "எல்லோருமே விடுதலைப் புலிகள்" என்று சொல்பவள்.

நீண்ட காலமாக கனவு கண்டதைப் போல் அன்று அவளைஅழைத்து,

"நீ 'குறாப்புக்குப்' போகவேண்டுமெண்டு நிக்கிறாய். சரி நீ இண்டையிலிருந்து குறாப்போடை போய் நில். உன்ரை மெடிக்ஸ் சாமான்கள் எல்லாத்தையும் பொறுப்பாளரிட்டை ஒப்படைச்சிட்டு வா. நான் றைபிள் தாறன்"என்றார்தளபதி.

அவளின் சந்தோசத்திற்கு அளவே இல்லை. காணுகின்ற எல்லோரிடமும் தான் சண்டைக்குப் போகப் போகிற விடயத்தையே சொல்லிக்கொண்டிருந்தாள்.

அவளின் முதலாவது அடிபாடு கட்டைக்காடு ஆயுதக்கிடங்கு எம்மால் கைப்பற்றப்பட்ட அடிபாடுதான். இவ்வளவு நாளும்கூட அவள் எத்தனையோ சண்டைகளில் பங்குபற்றியி ருக்கிறாள். ஆ.க.வெ தாக்குதல், மின்னல் போன்ற மிக முக்கியமான தாக்குதல்களில் அவள் மருத்துவப் போராளியாகக் களம் கண்டவள். இப்போதுதான் இராணுவத்தோடு நேரடியாக மோதினாள். இதுதான் அவள் அன்றும் இன்றும் களம் செல்வதில் உள்ள வித்தியாசம். பலாலி 15 மைல் நீளமான காவலரண்கள், அப்படியே தொடர்ந்து அளவெட்டி, மண்கிண்டிமலை, புலோப்பளை எனப் பல சண்டைகளுக்குச் சென்று வந்தாள். பூநகரி அடிபாட்டுக்கான பயிற்சியில் ஈடுபட்ட போராளிகளுடன் தன்னையும் இணைத்துக்கொண்டாள். அப்போதுதான் அவள் என்னைச் சந்தித்தாள்.

"எப்படிப் போகுது? முகம் ஒரு மாதிரி இருக்குது. என்ன ஏதும் வருத்தமோ?"நான்கேட்டேன்.

"வருத்தமோ? அப்படியொண்டும் இல்லை. இருந்தாப் போலை அம்மான்ரை யோசினை வந்திட்டுது. அதுதான் இந்தச் சண்டை முடிய ஒருக்காப் போய் எல்லோரையும் பாத்துவிட்டுவரவேணும்"என்றாள்.

அதற்கு நான் "என்னடி 'லீவில' வீட்டை விட்டாலும், வரச் சொன்ன நேரத்துக்கு முந்தியே வந்திடுவாய். இப்ப என்னடாவெண்டால் லீவு கேக்கப்போகிறன் எண்டிறாய். என்ன சொல்ல வேணும்? ஏதேனும் சொல்லுறதெண்டால் என்னட்டைச் சொல்லன். நான்போய்ச்சொல்லி விடுறன்"என்றேன்.

"நல்லா இருக்கடி நீ சொல்லிறது. நீ வீட்டுக்குப் போக, உன்னை அம்மா பிடிச்சு வைச்சுக் கொண்டு 'எங்க என்ரை பிள்ளை நிக்கிறாள்? நானும் போய்ப் பாக்கப் போறன்" எண்டு சொல்ல, நீதான் வீணாக் கஸ்ரப்படுவாய். அது இருக்கட்டும். எல்லாம் சண்டை முடியத்தான். உன்ரை வேலை எல்லாம் எப்படி?"என்று என்னைக்கேட்டாள்.

"எல்லாம்நல்லம்"

எனச்சிரித்துவிட்டு,அவளின்வீட்டுக் கதையைக் கேட்க வாயைத் திறந்தேன்.

"அதை இப்ப விடு எண்டெல்லோ சொன்னனான்" என்று கூறிவிட்டு, பயிற்சி வாழ்க்கையைச் சொல்லிச் (பூநகரிச் சமருக்கான பயிற்சி) சிரிக்கின்றாள். பழையவைகளைப் பேசிக்கொண்டிருக்கும் போது "லைன் அப்" என அறிவிக்கப்பட்டது. பறந்துவிட்டாள்.

பின்பு அவளை, சண்டை தொடங்கப்போகின்றகடைசிநேரம்சந்தித்தேன். என்னைப் பார்த்துச் சிரித்துவிட்டு, "இதுதான் கடைசி அடிபாடோ, என்னவோ?"என்றுகூறினாள்.

"என்ரை கடைசி மூச்சுவரையும் சண்டை பிடிப்பன். காயப்பட்டிட்டன் எண்டு பின்னுக்கு வரமாட்டன். ஆமி முழுவதும் செத்திட்டான், முகாம் எங்களிடம் எண்டால்தான் நான் வருவன். அப்படி நான் காயப்பட்டாலும் என்னோடை இறங்கிற மருத்துவப் போராளியிட்டை மருந்து கட்டிக்கொண்டு நிண்டு அடிபடுவன். சண்டை முடிய வீடியோக் கொப்பியைப் பாரன், நான் என்னமாதிரி அடிபட்டனான்எண்டு. வீடியோ எடுக்கிற போராளி என்னை எப்படி எடுக்கிறாஎண்டுபாரன்"என்று சொல்லிப்போனவள்போனவள்தான்.

பூநகரித் தளத்தின் பெரும் பகுதி எம்மிடம் வீழ்ந்தது என்ற வெற்றிச் செய்தியுடன், விஜயாவின் வீர்சாவுச் செய்தியும் கலந்து வந்து எம்காதுகளில் மோதியது. எப்படியெல்லாம் சிரித்துக் கதைத்து, பம்பலடித்துவிட்டு,இந்த மண்ணின் வீரப் புதல்வியர் வரிசையில் அவளும் ஒருத்தியாய்.... கல்லறையிலிருந்து கண் சிமிட்டும் வாசமலர்களுள் ஒன்றாய்....

விஜயா நன்றாக சண்டை பிடித்தாளாம். உயிருள்ளவரை விடாது சண்டை பிடித்தாளாம். அவளுடன் நின்று சண்டை பிடித்த போராளிகள் பின்னர்இவ்வாறுசொன்னார்கள்.

"தமிழீழம் வரும்வரை போராடவேணும். இடையில எந்தக் கஸ்ரம் வந்தாலும் தமிழீழத்தை மறக்கக்கூடாது"

என்று அடிக்கடி அவள் வாயிலிருந்து கேட்ட நாம், இன்று அவளின் நினைவுடன் நேரான பாதையில்....

-யோகா-



# உளத்தில்..

## களத்தில் உளம்

# இலக்கு நோக்கிய இலக்கியம்

**நாயன்மார்கட்டு சிவகுமாரன்**

*அந்தப் போர்....*

நிலங்களைப் பறித்ததால் வந்த போர்.

உரிமைகள் மறுக்கப்பட்டதால் விழைந்த போர்.

நான் பாரதப் போரைச் சொல்கிறேன்...

கெஞ்சிக் கேட்டார்கள், ஆணவக்காரர்களோ மிஞ்சினார்கள்.

***"அரைமுழம் நிலம்தானுங் கொடுக்கேன்"*** என்று அகங்காரத்தில் ஓலித்ததால் ஆயிரக்கணக்கானோர் அழிந்த போர்.

உரியதைக் கொடுத்திருப்பின், இருபகுதியினரும் சந்தோசமாக, நல்ல அயலவர்களாக வாழ்ந்திருக் கலாமே!

கண்ணன் கேட்ட சமஸ்டிக்கும் சலாம் போடப்பட்டது.

தருமன் கேட்ட பிரதேச சுயாட்சியும், பிரயோசனம் இன்றிப் போனது.

பாதி நாடு கேட்டு, பாதி ஊர் கேட்டு, அட பாதி வீடு கேட்டும் கொடேன் என்று இறுமாந்ததன் விழைவு.....?

அந்தப்போர்...

அகிம்சைதானே ஆரம்பவழியாக இருந் தது. அணுகிப் பார்த்தார்கள். அகங்காரம் கொண்டோர், அவர்கள் திறத்தை அறியவில்லை.

கேட்டுத்தான் பெறமுயற்சித்தார்கள் முடியவில்லை.

ஆண்டு ருசி கண்டவர்கள் அல்லவோ! விடுவார்களா?

கேட்டது யார்?

தருமனும் தம்பியரும்.

அட.. உன் கூடப்பிறந்தவர்கள், கூட இருப்பவர்கள், கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரக்கூடிய அயலவர்கள்.

சும்மா கேட்டானா?

உரியதைக் கேட்டான்..., உரிமையைக் கேட்டான்.

ஆண்ட பரம்பரை மீளவும் ஆள நினைப்பதில் தவறென்ன?

அண்ணன் தலைமையில் அவனுக்குரியதையும், அவன் நாட்டையும் நீ கொடுத்திருந்தால் இந்தப் போரைத் தவிர்த்திருக்கலாம்.

தம்பியர் எவ்வளவு நியாயத்தோடு கேட்கின்றார்கள் என்பதை நீ புரிந்திருந்தால், அநியாயமாய் இடம் பெற்றுப்போன, ஆயிரக்கணக்கானோர் சாவைத் தவிர்த்திருக்கலாம்.

***"தந்துவிடு, அது எனது நிலம்"*** என்று எத்தனை தூதுகளைத் தருமன் அனுப்பியிருப்பான்.

தூது போனவர்களையே தூக்கியெறிந்து பேசிய வனன்றோ நீ.

எத்தனை காலம் பொறுப்பது.

எவ்வளவு காலம் சமாதானப் பேச்சுவார்த்தைகள் என்று காலத்தைக் கடத்துவது...?

எல்லாம் எதற்காக?

இந்தப் போரைத் தவிர்க்கத்தானே?

நான் பாரதப் போரைத் பற்றிப் பேசுகிறேன்.

சமாதானம் பேசிப்பேசியே காலத்தைக் கடத்த அவர்கள் தயாராகவில்லை.

கேட்டுப் பெற முடியாததைப் போட்டுத்தானே பெறமுடியும்.

***"வரலாறே வழிகாட்டி"*** என்று சுட்டிக்காட்டப்பட்டும் அவர்கள் திரும்பிப் பார்க்க மறுத்தார்கள்.

சமாதான முயற்சிகள் பயனளிக்கவேயில்லை.

அந்தப் "பார்த்த சாரதியே" தூது போய்ப்பார்த்தான் முடியவேயில்லை.

நான் பிரபல இந்திய சமாதானத் தூதுவர் பார்த்தசாரதியை இவ்விடம் சொல்லவில்லை.

அந்தப் பரந்தாமன் பார்த்தசாரதியைச் சொல்கிறேன்.

அவர்கள் மசியவே இல்லை.

அண்ணனுக்கோ... போர் விருப்பமில்லை.

கண்ணனுக்கோ வேறு வழி தெரியவில்லை.

அகிம்சையில் பெற முடியாததை ஆயுதமூலம்தான் பெறத் துணிந்தனர்.

விழைவு!

போர்....

பெரும் போர்...

சகுனியின் கூப்பிய கரங்களுள் இருந்த பகடைக் காய்களால் விழைந்த போர்....

நீதிக்கும் அநீதிக்கும் இடையே....

தர்மத்திற்கும், அதர்மத்திற்கும் இடையே...

எதிரும் புதிருமாய்ப் பெரும்படை.

இப்பொழுது போர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

முடியவில்லை...

இரண்டு பக்கமும் பேரிழப்பு.

இழப்புக்களினூடுதானே இலக்கினை அடையலாம்...

இழப்பதற்கு ஒன்றுமில்லாததன்பின் இருந்தென்ன? இறந்தென்ன?

இருப்பவனுக்கு ஏற்படும் இழப்பே இழப்பு.

ஒரு வகையிற் பார்த்தால் இழந்தது பாண்டவர்கள் அல்ல, கௌரவர்களே.

எங்கும் மரண ஓலம்.

கையிழந்தோர், காலிழந்தோர் என்று களம் ரண களமாய் உள்ளது.

பாண்டவ சேனைகளுக்கும், கௌரவ சேனைகளு க்கும் கடும் போர்.

வெற்றி தோல்வி யாருக்கென தற்போது தெரியாது.

தருமம் வெற்றியை நிர்ணயித்துவிட்டபோதும், தருமன் இன்னமும் வெற்றியை நிர்ணயிக்காத வேளை.

சண்டை உக்கிரம்.

பெரிய பெரிய தலைவர்களை இழந்தும், களத்தில் நிலைகுலையாது நிற்கிறான் அண்ணன்.

அவனுக்குப் பின்னே ஆயிரமாயிரம் தம்பியர்.

தம் இன்னுயிரை ஈந்தும் அண்ணனைக் காப்போம் என்று பின்னே தம்பியரும், படையும் உள்ளபோது கௌரவர்களால்என்ன செய்திட முடியும்... ஆனாலும் தாக்குப்பிடிக்கின்றார்கள்.

அண்ணன் தருமன், தம்பியரில் வீமனை அறியாதவர் யார்?

அந்த வீமனுக்கு ஒரு மகன்.

பெயர்... கடோத்கஜன்...

வீமனுக்கும் இடும்பிக்கும் பிறந்தபிள்ளை.

இந்தக் கடோத்கஜனுக்கு அபார வல்லமைகள் உண்டு.

மறையக் கூடியதும், அபாரமாக விஸ்வரூபமெடுத்து வளரக் கூடியதுமான சாத்தியக்கூறுகளுடன் அபார மாகப் போராடக்கூடிய பெரும் வீரன்.

அவன் கதாயுதம் எடுத்தால் கதை காலி.

அவனும் இப்போ போர்க் களத்தில்...

குலத்தின் துயர்தீர்க்கத் தூரத்தே நிற்காது அவனும் இப்போ போர்க் களத்தில்.

சண்டை உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

எங்கும் இரத்த வெள்ளம்.

என்னதான் வீரத்தோடு போராடினாலும் இழப்புக்கள் இயல்பு தானே.

அதே போன்றே இந்தக் கடோத்கஜனும் காயப்பட்டு விட்டான்.

காயப்பட்டாலும் களம் விட்டு நீங்குதல் வீரனுக்கு அழகல்லவே.

ஆம்...

மரணம் வரினும் கடமை பெரிதென்று கடோத்கஜன் ஆவேசத்தோடு போராடுகிறான்.

அவனுக்குப் புரிகிறது.

*ஆம் "நான் சாகப் போகின்றேன். மரணம் நெருங்குகிறது. அதற்காக நான் பின்வாங்கப் போவதில்லை. சாகும் வேளையிலும் ஆயிரம் எதிரியையேனும் அழித்துவிட்டே அழிவேன்".*

ஆவேசம் வந்தவனாய் ஆக்ரோசம் ஆகின்றான்.

வானளாவ வளரத்தொடங்குகின்றான்.

*"தான் விழுகின்ற வேளையிலே, தன் உடலின் கீழ் அகப்படு வோர் நசியுண்டு இறக்கட்டும். அதுவே ஆயிரம் ஆயிரம் பேரை அழிக்கட்டும்"* என்ற எண்ணத்தோடு வானளாவ வளர்கின்றான்.

வளர்ந்து கொண்டே தன் பரந்த கால்களால் எதிரிப் படையைச் சின்னாபின்னமாக்குகின்றான்.

அடிபட்ட புலி, சீறிச் சினந்து எதிரிகளைக் குதறுகிறது. மரணம் எப்போதும் வரலாம்.

எந்த நிமிடமும் வரலாம்.

அதற்கிடையில் அழிப்போரை அழிக்க வேண்டும்.

என் இனத்தைக் காக்க வேண்டும்.

அதுவே அவன் மனதில் அவன் உருவம் போல் விஸ்வருபம் எடுத்து நிற்கின்றது.

சரங்கள் அவன் மார்பைச் சன்னமாய் துளைக்கிறது.

அடிபட்ட புலி நோக்கி, கௌரவர் படை ஒருமுகமாய் தாக்குகிறது.

அந்தோ...

அந்த மாபெரும் வீரன் தளர்கிறான்.

இனி முடியாது.

விழப் போகின்றான்.

வீமன் பார்க்கின்றான்.

பெற்ற மகன் வீழப் போகின்றான்.

அந்த வேளையிலும் தன் இனம் பற்றிய அக்கறையே வீமனுக்கு.

ஒருவேளை, இவன் நம்மவர்கள் மேல் வீழ்ந்தால், நம்மவர்களே ஆயிரக்கணக்கில் அழிவார்களே!

***"அடே! மகனே! வீழப் போகின்றாயோ? வீழ்ந்த வேளையிலே நம்மவரை அழித்தவன் என்ற அவப்பெயர் உனக்கு வேண்டாம். கவனமடா மகனே."***

***"கலங்காதேஅப்பா!"*** சன்னமாய் அசரீரியாய்.... வானத்திலிருந்து மகன் குரல் கேட்கிறது. கடோத்கஜனின் உடல் மெல்லமெல்ல ஆடி அந்தக் கௌரவர் படை நோக்கிச் சரிகின்றது.

அவிழ்த்து விட்ட நெல்லிக்காய் மூட்டை போன்று கௌரவர் படை நாலாபுறமும் சிதறி ஓட, அவர்கள் மேலே கடோத்கஜன் மலையாய் சரிகிறான்.

எண்ணிறந்தோர் இறந்தார்கள்.

ஆம்... அப்பன் பார்த்து நிற்கின்றான். பெரியப்பன் பதறுகிறான். தன் இனம் நாடி தன் இனத்திற்காக தன் இன்னுயிர் பிரியும் வேளையிலும் எத்தனை எதிரிகளை அழிப்பேன் என்ற இலட்சியம் உடையவனை இலக்கியம் படைத்து நின்றது.

பெரும் மலையொன்று மண்ணுக்காக மடியும் வேளையிலும் எதிரியே உனது குறி.

இது இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகள் முன்பு தமிழ் தந்த இலக்கு நோக்கிய இலக்கியம்.

வாருங்கள்...

இன்னுமொரு மண்மீட்புக் களத்திற்கு உங்களை அழைத்து செல்கின்றேன்.

இது தமிழீழம்.

இற்றைவரை கடோத்கஜன் கட்டம் வரை எதைச் சொன்னேனோ அதைத் திரும்ப ஒருமுறை வாசியுங்கள்.

உரிமை மறுக்கப்பட்ட இன்னொரு வரலாறு உங்களுக்குத் தெரியும்.

வரலாறு திரும்பவும் தமிழர் வரலாற்றிற் புதுப்பிக்கப்பட்டது தெரியும்.

இனி...

அதே வார்த்தைகள். பாரதப் போரைச் சொல்கின்றேன் என்று, சொன்னதை ஈழப்போராட்டத்தைச் சொல்வதாய் சொல்கின்றேன் என்று வாசியுங்கள்.

புரிகிறதா?

அதே களம்.

***இது தமிழீழக் களம்.***

அந்நியப் படைகள் நடுவே தற்போது அன்னங்களும் புலிகளாக மாறிப் போராடிய நேரம்.

அப்படியானதோர் ***பெண்புலிதான் சரோஜினி.***

அந்நியப்படைகள் மண்ணை ஆக்கிரமிக்கப் புறப்பட்ட நேரம். அண்ணன் மட்டுமோ போர்க்களம் செல்வது என்று அணங்குகளும் ஆயுதந் தரித்த நேரம்.

அந்தச் சரோஜினி இப்போ களத்தில்.

எதிரிப்படைகளின் நடுவே மகளிர் படையணியொன்று ஊடுருவித் தாக்குதற்கு முனைந்து இப்போ அவர்கள் களத்தில்.

சரோஜினி சருகோடு சருகாக, இருளோடு இருளாக முன்னேறிக் கொண்டிருக்கிறாள்.

வெடித்தது பெரும் போர்.

பிரதேசமே அதிர்ந்தது.

வெடிகுண்டுகள் நடுவே, எறிகணைகள் நடுவே, எங்கள் பெண்குலம் முன்னேறிக் கொண்டிருக்கிறது.

தொடர்ச்சி 2 ஆம் பக்கம்...



# உளத்தில்.. விருந்து

# அழியுங் கலைகள்

தனிமனித நிலையிலும் சரி, சமுதாய நிலையிலும் சரி, இனரீதியாகவும் சரி, உள்ளத்தளத்திலிருந்து எழுகின்ற உந்தல்களின் வெளிப்பாடுகளையே நாம் கலைகள் என்கின்றோம் என்பது எனது தாழ்மையான கருத்தாகும்!

விருந்தோம்பற் கலை எமது சமுதாய வாழ்வின் அடித்தளமெனில் அது மிகையாது!

அயலை அணைத்தலும், உறவை இணைத்தலும் விருந்தோம்பற் கலையின் விளைவுகளெனலாம்!

பகிர்ந்து வாழும் பண்பாட்டின் பிரதிபலிப்பாகவே இக்கலையை நாம் கருதிட வேண்டும்!

இடுபவனும் மகிழ எடுப்பவனும் மகிழ, நிகழும் நிகழ்வே விருந்தெனப்படும்.

ஒரு சிறந்த கலைஞன் விருந்திட, பரந்த ரசிகன் அதனை எடுக்கிறான்! இங்கும், இடுபவனும், எடுப்பவனும் மகிழக் காண்கிறோம்!

கலைஞன், தனது உள்ளத்திற்கும் நிறைவு தந்து, ரசிகனின் உள்ளத்திற்கும் நிறைவு தரும் பொழுதுதான் கலை விசுவரூபமெடுக்கிறது! உள்ளமெனும் பரிமாணங் கடந்த பரப்பில், உணர்வலைகள் சஞ்சரிக்கின்றன!

அவ்வுணர்வலைகளை உருவாக்குவதே கலையின் பரிமாணமாகும்.

ஒருவருக்கு நாம் உணவிடும் போது, அவரது உடற்பசிக்கு மட்டுமே நாம் கொடுப்பதாக நம்முட் சிலர் கருதக்கூடும்! இது ஒரு பௌதீகச் சிந்தனை! ஆத்மார்த்த மான உறவுகள் பற்றிச் சிந்திப்பவர்கள் இக்கருத்தினை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்!

தாய் தன் கைக்குழந்தைக்கு உணவூட்டுதலிற் கூட, எமது பாசப் பிணைப்புக்களையே நாம் அனுபவித்து இருக்கிறோம்! கடந்த சில மாதங்களின் முன்னர், செய்தித்துறையைச் சேர்ந்த எனது நண்பரொருவர், தனது வலக்கையிற் காயப்பட்டுக் கட்டுப்போட ப்பட்டிருந்தார்! அவரை நான் சந்தித்தபோது என் காதோரம் மெதுவாகச் சொன்னதை, உங்களின் காதோரம் மெதுவாகச் சொல்கிறேன்! அவருக்கு மட்டும் சொல்லி விடாதீர்கள்!

**புலவர் சிவநாதன்**

"புலவர்! காயப்பட்டதில் எனக்கு ஒரு சந்தோசமும் கூட! என்மனைவி, எனக்கு ஊட்டிவிடுகிறாள்! நான் காயப்பட்டிருக்காவிட்டால், இந்தப் பாக்கியம் இந்த நாட்டிற் கிடைக்குமோ?"என்றுவிட்டு, மகிழ்ச்சியுடன் சிரித்தார். எனக்கு அவர்மீது சற்றுப் பொறாமை கூட ஏற்பட்டது!"

இங்கெல்லாம் இப்போது பெண் சமத்துவம் அதிகமாகப் பேசப்படுகிறது!

"என்னடா! இந்த மனுசன், தாயையும், தாரத்தையும் மட்டும் ஊட்டும் உருவங்களாகக் காண்கிறோமே! ஏன் ஆண்கள் மட்டும் ஊட்டக்கூடாதோ? என்று கேட்கக்கூடும்! ஊட்டலாம்! ஊட்டலாம்!ஊட்டலாம்! உண்பதற்கு வாய் தயாராக முன்னே இருக்கவேண்டுமே!

எமது தாய்மண்ணில்,

சட்டியிற் குழைத்த கறிச்சோற்றை உருட்டிக் கவளமாக்கிக் கையிற் தரும் தாயையும், அக்கவளத்தைக் கையேந்தியுண்ணும் பிள்ளை களையும் எமது குடும்பங்கள் கண்டுள்ளன. அந்தக் கவளங்களினூடாகப் பாயும் "பாசக்கதிர்களையும் அன்பலைகளையும் இவை வழிபிறக்கும் மெய்ப்பாடுகளையும், உணர்வலை களையும் அனுபவித்த வர்களுக்கே இந்தப் பரிமாறல்களின் பரிமாணங்களை, நீட்டல் மடக்கங்களை,பெருக்கல் பிரித்தல் களைப்,புரிந்து கொள்ள முடியும்.

மேசை கதிரைகளில் இருந்து, கழுத்து முடிச்சுடன் (tie) காட்சிதந்து, கத்தியாலும், முள்ளுக்கரண்டியாலும் வெட்டியுண்டு கொண்டு ஆங்கிலச் செய்தித்தாளிலும் ஆபாசக் குவியலிலும் கண் பதித்து வாழும் மனித இயந்திரங்களால், இதனைத் தெரிந்தும், புரிந்தும், உணர்ந்தும் கொள்ளமுடியாதிருக்கலாம். ஏன் இது ஓர் பட்டிக்காட்டுத்தனமாகவும் படக்கூடும்.

மண்சட்டியை விட்டுப் பாய்ந்து, உலோகத்திற்குள் வீழ்ந்து, இப்போது நுண்ணடுப்புக்குள் (Micro-oven) புகுந்து கொண்டு விட்டது நமது உணவுக் கவளம்!

இதைவிட, இப்போதெல்லாம் உணவுக் குளிகைகளையும் உணவுத்தூளையும் மிண்டி விழுங்குவதற்கும் நம்மவர்கள் ஆயத்தமாகிவிட்டார்கள்.

பழக்குளிகைகள், பழத்தூள்கள் மூலம் சத்துணவுபெற்றுச் சர்வசதா இளமையுடன் வாழ்வதாகச் சங்கதிகள் அடிபடுகின்றன. வளைந்து வேலை செய்யாமல் இருப்பவர்கள் இக்குளிகைகள் மூலம் எடையைக் குறைத்துக் கொள்ளலாமோ தெரியவில்லை. எதிர்காலத்தில் நீங்கள் விருந்துக்குப் போனால், உங்கள் கைகளில் குளிகைகளையும். குளிர்நீரையும் தந்து, "மிண்டி விழுங்கிவிட்டு, தண்ணீர் அருந்துங்கள்" என்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இப்பொழுதெல்லாம் நாம் கல்யாணச் சாப்பாட்டுக்காகக் கையிற்தட்டுடன், வரிசையில் நிற்கிறோம்.

இனிமேற் தட்டுத் தேவையில்லை! கையை விரித்து நிற்க, குளிகைகளையும், தூளையும், குளிர்நீரையும் தருவார்கள்! விஞ்ஞானம், விருந்தோம்பற்கலையை விரட்டுவது போலத் தெரிகிறது!

நாம் புலம் பெயர்ந்த நாடுகளில், அம்மாவுக்கென ஒரு கோப்பை, அப்பாவுக்கென ஒரு கோப்பை, தம்பிக்கொரு கோப்பை, அக்காவுக்கொரு கோப்பையெனக் குடும்ப அங்கத்தவர்கள் குட்டிநாடுகளாகப் பிரகடனம் செலுத்து வதை அவதானிக்கும் நிலைமை ஏற்படுகின்றது! ஒருவரது கோப்பை யையோ, குடிக்கும் குவளையையோ மாற்றி எடுத்துவிட்டால், ஒரு பெரிய சமர்க்களமேயுருவாகிவிடும்.

இதற்குரிய காரணத்தைக் கேட்டால், இது சுகாதாரப் பிரச்சினை என்பார்கள், நம்முட் சிலர்!

உண்மையான காரணம், ஒன்றுதான்! வெள்ளையர்கள் வீட்டில் இப்படித்தான் செய்கிறார்கள். இதனைக் கேள்வியுற்றும், தொலைக்காட்சி நிகழ்வுகளிற் பார்த்தும், நம்மவர்கள் கற்றுக் கொள்கிறார்கள். வெள்ளையரின் சுகாதாரத்தைப்பற்றி அவர்களுடன் பழகி, அவர்களுடன் உரையாடுபவர்களுக்கு, நன்றாகத் தெரியக் கூடும். இதனை விளங்கப்படுத்த நான் எனது விருந்தோம்பல் பற்றிய கட்டுரையை விரயமாக்க விரும்பவில்லை. மேற்கு நாட்டுச் சூழலிலிருந்து பார்க்கும்போது, நிச்சயம் நமது மரபு வழியான உறவுப்பிணைப்புக்கள் பட்டிக்காட்டுத் தன்மையாகவே தெரியமுடியும். இதைவிட நடைமுறைக்கு அப்பாற்பட்டதாகவும் தோன்றும்! தம்மைச் சுற்றிக் குட்டி வட்டங்களையிட்டுச் சமுதாய உணர்வற்ற சுயநலப் பிண்டங்களாக வளருவது, இங்கெல்லாம் சர்வசாதாரணமான நிகழ்வாகி வருகிறது. கொழும்புக் கறுவாத் தோட்ட "கறுப்பு-வெள்ளையர்" குடும்பங்களும் சரி, ஏனைய அந்நிய ஏகாதிபத்திய அடிமைவாதிகளும் சரி, எமது மரபுகளை, இழிவுபடுத்தக்கூடும்.

எனினும் மேலைத்தேய சுயநலச் சமுதாய அமைப்பினைப் புரிந்து கொண்டவர்கள், எமது மரபு வழியான உணர்வுகளை மதிப்பதற்கு நிறைய இடமுண்டு.

கூடியுண்பதும், கொடுத்துண்பதும், வந்துண்பதும், சென்றுண்பதும் தமிழரின் மரபு! நமது தாய் மண்ணில், நாம் தோழர்களாக உலவியபோதும், நமது உடன்பிறப்புக்களுடன் உறவாடியபோதும் பறித்துக் கடித்துண்ணும் பழக்கம் நம்மிடையே நிறைந்து காணப்பட்டுள்ளது. நம்மைச் சுற்றியுள்ள ஒருவரின் முகம் வாடிவிட்டாலும் அவரை நலன் விசாரித்து, அவருக்கு உறுதியூட்டி, "தண்ணி குடி, சாப்பிடு" என்று அவருக்கு அன்புகாட்டியிருக்கிறோம்.

இல்லத்திற்கு வருவோர்க்கு இன்முகம் காட்டி, உள்ளேயிருப்பதை அவருடன் பகிர்ந்து பேருவகையடைந்திருக்கிறோம். இலைக்கறியுடன் சோறாயினும், அதனை இறவா மருந்தாக எண்ணி ஏற்று உண்டு சென்றிருக்கிறோம். நள்ளிரவில் வந்தாரையும் நலம் விசாரித்து அவரது களைப்பும் இளைப்பும் நீங்க வைத்தல், நம்முடன் ஒட்டிக்கிடந்த பண்பு!

கூடுமின்!கூடுமின்! என்று கொண்டாடியவர் நம்முன்னோர்!

"கூடுதல்" உளவியல் சார்ந்த ஒரு மருத்துவமாகவும் கருதப்படலாம். இதுபற்றி அடுத்தடுத்த இதழ்களில் எழுதுவேன். பண்டிகைகள், சடங்குகள், விழாக்கள் இவற்றின் பின்னணிகளைப் பின்னர் எழுதுவேன். இங்கிலாந்தில் வாழும் தமிழர்கள் பலரிடம், விருந்தோம்பற் கலை மிகவும் அருகி வருவது கண்கூடு! இதற்குப் பல காரணங்கள் பகரப்படுகின்றன.

"அவைக்கென்ன ஊரிலை! வேறை வேலை வெட்டி இருக்கே! "அவிச்சுப்" போடுவினம். நாங்கள் இஞ்சை உழைக்கிற னாங்கள். எங்களுக்கு வேலைக்குப் போய்வர நேரஞ்சரி".

"இஞ்சை "மணப்பிரச்சினை" (திருமணப் பிரச்சினையல்ல! சமையல் மணப்பிரச்சினை) இருக்குது. எங்க ளிண்டை கறியள் மணக்கும். உடுப்பு நாறும். பேந்து.... வேலையிலை பிரச்சினை. எல்லாரும் ஒரு மாதிரியாப் பாப்பினம். மூக்கைச் சுளிப்பினம். சீ...யெண்டு போகும். ஊரிலையெண்டால்.... ஊர்முழுக்க மணத்தாலும் ஒருத்தரும் ஒண்டும் சொல்லாயினம்".

இந்தக் காரணங்களில் நியாயமில்லையென நான் வாதாடவில்லை. எனினும் வேலை வெட்டியில்லாததாற்தான் எமது மக்கள் "அவிச்சுக்" கொட்டினார்களென்பதும் எங்களுடைய கறிகள்தான் மணக்கின்றன என்பதும், எமது விருந்தோம்பற்கலையைக் குறைப்பதற்கு முழுமையான காரணங்களாக இருப்பதாக நான் கருதவில்லை. இன்றெல்லாம், எமது கீழைத்தேயக் கறிவகைகளை விரும்பியுண்பவர்கள் வெள்ளையர்களே!

"ஒரு மாதிரியாப் பார்க்கும்" வெள்ளையரும், ஓசியாகக் கொண்டுபோய் நாம் கொடுத்தால் உறிஞ்சி உறிஞ்சியடிப்பார்கள். பலரின் அனுபவத்திற் கண்ட உண்மை!

மீனும் உருளைக்கிழங்குப் பொரியலும் ஏனைய இன உணவுவகைகளும் சுமாராக மணக்கவல்லன.

மணக்காத உணவு, சுவைக்கவும் மாட்டாது!

இதைவிட, கறி சமைக்காமலேயே, சில வெள்ளையர்கள் அருகில் இருக்கமுடியாது.

நீங்களும், ஓரிருமுறை, இங்கிதம் குறையாமல், மூக்கைச் சுளித்தால், அவர்களும் நிலைமையைப் புரிந்து கொள்ள வசதியாயிருக்கும்.

சமையற்கலையையும் விருந்தோம்பற் கலையையும் "அவிச்சுக்" கொட்டும் காரியமாக நாம் கருதுவது மிகவும் தவறான கண்ணோட்டமாகும்! "பத்துக்கறி களுடன் பரிமாறுவதல்ல" விருந்தோம்பற் கலையின் வரைவிலக்கணம்!

தொடரும்...

## பேச்சுவார்த்தையில்...

காட்டுவதாக உள்ளது. அதேசமயம் இராணுவத்திற்குப் புதிய ஆட்களைச் சேர்ப்பதற்கானமுயற்சியிலும்ஈடுபட்டுள்ளது. இதற்கு ஏதுவாகவே அரசின் நடவடிக்கைகளும் உள்ளன. சமாதானம் பற்றிபேசிக் கொண்டே கடந்தஆண்டை விட கூடுதல் நிதியை இராணுவத்திற்கு ஒதுக்கியுள்ளதோடு, பாதுகாப்பு உயர்பீடத்தில் களை எடுப்புக்களை மேற்கொண்டாலும், போரிடும் ஆற்றல் மிக்க இராணுவம் ஒன்றை சனாதிபதி சந்திரிகா உருவாக்க முற்படுவதாகவுமே அனுமானிக்க முடிகின்றது.

# அறப்போர் தொடுத்த

விடுதலைப்புலிகளின் விருப்பத்திற்குமாறாக இலங்கை–இந்தியஒப்பந்தம்கைச்சாத்தாகின்றது.
இந்திய வல்லாதிக்கப்படைகள் தமிழீழப் பிரதேசத்தை ஆக்கிரமித்துக்கொள்கின்றன. தமிழீழ மக்களும் உண்மையின் சூத்திரத்தைஉணர்ந்துகொள்ளாது,இந்திய ஆக்கிரமிப்புப்படையைக்கையசைத்துவரவேற்றனர்.
தமிழ் மக்களின் பாதுகாவலர்கள் வந்துவிட்டார்கள் என எண்ணிமகிழ்ந்தனர்.
"சிங்களப்படை இனிமேல் எம்மை எதுவும் செய்துவிடமுடியாது."
சிறீலங்கா அதிரடிப்படையினரின் கொலைக்களத்தில் சிக்கித், தங்கள் பிள்ளைகளை இழந்த பெற்றோர்களின் எதிர்பார்ப்பு.
அன்னைபூபதியும் அப்படித்தான் நம்பினாள்.தனது இரண்டு பிள்ளைகளைச் சிங்களப்படை, இரத்தவேட்டைக்கு இரையாக்கியதை நினைத்து, "இனிமேல் இந்த அதிரடிப்படை வெளிக்கிடட்டும் பார்ப்பம்." அன்னையின் ஆவேசம் கவர்ந்த வார்த்தைகள். 1987 அக்டோபர் 10 ஆம் நாள் இந்திய இராணுவத்தின் வல்லாதிக்க அடக்குமுறை, தமிழீழ மக்கள்மீது கட்டவிழ்த்துவிட்ட நாள். ஈழத்தமிழினத்தின் விடிவுக்கென வெளுத்தவானம், மீண்டும்கருமேகங்களால்சூழ்ந்துகொண்டநாள்.

## இந்தியப் போர் வெடித்து, தென்தமிழீழம்வரை பரவுகின்றது.

தென்தமிழீழத்தின் தெருவோரம் எங்கும் தமிழனின் பிணங்கள், இரத்த வெள்ளத்தில் மிதந்த நாட்கள். சிங்கள சிறீலங்கா இராணுவம் புரிந்துவந்த மனிதப்படுகொலைகளுக்கு மகுடம் சூட்டுவதுபோல், இந்தியப்படுகொலைகளாலும்,பாலியல் வன்முறைகளாலும்

**சி.கரிகாலன்**
துணைப்பொறுப்பாளர்
அரசியற்றுறை
தமிழீழ விடுதலைப் புலிகள்

மட்டுநகர் வீதிகள் மலிந்த நாட்கள். இவ்வேளையில்தான் `அன்னைபூபதி` ஆவேசத்தோடு அன்னையர் முன்னணியினரை அணிவகுத்து, அகிம்சைப்போரைத் தொடங்கினாள்.

## இந்திய இராணுவத்தின் கிராமியப்படுகொலைகள்

22.10.1987அன்றுகாலை10மணியிருக்கும்.
இந்தியக் கொலைவெறிப்படையின் கனரக வாகனங்கள் கதறிக்கொண்டு, மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் கிராமத்துக்குள் நுழைகின்றன. ஆயிரக்கணக்கான இந்தியப் படைகளால் சத்துருக்கொண்டான் கிராமம் சுற்றிவளைக்கப்படுகின்றது.
ஓலைக் குடிசைக்குள்ளே சொந்தத் தொழில்செய்து, சீவனம்செய்யும் அப்பாவிப் பொதுமக்கள் எதுவுமே தெரியாது திகைத்து நிற்கின்றனர். கொலைவெறிக் கூர்க்காப்படையினர் ஓலைக்குடிசைகளைத் தீவைத்துக்கொளுத்தினர்.உயிரைக் காப்பாற்றஓடித்தப்பிய உடன்பிறப்புக்கள் உயிரோடு கொளுத்தப்பட்டனர்.மானமே பெரிது என்று வாழ்ந்த கிராமத்துப் பெண்கள், துடிக்கத் துடிக்க ஆடு,மாடுகள்போல் அறுத்தெறியப்பட்டனர்.
அவர்கள் அன்றுஎழுப்பிய அவலஓலங்கள் இன்னும்ஓயாது தொடர்ந்து ஒலித்துக்கொண்டே இருக்கின்றன. இந்தியப் படையினர் இக்கிராமத்தைத் துவம்சம் செய்துவிட்டு, அயற்கிராமத்துக்கும்தொடர்ந்தனர்.
தன்னாமுனையிலே கிறிஸ்தவ பாதிரிமாரால் நடாத்தப்படும் வயதுவந்த பெண்பிள்ளைகளைப் பராமரிக்கும் நிலையத்துக்குள் இந்தியப்படை புகுந்தது. பாதிரிமார் என்பதால், உடைகளைப் பார்த்ததும் தங்களை இந்திய அமைதிப்படை எதுவும் செய்யமாட்டாது என்றநம்பிக்கையில் பிள்ளைகளை அறைக்குள் நிறுத்திவிட்டு, பாதிரிமார் வாசலில் காவல் நின்றனர். காமவெறி பிடித்த இந்தியச் சிப்பாய்களுக்கு துறவிகளைமதிக்கும்பக்குவம்இருக்கவில்லை.
பாதிரிமாரை இழுத்துத் தள்ளிவிட்டு, உள்ளேபுகுந்த கொலைப்படையினர், அநாதரவாகி அபயம்தேடி நின்ற இளம்பெண்களை ஓடித்தப்பமுடியாது, அறைக்குள் பூட்டிவைத்து மிருகத்தனமான முறையில் பாலியல் வன்முறைக்குஉட்படுத்தினர்.
அந்தப் பராமரிப்பு நிலையத்தில் இருந்த பெண்கள் சிலர், தங்களது குழந்தைகளையும் இழுத்துக்கொண்டு, கடற்கரை வழியாக மட்டக்களப்பை நோக்கி ஓட்டம் எடுத்தனர். கருவேப்பங்கேணி, இருதயபுரம், முகத்துவாரம் ஆகிய கிராமங்களில் அகதிகளாக ஓடிச்சென்று தங்களுக்கு ஏற்பட்ட அவலத்தை எடுத்துக்கூறினர். மக்கள் ஒன்று சேர்ந்தனர். உதவிகள்புரிந்தனர்.ஆறுதல்கூறினர்.அன்னையர்கள் உள்ளம் குமுறினர். இந்தியப்படையின் அமைதிப்போர்வையில் நம்பிக்கைஇழந்தனர்.
இதேசமயம் ஆயிரக்கணக்கில் இந்தியப்படையினர் மட்டக்களப்பு நகருக்குக் கொண்டுவந்து குவிக்கப்பட்டனர். மூலைக்கு மூலை முகாம்கள் போடப்பட்டன. வீதி வீதியாகக் கொலைவெறிகொண்டுஅலைந்தனர்கூர்க்காப்படையினர்.

## களுவாஞ்சிக்குடியில் மற்றுமோர் ரணகளம்

சந்துருக்கொண்டான் படுகொலைக் களத்தின் இரத்தவாடை மறைய முன்னர், மற்றுமோர் படுகொலைக்களம் களுவாஞ்சிக்குடியில்இடம்பெற்றது.
23.11.1987 களுவாஞ்சிக்குடி பிள்ளையார் கோவிலுக்குமுன், இந்தியப்படையினர் குவிக்கப்பட்டனர்.பாடசாலைக்குள் பாடம் படிப்பித்துக்கொண்டிருந்த ஆசிரியர்கள் இழுத்துவரப்பட்டுச் சுட்டுக்கொல்லப்பட்டனர்.
ஓர் ஆசிரியையைத் தலைமுடியில் பிடித்து இழுக்கின்றான் ஓர் இந்தியச் சிப்பாய். முடி கையோடு வந்துவிடுகின்றது. "ஆ பொய் முடி. நீ புலி" எனக் கத்துகிறான் இந்தியன். அவ்விடத்திலேயே அந்தஆசிரியைசுட்டுக்கொல்லப்படுகின்றார்.
பாவம்அந்தஅப்பாவிஆசிரியை.தன் படிப்புத்தொடங்குவதற்கு வீட்டிலே வசதி இல்லாத நிலையில், நெல் குற்றும் ஆலையில் அவள் வேலை செய்துவந்தாள், அப்பொழுது பொறியினுள் தலைமயிர் புகுந்ததால், அவளது முடிகள் பிடுங்கப்பட்டன. முடியில்லாத நிலையில் பொய்முடி தரித்து, ஆசிரியையாகத் தொழில்புரிந்த அந்தப் பெண்ணின் சோகவரலாறு காமவெறிகொண்ட இந்தியனுக்குஎங்கேதெரியப்போகின்றது?
வாசிகசாலைக்குள் இருந்த இளைஞர்கள் இருவர் இந்தியப்படையினரால் இழுத்துவரப்படுகின்றனர். பிள்ளையார் ஆலய மதிலிலே சுவரோடு சேர்த்து நிறுத்தப்படுகின்றனர். இராட்சதக் கவசவாகனம் அவர்களை நோக்கி விரைந்து வந்துகொண்டிருக்கின்றது.
இழுத்துவரப்பட்டதை அறிந்த ஓர் இளைஞனின் தாய் மூச்சுவாங்கஓடிவந்து இந்தியனிடம்இருந்துஓலமிடுகின்றாள். கவசவாகனத்தின் இரைச்சல் அவள் இட்ட ஓலத்தை அமுக்கிவிட்டது.
அவளின் கண்ணெதிரிலேயே அவளது பிள்ளை மதிலோடு நெரித்துக் கொல்லப்படுகின்றான். இரத்தம் பீறிட்டு, மதிற் சுவர் இடிந்துசிவப்பாகின்றது.
இந்தியப்படையினர் வீடு, வீடாகப் புகுந்து காமவேட்டையாடினர். வீடுகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. உடைமைகள் சூறையாடப்பட்டன. கடைகள் களவாடப்பட்டுக் கொளுத்தப்பட்டன. காமவேட்டையில் தன் மனைவி இழுத்துச் செல்லப்படுவதைத் தடுத்து நிறுத்தி, இந்தியனுடன் சமர்புரிந்த கணவன் அவ்விடத்திலேயே சுட்டுக்கொல்லப்படுகின்றான்.இந்தியப்படையின் கொடுமைகள் தென்தமிழீழம் முழுவதும் கோரதாண்டவம் புரியத்தொடங்கியது.பெண்கள் வீதிகளுக்குச் செல்லமுடியாது. இந்தியப்படைகளுக்கஞ்சி,வீடுகளுக்குள் அடங்கிக்கிடந்தனர். மட்டக்களப்பு நகரப்பகுதிக்குள்ளே வெள்ளைப்பாலத்தால் வீதியில் சென்றுகொண்டிருந்த இளம்பெண்கள் ஒரு கடைக்குள் இழுத்துவரப்பட்டு, பட்டப்பகலிலே பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டனர். இச்செய்தி நகரையே உலுக்கியது.மட்டக்களப்புத்தாய்மார்பதைபதைத்தனர்.
இனியும் பொறுத்திருக்கமுடியாது. இழப்புக்களைத் தாங்கமுடியாது. அன்னையர்கள் அணிதிரண்டனர். இந்தியப்படை பெண்களுக்கு இழைக்கும் அநீதிகளைக் கண்டு,அன்னையர்முன்னணியாகஅணிவகுத்தனர்.
"இந்தியப்படை உடனடியாகப் போர் நிறுத்தத்தைத் அறிவிக்கவேண்டும்."
விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தவேண்டும் எனும் கோரிக்கையை முன்வைத்து, திலீபன் காட்டிய அகிம்சைப் போரில் மாமாங்கப் பிள்ளையார் கோவில் முன்றலில் குருந்தமர நிழலில் அடையாள உண்ணாநோன்பு அனுட்டித்தனர்.
உண்ணாவிரதப் போருக்கு ஆதரவு தெரிவித்து,மட்டக்களப்பு மாவட்டத்தின் அன்னையர்கள், பாடசாலை மாணவிகள் அணி அணியாகத் திரண்டனர். மாமாங்கக் கோவில் மக்கள் வெள்ளமாய்க்கரைபுரண்டது.
இந்தியப்படைக்கெதிராக மீண்டுமோர் உண்ணாவிரதப்போர். காந்தி தேசத்தின் முகமூடியைக் கிழிக்க அன்னையர் முன்னணியினர்அலையலையாகஎழுந்தனர்.
பாரதப்படைகளுக்கெதிராக மீண்டுமோர் உண்ணாவிரதப்போர். பெண்கள் பேரலையாய்த் தென்தமிழீழத்தின் தெருவெங்கும் திரண்டு நிற்பதைக்கண்டு, மிரண்டது இந்தியப்படை. எப்படியாவது அன்னையர் முன்னணியினரின் ஆவேச நெருப்பை அணைத்துவிட ஆலோசனை நடாத்தியது அமைதிப்படை.

## சந்தைக்குள் நடைபெற்ற படுகொலை

இவ்வேளையில்தான் மட்டக்களப்பு நகருக்குள் சிங்கள சிறீலங்காப் பொலிசாரின் வெறிகொண்ட கண்மூடித்தனமான தாக்குதல்இடம்பெற்றது.
மட்டக்களப்பு நகரச்சந்தை சனக்கூட்டத்தால் நிரம்பி வழிகின்றது. மக்கள் தங்கள் அன்றாடத் தேவைக்கான பொருட்களை அச்சம் கலந்த மனோநிலையில், அவசர அவசரமாக வாங்கிக்கொண்டிருந்தார்கள். தமிழ், முசுலீம் வியாபாரிகள் சுறுசுறுப்பாக வியாபாரம் செய்துகொண்டிருந்தார்கள். அவ்வேளை சிங்களக் காவற்றுறையினர்சந்தையைதிடீரெனச்சுற்றிவளைத்தனர்.
எதுவுமே அறியாத அப்பாவிப் பொதுமக்கள் ஆண்கள், பெண்கள், தமிழர்கள், முசுலீம்கள், சிறுவர்கள், குழந்தைகள், மாணவர்கள், ஆசிரியர்கள் எனப்பேதமின்றித் தாக்கப்படுகின்றார்கள். சிங்களப் பொலிசாரின் கண்மூடித்தனமான தாக்குதல்களில் மக்களின் மண்டைகள் பிளந்தன, கை, கால்கள் முறிந்தன. எலும்புகள் நொருங்கின. பொலிசாரின் துப்பாக்கிகள் ரவைகள் கக்கின.வீதியில் பிணங்கள் குவிந்தன. வியாபாரிகள் பலர் கடைகளுக்குள் பொருட்களோடு சேர்த்துக்கொளுத்தப்பட்டனர்.
நெடுநாள் இரத்தப்பசி கிடந்த சிங்களக் காடையர்கூட்டம் தமிழ், முசுலீம்மக்களைக் கொன்று குவிப்பதை இந்திய அரக்கப்படை கண்டு களித்துக்கொண்டிருந்தது. தமிழ் மக்களின் படுகொலைக்கும் பாலியல் வன்முறைகளுக்கும் சொத்தழிவுகளுக்கும் இந்திய – சிங்கள ஆயுதப்படைகள் போட்டிபோட்டுக்கொண்டு செயற்படுவதைக்கண்டு

**19-03-1988 இல் இந்திய**
**எதிராக,இரண்டு கோரிக்க**
**மாமாங்கேஸ்வரர் கோவிலில்**
**சாகும் வரை உண்ணாவிரதத்**
**ஈகச்சாவெய்தி தியாகசீலன் தி**
**புரட்சியை,அன்னையர் வடிவில்**
**செய்த தியாக தீபம் அன்னை**
**(19-04-95)ஐ முன்னிட்டு இக்கட்டு**

# அன்னை

அன்னையர்முன்னணியினர்ஆவேசம்கொண்டனர்.

"இனிமேல் எமக்கு எந்த அரசுகளும் பாதுகாப்பு வழங்கப்போவதில்லை" இறப்புக்களால் இறுகிப்போன இதயங்களிலிருந்துவெளிப்பட்டவார்த்தைகள்இவைகள்.

சுயமரியாதையோடு தமிழினம் தலைநிமிர்ந்து வாழவேண்டுமானால், ஆட்சியாளர்களின் அதர்மத்தை அடக்கியே ஆகவேண்டும் என அன்னையர் முன்னணியினர் முடிவெடுத்தனர். அனுட்டிக்கப்பட்டுவந்த அடையாள உண்ணாவிரதம் சுழற்சிமுறைத் தொடர் உண்ணாவிரதமாக மாற்றப்பட்டது.

இந்தியாவுக்கு எதிரான பிரச்சாரம் உலகளாவிய ரீதியில் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியது. இவ்வேளையில்தான் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியின்வானொலிஅறிவிப்புவெளியாகின்றது.

"இந்திய அமைதிப்படை இலங்கைத் தமிழர்களுக்கு எதிராகப்போராடவில்லை.விடுதலைப்புலிகளுக்குஎதிராகப் போராடுகின்றது".

அன்னையர் முன்னணியினரின் அகிம்சைப் போர் மக்கள் போராட்டமாக மாறி, அது பாரத அரசுக்கெதிராக உலகச் செய்தித்தாள்கள் மூலம் ஏற்படுத்திய தாக்கத்தை மூடிமறைக்கவே இவ்வறிவிப்பு ராஜீவ் காந்தியால் விடுக்கப்பட்டது. அத்தோடு 'அன்புவழி' 'வெற்றிமாலை' 'நேசக்கரங்கள்' நிகழ்வுகளைத் தனது இராட்சத பிரச்சார சாதனங்கள் மூலம் ஒலிபரப்பிய இந்திய அரசு, தமிழ் மக்களுக்கெதிரான இந்திய இராணுவத்தின் படுகொலைகளைமூடிமறைக்கமுயன்றது.

அனைத்துலக ரீதியாக இந்திய அரசுக்கெதிராக ஏற்பட்டுள்ள அபகீர்த்திகளை அடக்கிவிட இந்திய உயரதிகாரிகள் முடிவெடுத்தனர்.

## அன்னையருடன் நடத்திய பேச்சுக்கள்

சனவரி 7 ஆம் நாள் திருமலையில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அன்னையர் முன்னணியின் நிர்வாகக் குழுவிற்கு அழைப்புவந்தது. இப்பேச்சுவார்த்தையில் இந்திய அரசுத் தரப்பில் இராணுவ உயரதிகாரி பிரிகேடியர் சண்டேஸ் கலந்துகொள்கின்றார்.

"புலிகள் ஆயுதங்களைக் கையளிக்கவேண்டும். அதன் பின்னர் பேச்சுவார்த்தை நடத்தச் சம்மதம் தெரிவிக்கவேண்டும்" என அன்னையர் முன்னணியிடம் வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது. அன்னையர்கள் தாம்கொண்ட நிலைப்பாட்டிலிருந்து அசையவில்லை. தமது கோரிக்கைகளை இந்திய அரசு ஏற்கவேண்டுமென வற்புறுத்தினர். பேச்சுவார்த்தையின் முடிவுகள் டெல்லிக்கு அனுப்பப்பட்டு, பதில் தரப்படுமென அறிவிக்கப்படுகின்றது. முடிவுகள் எதுவுமே கிடைக்கவில்லை.உண்ணாவிரதப்போர் தொடர்கின்றது.

## பெப்ரவரி 10ம் நாள், மீண்டும் பேச்சுவார்த்தை

**ஆக்கிரமிப்புப் படைகளுக்கு**
**களை முன்வைத்து,மட்டு-**
**மிழீழ மக்களின் விடிவிற்காகச்**
**மேற் கொண்டு 19-04-1988 இல்**
**ன் காண விரும்பிய மக்கள்**
**தென்தமிழீழத்தில் வெடிக்கச்**
**தியின் ஏழாவது வணக்க நாள்**
**வெளியிடப்படுகின்றது.**

அன்னையர் முன்னணியின் நிர்வாகக் குழு கொழும்பிற்கு அழைக்கப்படுகின்றது. இந்திய தூதுவர் டிக்சிட் பேச்சுவார்த்தை நடாத்துகின்றார். மீண்டும் அதே வேண்டுகோள். புலிகள் ஆயுதங்களைக் கையளித்து பேச்சுவார்த்தைக்கு முன்வரவேண்டும். நாம் அவர்களுக்கு எல்லாவித உதவிகளும் செய்யத்தயாராக இருக்கின்றோம். இதை அன்னையர் முன்னணியினர் புலிகளிடம் வற்புறுத்திக் கேட்க வேண்டும் என்ற மிரட்டலுடனான வேண்டுகோள் விடுக்கின்றார் டிக்சிட். டிக்சிட்டின் வேண்டுகோளைக் கேட்ட அன்னையர். உள்ளம் குமுறுகின்றனர். உணர்வுகளைக்கட்டுப்படுத்த முடியாது. புலிகள் எங்கள் பாதுகாவலர்கள். நீங்கள் தான் யுத்த நிறுத்தத்திற்கு அறிவிக்கவேண்டுமென துணிவுடன் பேசுகிறார்கள். இதை அவமரியாதையாகக் கருதிய டிக்சிட்டின் முகம் கருங்கிப் போகின்றது. பெண் என்பதால் பேசாமல் செல்கின்றேன் என ஆங்கிலத்தில்கூறிவிட்டுஎழுந்துசெல்கின்றார்டிக்சிட்.

## இராணுவத்தால் அன்னையர் சுற்றிவளைப்பு.

மாமாங்க ஆலயம் மக்கள் வெள்ளத்தால் நிறைந்து காணப்படுகின்றது. கொழும்புக்குப் பேச்சுவார்த்தைக்கு சென்றுள்ளார்கள், ஏதாவது ஒரு முடிவோடுதான் வருவார்கள் எனும்எதிர்பார்ப்போடுமக்கள்காத்துநிற்கின்றனர்.

டிக்சிட்டின் பேச்சுவார்த்தை முறிந்து போன செய்தி மட்டக்களப்பிற்கு அறிவிக்கப்பட்டதும், இந்திய இராணுவ கனரக வாகனங்கள் பேரிரைச்சலோடு மாமாங்க ஆலயத்தை மக்களோடு சேர்த்து சுற்றிவளைத்துக் கொள்கின்றது. அப்பகுதியில் தற்காலிக இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்படுகின்றது. கூடி நின்ற மக்கள் இடத்தை விட்டு அசையாதுகூர்ந்துகவனித்துக்கொண்டிருந்தார்கள்.

## 12,13,14ஆம்நாட்கள்

ஊரடங்குச் சட்டம் தொடர்ச்சியாகப் பிறப்பிக்கப்படுகின்றது. மக்கள் எவருமே வெளியில் நடமாடக்கூடாது என ஒலிபெருக்கியில்அறிவிக்கப்படுகின்றது.

உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு இந்திய இராணுவம் மிரட்டல்விடுக்கின்றது.உண்ணாவிரதத்தில்கலந்துகொண்ட பெண்கள், மாணவிகள் என நூற்றுக்கணக்கானோர் இருந்த இடத்தைவிட்டு நகராது, ஆலய மணல் வீதியிலேயே அமர்ந்து விட்டனர். அன்னையரும் சுற்றிவளைக்கப்பட்ட மக்களுக்காக மூன்று நாட்கள் தொடர்ந்து உண்ணாவிரதமிருந்தனர்.இந்திய இராணுவம் மேற்கொள்ளும் மிரட்டல் நடவடிக்கைகள் எதற்குமே அஞ்சாது அடிபணியாது நின்ற மக்களின் மன உறுதியைக்கண்டுஅஞ்சியதுபாரத அரசு.

வேறுவழியின்றிஊரடங்குச்சட்டம்நீக்கப்படுகின்றது.இராணுவ சுற்றிவளைப்புவேலி தளர்த்தப்படுகின்றது. உண்ணாநோன்பு தொடர்கின்றது. தங்கள் உறுதியான நடவடிக்கைகளினால் ஊரடங்கு உத்தரவு உடைத்தெறியப்பட்டதை எண்ணி மகிழ்ந்தனர்.

## 15ஆம்நாள்

அவமானத்தைத்தாங்கிச்சென்றபாரதப்படையணிஅன்னையர் முன்னணியினரின் ஆலோசகர் கிங்ஸ்லி இராசநாயகத்தின் வீட்டைச்சுற்றிவளைக்கின்றது.

ஆலோசகர்கைதுசெய்யப்படுகின்றார்.அவ்விடத்திலேயேஅவர் நையப்புடைக்கப்பட்டு பின்னர் முகாமுக்கு ஏற்றிச் செல்லப்படுகின்றார்.

அன்னையர் முன்னணியினரின் செயற்பாடுகளுக்கு எதிராக இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் அழுத்தங்கள் அதிகரிக்கப்பட்டன.

அன்னையர் முன்னணி அமைப்பின் மன உறுதியை உடைப்பதற்குப் பலவிதமான தந்திரோபாயங்கள் கையாளப்படுகின்றன. ஆனாலும் அன்னையர்கள் அசையவில்லை. மக்களின் மகோன்னத ஆதரவோடு தங்கள் உறுதியின் வலுவை உலகுக்கு உணர்த்துவதற்கு முடிவெடுத்தனர்.

## சாகும்வரைஉண்ணாவிரதம்




ஈழத்தமிழரின் இதயங்களில்
வேரோடி விட்ட ஆல விருட்சம்

திலீபன் காட்டிய போராட்டப் பாதை. சாகும்வரை உண்ணாவிரதம். ஐந்து அம்சக்கோரிக்கைகளை முன்வைத்துஉண்ணாவிரதம்தொடங்கினான்திலீபன்.

புலிகளுக்கு ஆதரவாக இரண்டு அம்சக்கோரிக்கையை முன்வைத்தனர்அன்னையர்கள்.

திலீபன்விரும்பியமக்கள்புரட்சி.

தென்தமிழீழத்தில் அன்னையர் எழுச்சியாக வெடித்தது. சுழற்சிமுறைத் தொடர் உண்ணாவிரதத்தை, சாகும்வரை உண்ணாவிரதமாகக் கடைப்பிடிப்பதென அன்னையர் முடிவெடுத்தனர்.

"நான்தான் முதலில் உண்ணாவிரதம் இருக்கப்போகிறேன்" அன்னை பூபதி தனக்கே உரிய இயல்பான உணர்ச்சிவேகத்தோடுமுன்வந்தார்.

"இல்லை நான் இருக்கப்போகிறேன்" என வாதிட்டார் அன்னம்மாடேவிட்.

மக்களின் விடிவுக்காக ஆயுதபாணிகளாக வெடிகுண்டுகளைத் தங்கள் உடலோடு தாங்கிச்சென்று, தங்கள் இன்னுயிரைத் தற்கொடை செய்யும் கரும்புலிகளும் ஆயுதங்களற்றநிலையிலும் "மக்களுக்காக நான் மரணிக்கத் தயார்" என நிரூபித்த திலீபனும் புலிகளின் போராட்டப் பாதையின் மைல் கற்கள். மக்களும் புலிகள்தான் என்பதை நிரூபிக்கத் தங்கள் உயிரைத் தற்கொடைசெய்ய அன்னையர்கள் போட்டிபோடுவதைப் பார்த்து இந்திய வல்லாதிக்கத்தின்புருவங்கள்உயர்ந்தன.

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

## பூகம்பத்தின் பெயர்தான் பூபதி அம்மா

மட்டுநகர் வீதியிலே
மாமாங்காங் கோவிலிலே
மாதரசி பூபதியே... நீ கிடந்த
மாதத்தை எண்ணுகிறேன்.

நேற்றாகி இன்றாகி நாளையுமாகட்டும்
காலத்தின் சுழற்சியால் நின்
கால்சுவடுகள் மறையாது.
உலகினையொரு கணம்
உலுப்பிய பெண் நீ ~ தமிழ்
பூகம்பத்தின் பெயர்தான் ~ பூபதியம்மா.


வடக்கினில் ஒருபுலி
கந்தன் வீதியிலே கிடந்தது.
கிழக்கிலும் உன் குரல்
கேட்குதடா திலீபா! என்றாய்
இடையினில் சிங்கவாள் போட
கிழக்கினை விடமாட்டோம்.

உழுது வாழும் உழவனுக்கே
உரிமை இந்த நிலமெனில்
வேங்கையாளும் எம் மண்ணை
பேரம் பேசத் தேவையில்லை.

- புதியவன் -

# குறுணிக்கல்

கே.ஆர்.டேவிட்



நீயும் நானும் ஒரே பிரச்சினைக்குள்ளைதான் வாழ்றம்... எங்கை பார்த்தாலும் அகதியள்... எங்கை பாத்தாலும் குண்டுவிழுந்து சிதறின கட்டிடங்கள்... எதைப் பாத்தாலும் குண்டுபட்ட காயங்கள்... வீதிக்கு வீதி... மதிலுக்கு மதில்... செத்துப்போன புள்ளையளின்ரைபடங்கள்...

இதுக்குள்ளைதான்நாங்கள்வாழ்றம்...இதுகளுக்கூடாகத்தான் நாங்கள் வாழவேண்டியிருக்கு... முடிஞ்சது முடிஞ்சதுதான். முடிஞ்சதுகளை நினைச்சு ஆவலாதிப்படுகிறதில அர்த்தமில்லை...

**குறுணிக்கல்லைக் கண்ணுக்குக் கிட்டப் புடிச்சுப் பாத்தால், அது உலகத்தை மறைக்கும்...பயங்கரமாயிருக்கும்...அதையே கண்ணுக்கு எட்டப் புடிச்சுப்பாத்தால் குறுணிக்கல்தான்எண்டதுதெரியும்...**

நான் குறுணிக்கல்லை, குறுணிக்கல்லாகவே பாக்கிறன்... நீ குறுணிக்கல்லைப்பாறாங்கல்லாய்ப்பாக்கிறாய்...

இளவாலையைவிட்டு வெளியேறி இரண்டு வருடங்களுக்கு மேலாகிவிட்டது.இப்போதுதான்இருவரும்முதல்முறையாகச் சந்திக்கின்றனர். எதிர்பாராத சந்திப்பு. இருவருக்குமே பெருமகிழ்ச்சி.

வீதியோரத்தில் நின்ற பூவரசு மரத்தோடு சைக்கிளைச் சாத்திவிட்டு, திருநாவுக்கரசருக்குப் பக்கத்தில் வந்தமர்கிறார் இரத்தினம்.

ஒரே மண்ணில் பிறந்து – ஒன்றாகவே படித்து... மிகவும் நெருக்கமாகப் பழகியவர்கள். இராணுவம் இளவாலையை ஆக்கிரமித்தபோது அங்கிருந்து வெளியேறி, மானிப்பாய்வரை ஒன்றாக வந்தவர்கள்...அதன்பின் தங்குமிடந் தேடியலைந்ததால் பிரிந்துவிட்டனர்.

திருநாவுக்கரசு தான் உடுத்திருந்த சாறத்தின் கீழ்ப்பகுதியால் முகத்திலும், குரல்வளையிலும் வடிந்துகொண்டிருந்த வியர்வையைத்தேய்த்துத்துடைக்கின்றார்.

"என்னடா இப்படி மாறிப்போனாய்..." உதட்டில் விரலை வைத்துக்கேட்கின்றார்இரத்தினம்.

"புறஅழகுதான்ராமாறியிருக்கு...,அகஅழகுஇன்னும்அப்படியே தான்ரா இருக்கு..."பதில் கூறிய திருநாவுக்கரசு, வழமைபோல் சிரிக்கிறார்.

"உன்ரை சிரிப்பு... அப்பிடியே இருக்கு..."இருவரும் சேர்ந்து சிரிக்கின்றனர்.

"உன்ரை பாடெல்லாம் எப்பிடி... இப்ப எங்கை இருக்கிறாய்... தொழில் துறை..." திருநாவுக்கரசு கேள்விகளை அடுக்குகின்றார்.

"எல்லாம் இளவாலையோடை சரி... இப்ப படுகிறபாடு... நாட்டிலையும்நிம்மதியில்லை... வீட்டிலையும்நிம்மதியில்லை... இப்பிடியும் ஒரு வாழ்க்கை..." இரத்தினம் மிகவும் வேதனையுடன்கூறுகின்றார்.

"நீஇப்பஎங்கைஇருக்கிறாய்..."

"செம்மணிறோட்டிலை..."

"வீடுஎப்படிவசதியானதே..."

"எங்களுக்குப்போதுமானது..."திருநாவுக்கரசுகூறுகின்றார்.

சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணம் செல்கின்ற பாதையில் கைதடிப் பாலத்தை அண்மித்துள்ள வளைவில் இடதுபக்க மாகவுள்ள சைக்கிள் கடைவாசலில் இருவரும் அமர்ந்திரு க்கின்றனர். திருநாவுக்கரசின் சைக்கிள் பின்சில்லில் ஐந்து கம்பிகள்உடைந்துவிட்டன.அதைப்பூட்டக்கொடுத்துவிட்டு, சைக்கிள் உழக்கிய காலலுப்புத் தீரக் கால்கள் இரண்டையும் நீட்டி அமர்ந்திருந்தார் திருநாவுக்கரசு. இரத்தினம் தற்செயலாக அந்தப்பக்கம்வந்தார்.

வைரவ கோவிலடியிலுள்ள மாவீரர் நினைவாலயத்திற்கருகில், சைக்கிள் ஒரு கிடங்கில் விழுந்து... அவலப்பட்டு... நெஞ்செலும்புகள் நெருநெருங்க... சைக்கிளை நிதானப்படுத்தி, மீண்டபோது... பின் சில்லில் உள்ள கம்பிகள் சிக்குப்பட்டு... திருநாவுக்கரசு ஒருவாறு சைக்கிளை நிறுத்தினார். பக்கத் திலுள்ள சர்பத் கடைக்காரன் மிகவும் வாஞ்சையோடு திருநாவுக்கரசுக்கு உதவிசெய்து... சைக்கிள் கடை இருக்கும் இடம்பற்றிய ஆலோசனையும்வழங்கினான்.

"என்னடா இரத்தினம் நெத்தியிலை சந்தனப்பொட்டைக் காணயில்லை..."

"அதெல்லாம்இளவாலையோடைபோட்டிது..."

"ஏனடா..."

"எங்கடைவாழ்க்கைச்சிறப்பிலை...ஒருசந்தனப்பொட்டு..."

இரத்தினம்இளவாலையில் வாழ்ந்தகாலத்தில்,நெற்றியில் பொட்டுவைக்காமல் எங்குமே செல்லமாட்டார்.பரந்த நெற்றியில் இருபத்தைந்து சதக் குற்றியளவிலான ஒரு சந்தனப்பொட்டு வைத்து, அதன்மேல் குண்டுமணியளவில் குங்குமம் வைத்திருப்பார். வட்டமான அவரது முகத்துக்குச் சந்தனப் பொட்டுமிகஅழகாகவேஇருக்கும்.

"உப்பிடியெல்லாம்மனதைவிடக்கூடாதுஇரத்தினம்..."

"இளவாலையிலை உந்தமாதிரிச் சீவிச்சுப்போட்டு... இஞ்சைவந்து... பரிசுகெட்ட சீவியம் சீவிக்கவேண்டி க்கிடக்கு..."

"பரிசு கிடைக்கிறதும்... பரிசு கெட்டுப்போறதும்... எங்களா லைதான்..."

"நீ ஒவ்வொண்டுக்கும் ஒவ்வொரு வியாக்கியானம் சொல்லுவாய்..."

"லொறியிலை ஏத்திற பாரங்களைச் சைக்கிள்ளை ஏத்தினால், கம்பியள் உடையுந்தானே..."



சைக்கிளைப்பூட்டிக்கொண்டிருந்த சைக்கிள் கடைக்காரன் கூறுகிறான்.

கடைக்காரன் கூறியதைக்கேட்ட இரத்தினம் ஆச்சரியத்தோடு திருநாவுக்கரசரைப்பார்க்கின்றார்.

"என்னபாக்கிறாய்..."

"நீஇப்பவிறகுகட்டிறியே..."

"எப்படியோவாழவேணுமே..."

"அதுக்காக..." இரத்தினம் வாக்கியத்தை முடிக்காமல் சுற்றிப் பார்க்கின்றார். வேலிக்கரையோடு மிகப்பெரியதொரு மரக்குற்றி கிடக்கின்றது. அந்த மரக்குற்றியைப் பார்த்த இரத்தினம் திரும்பி திருநாவுக்கரசரைப் பார்க்கின்றார்.

"இந்தப் பெரிய குற்றியை எப்படியடா கொண்டு வந்தாய்" இந்த உணர்வோடுதான் இரத்தினம் பார்க்கின்றார்.

"முருகா... இந்தப் பாரத்தை... இவ்வளவு தூரம்... சைக்கிளிலை..." இரத்தினத்தின் உதடுகள் துடிக்க, நுனிநாக்குநடுங்குகின்றது.

"மனப்பலமிருந்தால் எதையும் செய்யலாம்..."

"சும்மா தத்துவம் கதைக்கிறாய்..."

இளவாலையில் திருநாவுக்கரசு ஓரளவு மதிப்புள்ளவர்.பெரும்படிப்புப் படிக்காவி ட்டாலும் நிறையப் புத்தகங்கள்வாசித்தவர்.முக்கியமான விடயங்களை எழுதிவைக்கின்ற பழக்கமும் இவரிடமுண்டு. சரள மாகத்தத்துவங்கள்கூறுவார்.

பத்து வயதுச் சிறுவர்கள் இருவர் சேர்ந்து கட்டிப்பிடிக்கக்கூடிய பருமனிலானதொரு மஞ்சவுண்ணா மரத்தின் அடிக்குற்றி. வேர்கள் ஒழுங்காகத் தறிக்கப்பட்டு,வாளினால் அரியப்பட்டிருந்தது.

மேற்கு வானத்தில் கதிரவன் இறங்கி, பனைமரங்களின் நிழல்கள் நீண்டுபோயிருக்கின்றன... நாலுமணியிருக்கும். இலேசான மழை; இருள் சில்லிட்ட காற்று... திருநாவுக்கரசு தலையை நிமிர்த்திவானத்தைப்பார்க்கின்றார்.

"இரவைக்குஇலேசானமழைஇறங்கினாலும்இறங்கும்..."

இன்றுஅதிகாலையில்வீட்டிலிருந்துபுறப்பட்டதிருநாவுக்கரசு, பத்து மணியளவில் பளைக்கு வந்து, இந்தக் குற்றியை வாங்கிக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டார். மிருசுவிலில் சிறிதுதங்கி, கொடிகாமத்தில் அரை இறாத்தல் பாணால் இரைப்பை வெறுமையை நீக்கிக்கொண்டு... அடுத்துக் கைதடிச் சந்தியில் இடதுபக்கமாகவுள்ள வேப்பமரத்தின்கீழ் சிறிது தங்கலாமென எண்ணியிருந்தார்... எதிர்பாராதவிதமாக இந்தஇடத்தில்தங்கவேண்டிஏற்பட்டுவிட்டது.

"அண்ணை... புதுக்கம்பியள் போட்டால் காசு கூடவரும்... என்னட்டைக் கிடந்த கம்பியளில் நல்ல கம்பியளாய் தெரிஞ்சு போட்டிருக்கிறன்... கொஞ்ச நாளைக்குப் பாவிக்கலாம்... வசதி கிடைக்கயிக்கை மாத்திவிடுங்கோ" சைக்கிள் கம்பிகளைப் பூட்டிமுடித்த சைக்கிள் கடைக்காரன் மனிதாபிமானத்துடன் கூறுகிறான்.

ஆறு கப்புக்கள் நாட்டப்பட்டு, சில தடிகளோடும் கிடுகுகளோடும்... புல்லுக்கொத்தப்பட்ட நிலத்தில் இங்கும் சைக்கிள்கடை! திருநாவுக்கரசு நன்றியுணர்வோடு அவனைப் பார்க்கின்றார்.

"நானும் உங்களைப்போலைதான் வயாவிளானிலிருந்து இடம்பெயர்ந்துவந்தனான்...வயித்தைக்கழுவவேணுமே..."

"எங்கைபாத்தாலும்அகதியள்...என்னபாவம்செய்தமோ..."

"அப்படிச் சொல்லாதை இரத்தினம்... நாங்கள் கற்பனை பண்ணாத எத்தனை சம்பவங்களைப் பாக்கிறம்... இதுகளெல்லாம் எங்கடை காலத்திலை நடந்தது என்று சொல்லிறதிலைபெருமையிருக்கு..."

"எடேய்... இரத்தினம்... முந்தி சிங்கள ஆமியள் தேடித்தேடி எங்களை அழிச்சவங்கள்... இப்ப சிங்கள ஆமியளின்ரை முகாம்களைத் தேடித்தேடி எங்கடை பொடியள்... அழிக்கிறாங்கள்...இதுபெருமையில்லயா"

"திருநாவுக்கரசுசைக்கிள்கடைக்காரனுக்குப்பத்துரூபாவைக் கொடுத்துவிட்டு, அவனது முகத்தைப் பார்க்கிறார்... சைக்கிள் கடைக்காரன்எதுவுமேபேசவில்லை.

மூவரும் சேர்ந்து திரும்பவும் மரக்குற்றியைச் சைக்கிளில் ஏற்றுகிறார்கள். வாளால் அரியப்பட்ட பகுதியைக் 'கரியலில்' பக்குவமாகவைத்து, சமநிலை பார்த்து திருநாவுக்கரசு கட்டுகிறார்.

மரக்குற்றியைமார்போடு சரித்து, வலது கையால் மரக்குற்றியை அணைத்துப் பிடித்து, இடதுகையால் சைக்கிள் 'கான்டிலை' பிடித்தபடி உருட்டத் தொடங்குகிறார் திருநாவுக்கரசு. இந்தப் பாலத்தடியில்வழமையாகவேஇவர்சைக்கிளைஉருட்டித்தான் செல்வார். மேடு பள்ளங்களுக்கு விலத்தினால் வருகின்ற

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்...

# பேச்சுவார்த்தையில் மூன்றாவது வலுவுள்ள தரப்பாக இராணுவம்

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் – சிறீலங்கா அரசிற்கும் இடையில் கடந்த அரையாண்டு காலப்பகுதியில் மூன்று கட்டப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுவிட்டன. இருப்பினும், கடந்த இரு மாதகாலமாக இப்பேச்சுவார்த்தையில் ஒரு மந்தநிலை ஏற்பட்டுள்ளதாகவே கருதப்படுகின்றது. ஆனால், இந்நிலையானது விரைவில் போக்கப்படும் என அரச தரப்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

விடுதலைப் புலிகளுக்கும் அரச தரப்பினருக்கும் இடையில் நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தையானது வெளிப் பார்வைக்குஇருதரப்புப்பேச்சுவார்த்தைஎனக்கூறப்பட்டாலும், அது முத்தரப்புப் பேச்சுவார்த்தை போன்றதே. ஆம். அதாவது விடுதலைப் புலிகள் இயக்கம் – சிறீலங்கா அரசு – அதன் இராணுவம் ஆகியவற்றிற்கு இடையிலான பேச்சுவார்த்தை என்றேகூறவேண்டும்.

ஆனால், இராணுவமும் அரசிற்குக் கீழ்ப்பட்டது என்ற ரீதியில் ஆட்சியில் இருப்போர் கருதுவதினாலேயேபேச்சுவார்த்தையை இருதரப்புப் பேச்சுவார்த்தை என்ற வடிவத்திற்குள் அடக்க முற்படுகின்றனர். இந் நிலையில் இராணுவ, கடற்படை அதிகாரிகள் பேச்சுவார்த்தையில் பங்குபற்றினும் அதனை முத்தரப்பு பேச்சுவார்த்தை என்ற வடிவம் பெறுவதை அரசு விரும்பவில்லை.

இந்நிலையே பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டைகள் ஏற்படக் காரணமாகின்றன. சிறீலங்கா இராணுவத்தைப் பொறுத்து இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியற் தீர்வு காணப்படுவதை அது ஏற்கும் நிலையில் இல்லை. அதனை ஒரு தன்மானப் பிரச்சினையாகவே அது கருதுகின்றது. அவ்வாறு கருதுவதற்கு ஏற்றவகையில் இராணுவத்திற்குச் சில அவமானங்கள் ஏற்பட்டே இருந்தன. இதில் இராணுவ ரீதியில் புலிகளை வெற்றி கொள்ள முடியாமற் போனது ஒருபுறம் இருக்க, பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு ஆட்சிப் பீடத்தில் ஏறிய உற்சாகத்தில் பிரச்சினையைத் தீர்க்க இராணுவத்திற்குப் போதியசந்தர்ப்பம்வழங்கப்பட்டுவிட்டது.இனிஇராணுவத்தீர்வு சாத்தியமில்லை–இராணுவத்தால் இயலாது என்பது போன்ற தொனியில் வெளிப்படையாகவே பேசியது. அத்தோடு இராணுவத்திற்கானநிதிஒதுக்கீடுவீண்விரயம்எனக்கூறியது.

மேலும் சில இராணுவ அதிகாரிகள் தமது இஸ்டம் போல் அதிகாரத்தை கையில் எடுத்துள்ளதாகவும், ஆனால் இதைப் பொதுஜனஐக்கியமுன்னணிஅரசு அனுமதிக்கப்போவதில்லை எனவும் கூறப்பட்டது. அரசின் அறிவிப்புக்களுக்குக் கட்டுப்பட்டே இராணுவம் நடக்க வேண்டும் என சனாதிபதி சந்திரிகாவேஎச்சரித்திருந்தார்.

இது தனியாக இராணுவத்தின் அதிகாரம் ஆட்சியில் மேலோங்கி இருந்ததால் மட்டும் எழுந்தது என்று கூறமுடியாது. கடந்த காலத்தில் அதாவது பொ.ஐ.முன்னணி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன்னர் ஆயுதப் படையினர் ஐக்கிய தேசியக் கட்சியின் சொந்தப் படைபோல் செயற்பட்டதினால் எழுந்த ஆத்திரமும் அதனால் ஏற்பட்ட பாதிப்புக்களும் காரணம் என்றே கூறவேண்டும்.

ஜெயராஜ்

இந்நிலையிலேயே ஆயுதப் படையினர் மீது குறிப்பாக ஐ.தே.கவின் சிந்தனைக்கு ஏற்ப இராணுவத்தை வழிநடத்திச் சென்ற பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமில்டன் வனசிங்கா மீதும், உயர்மட்ட அதிகாரிகள் மற்றும் பொலிஸ் திணைக்கள உயர் அதிகாரிகளின் மீது அதிகாரத் துஸ்பிரயோகம், கையூட்டு குற்றச் சாட்டுக்கள் போன்றவை பொ.ஐ.முன்னணியால் முன்வைக்கப்பட்டன.

அத்தோடு, ஆட்சி அதிகாரத்திற்கு வந்த கையோடு அதாவது பாராளுமன்றத்தைக் கைப்பற்றியவுடன் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கும் முன்வந்தது. இதற்கு பொதுத்தேர்தலின் போது சமாதானத் தீர்விற்குக் கிடைத்த வரவேற்புக் காரணமாக இருக்கலாம். ஆனால் இது குறித்து இராணுவத் தலைமைப்பீடத்துடன் அரசதரப்பு எதுவித பேச்சுக்களையும் தொடக்கத்தில் மேற்கொள்ளவில்லை. அவர்களின் சம்மதத்தையும் பெற வுமில்லை.

இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம். ஒன்று எதிர்கொள்ளவிருந்த சனாதிபதித் தேர்தலில் வெற்றி நிச்சயம் என்ற ரீதியில் எதிர்காலத்தில் இராணுவம் தமது பணிப்புக்களுக்குப் பணிந்தே ஆகவேண்டும் என்ற எண்ணம் சந்திரிகாவிற்கு ஏற்பட்டிருக்கலாம். அல்லது பேச்சு வார்த்தையின் பின் இராணுவத்தை சமரசம் செய்து கொள்ளலாம் என்ற நோக்கம் தோன்றியிருக்கலாம். ஆனால் இராணுவத்தில் பெரும் களை எடுப்பிற்கு பொது ஜன ஐக்கிய முன்னணி திட்டமிட்டிருந்தது என்பது மட்டும் உறுதிப்படுத்தக் கூடியதாகவேஇருந்தது.

இந்நிலையில், முதலாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் சனாதிபதித் தேர்தலின் முன்னர் பொ.ஐ.முன்னணியினரால் தொடக்க ப்பட்டபோது இராணுவத்தரப்பினரின் விருப்பு வெறுப்புக்கள் கருத்திற் கொள்ளப்படவில்லை. ஆகையினால் பேச்சு வார்த்தையில் இராணுவத்துடன் தொடர்புடைய விடயங்கள் பற்றி ஆராயப்பட்ட போது பாதுகாப்பு அமைச்சும், சனாதிபதிப் பதவியும் கைமாறும் நிலையில் காத்திருக்க வேண்டும் என்ற ரீதியிலேயே பேசப்பட்டது. சனாதிபதிப் பதவி இராணுவத்தைப் பணியவைக்கும்என பொ.ஐ.முன்னணியின் எண்ணம்அதற்கு ஆதாரமாகஇருந்திருக்கலாம்.

இருப்பினும், சனாதிபதித் தேர்தலில் முன் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம்ஏற்பட்டுள்ளதாக அரசு காட்ட முனைந்தது.இதன் அடிப்படையில் இராணுவத் தரப்புடன் பேச்சுக்கள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரினாலும், பின்னர் சனாதிபதி சந்திரிகாவினாலும் நடத்தப்பட்டன. இராணுவத்தின் நலன்கள் பாதுகாக்கப்படும் என உறுதி மொழிகள் அளிக்கப்பட்டன. அப்பொழுது தான், இராணுவம் தனது நிலைப்பாட்டின் உறுதியையும், பலத்தையும் புதிய அரசிற்குக் காட்டியது. ஒரு மாலையில் சுமார் நான்கு மணித்தியாலங்கள் பேச்சு நடத்திய சனாதிபதி சந்திரிகா வெறுங்கையுடன் திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது.

ஆனால், இதுதான் சந்திரிகா அரசிற்கு இராணுவம் கொடுத்த முதல் சமிக்கை எனக்கொள்ள முடியாது. அதற்கு முன்னரே இராணுவம் தனது உணர்வுகளை அரசுடன் நெருக்கமாக அப்பொழுது இருந்தவர்களுக்கு வெளிக்காட்டியிருந்தது. சமாதானப் பேச்சுவார்த்தைக்கான ஆலோசனைக்குழுவில் இருந்ததமிழ்ச்செய்தியாளர்ஒருவரைச்சந்தித்தஇராணுவஉயர் அதிகாரி ஒருவர், இராணுவம் தனது நிலைப்பாட்டில் இருந்து விட்டுக்கொடுக்கப் போவதில்லை எனத் தெளிவாகவே கூறியிருந்தாராம். அத்தோடு அதனை புதிய அரசிற்குக் கூறும்படியும்சொன்னாராம்.

அதாவது முதலாம் கட்டப் பேச்சுக்கள் முடிவுற்ற போதுதான் பேச்சுவார்த்தையில் மூன்றாவதுதரப்பு–புறந்தள்ள முடியாத தரப்பு ஒன்று இருப்பதை அரசு புரிந்துகொண்டது என்றே கூறலாம். இம்மூன்றாம் தரப்பானது, இனப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வை முற்றாக நிராகரித்ததோடு, கடந்தகாலத்தில் தனதுநிலைப்பாட்டில்இருந்தும்தனது கொள்கையில்மாற்றம் எதுவும்செய்வதற்குதயாராகவும்இருக்கவில்லை.

இந்நிலையில்,முதலாம்கட்டப்பேச்சுவார்த்தையில்அரசு ஒப்புக் கொண்ட விடயங்களில் முன்னேற்றகரமான நடவடிக்கை எதையும் எடுக்க முடியாது போனது.இதற்கு வடக்கு–கிழக்கு நிர்வாகம்பற்றி அரசு தெளிவாகப் புரிந்திராமையும் ஒரு காரணம் என்றேகூறவேண்டும்.

வடக்கு–கிழக்குமாகாணங்கள்இரண்டாம்ஈழப்போரின்பின்னர் இராணுவச் சட்டத்தின் கீழ் பராமரிக்கப்பட்ட பிரதேசங்களாகவே இருந்தன. அரசதரப்பு கூறிக்கொண்டது போல் விடுவிக்க ப்பட்டதான கிழக்கு மாகாணமும் சரி. புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த வடக்கு மாகாணமும் சரி. சிறீலங்கா அரசால் அதாவது ஐ.தே.க.அரசால்பிரகடனப்படுத்தப்படாதஇராணுவச்சட்டத்தின் கீழேயே இருந்தது. அங்கு குடிசார் நிர்வாகம் என்பதும் குடிசார் அதிகாரிகள் என்பதும் இராணுவத்தினரின் பணிப்புகளுக்கு கீழ்ப்பட்டே செயற்பட வேண்டியும்இருந்தது.

ஆகையினால், முதலாம் கட்டப் பேச்சுக்களின் பின் அரசு இராணுவத்துடன் தொடர்பற்ற விடயங்கள் என்ற ரீதியில் சில நடவடிக்கைகளை எடுக்க முனைந்ததாயினும் அது வெற்றி பெறவில்லை. எடுத்துக்காட்டாக தடைவிதிக்கப்பட்ட பொருட்கள் சிலவற்றின் மீதான தடையை அரசு தளர்த்தியபோதும், தடைமுகாம்களைத் தாண்டி அவற்றால் வடக்கே வந்து சேரமுடியவில்லை. பொருண்மியத் தடை நீக்கம் என்பது பேச்சளவினதாகவேஇருந்தது.

இதேசமயம் கிழக்கு மாகாணத்தில் பிரகடனப்படுத்தப்படாத பொருண்மியத்தடை ஒன்று அமுலில் இருந்ததை அரச தரப்பு அறிந்திருக்கவேஇல்லை.

இந்நிலையானது சனாதிபதித் தேர்தலின் பின்பும் மாற்றம் கண்டதாக இல்லை. இராணுவக் கட்டமைப்பில் மாற்றம் எதுவும் செய்யப்படாமல் சந்திரிகா அரசு இவ்விவகாரத்தில் முன்னேற்றம்காணமுடியாதொருநிலைஏற்பட்டது.

இதேசமயம் சந்திரிகா அரசும் சனாதிபதித் தேர்தல் வெற்றியின் பின்னர் தனது நிலைப்பாட்டில் மாற்றத்தைக் காட்டினார். இனப்பிரச்சினையின் தீர்வுடன் பெரும்பான்மையினரின் நலனையும் இணைத்துப் பேசத் தொடங்கினர். அத்தோடு இராணுவத்தினரின் நிலைப்பாட்டையும் படிப்படியாக ஏற்றுக்கொள்ளும்அளவில் இருந்தனர்.அரசின் இந்நிலைப்பாடு மாற்றத்திற்கு இராணுவத்தின் அழுத்தமே முற்றுமுழுதான காரணம் என்பதைவிட, ஆட்சியாளர்களிடம் இருந்த பேரினவாதச் சிந்தனையும் சேர்ந்ததின் வெளிப்பாடே இது எனலாம். இதன் தொடராகவே இரண்டாம் கட்டப்பேச்சு வார்த்தையின் நிகழ்ச்சிநிரல் இராணுவத்தினரின் நிலைப்பாட்டிற்குஏற்றதாகவகுக்கப்பட்டது.

இதன் பிரகாரம் முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையில் முன்னுரிமை கொடுக்கப்பட்ட அத்தியாவசிய பொருட்களின் விநியோகம், மற்றும் பாதை திறப்பு விவகாரம் என்பன பின்தள்ளப்பட்டு, முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையில் அரசு வழங்கிய நிகழ்ச்சி நிரலில் கடைசியாக இருந்த மோதல் தவிர்ப்பு நிலை குறித்த பேச்சுவார்த்தை முதன்மை பெற்றது. இது இராணுவத்தினரின் சம்மதத்துடன் மேற்கொள்ளப்பட்டது என்பதிலும்சந்தேகமில்லை.

இராணுவத்தைப் பொறுத்து அதன் நிலைப்பாடு தெளிவாகவே பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், "இன்றைய நிலைகளில் இருந்து ஒரு அங்குலம்தானும் பின்வாங்கப் போவதில்லை" என்பதே அதுவாகும். இதன் அடிப்படையில், இராணுவம் வடக்கிலும், கிழக்கிலும் தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியது.

இராணுவத் தரப்பின் கூற்றுப்படி கிழக்கு மாகாணம் அவர்களின் பூரண கட்டுப்பாட்டுப் பிரதேசம். வடக்கே யாழ் குடாநாடு இராணுவ முற்றுகைக்குள்ளும், ஏனைய பகுதிகள் ஒட்டுமொத்தப் பொருண்மியத் தடைக்குள்ளும் உள்ள பிரதேசமாகும். இந்தவகையில், கிழக்கில் புலிகளின் நடமாட்டம் ஒடுக்கப்பட்டு விட்டது என்பதும், இதனால் புலிகளின் நடவடிக்கைக்கு இடமளிக்க முடியாது என்பதும் அதன் நிலைப்பாடு ஆகும். அதேவேளை வடக்கில் இராணுவ முற்றுகையோ அன்றிப் பொருண்மிய முற்றுகையோ தளர்த்தப்படக் கூடாது என்பதிலும் இராணுவம் உறுதியாகவே இருந்தது.

இதேசமயம், இராணுவத்தரப்பு மறுசீரமைப்பொன்றிற்கு சிறிதுகால அவகாசம் வேண்டியும் நின்றது. ஏற்கனவே இராணுவத்தளபதியாக ஜெரி. டீ. சில்வா பதவி ஏற்ற பின்னர் இராணுவச் சீரமைப்பு தொடங்கியிருப்பினும், அதனைப் பூர்த்தி செய்ய கால அவகாசம் தேவையாக இருந்தது என்பதே யதார்த்தமாகஇருந்தது.ஏனெனில்கடந்தகாலத்தில்இராணுவம் எதிர்கொண்ட பெரும்தோல்விகள் அதன் கட்டமைப்பையே சீர்குலைத்திருந்தது.

இந்நிலையில், புதிய அரசுடன் நல்லுறவை வளர்த்துக்கொள்ளவும், அதே சமயம், கால அவகாசத்தைப் பெற்றுக் கொள்ளவும் பரஸ்பர விட்டுக் கொடுப்பிற்கு இராணுவம் இணங்கியது.அதன் பிரகாரம்,மோதல் தவிர்ப்பு நிலை ஒன்றிற்கு இராணுவம் உடன்படுவதற்கு முன்னர் இடைக்கால வரவு–செலவு திட்டத்தில் 500 கோடி ரூபா இராணுவத்திற்கு அரசால் ஒதுக்கப்பட்டிருந்தது.இது இராணுவத் தரப்பிற்கு அரசு செய்த நற்சமிக்கை அல்லது பிரதியுபகாரம் ஆகும். இது இராணுவத் தரப்பிற்குநம்பிக்கையூட்டும்அம்சமாகஇருந்தது.

இவ்வுறவு நிலை வளர்ச்சியில் இராணுவத் தரப்பும் பேச்சுவார்த்தையில் இணைத்துக் கொள்ளப்பட்டது. இவ்விணைப்பானது போர் நிறுத்தம், மோதல் தவிர்ப்பு நிலை குறித்த பேச்சிற்கு உறுதுணையாகும் எனத் தெரிவிக்கப்பட்டிருப்பினும் பேச்சுக்களில் இராணுவத் தரப்பும் இடம் பிடித்துக் கொண்டதுஎன்றேகூறமுடியும்.

இந்தவகையில் இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் இராணுவத் தரப்புநான்குபேர்கொண்டசிறீலங்காகுழுவில்50வீதஇடத்தைப் பிடித்துக்கொண்டது. இதன் மூலம் அரசின் செயற்பாடுகளில் இராணுவம்தனதுதீர்மானங்களைநிலைநிறுத்தமுற்பட்டது.

இந்தவகையில் தான் பூநகரிப்பாதை திறப்பது தொடர்பாகவும்–பொருண்மியத்தடை நீக்கம் தொடர்பாகவும் கிழக்கில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் குறித்தும் இராணுவம் புதிய நிலைப்பாட்டுடன்செயற்படத்தொடங்கியது.

பூநகரிப்பாதை விவகாரத்தை நிராகரித்த இராணுவத்தலைமை, பொருண்மியத்தடை நீக்கத்திற்கும் முட்டுக்கட்டை போட்டது. குறிப்பாக எரிபொருளில் அதன் கட்டுப்பாட்டுப் பிடி பலமானதாகவே இருந்தது.இதில் எந்தவித தளர்வையும் செய்ய அதுதயாராகஇருக்கவில்லை.

இதற்கு சிறப்பான உதாரணமாக மோதல் தவிர்ப்பு உடன்பாட்டு அமுலாக்கத்தில் இராணுவம் முட்டுக்கட்டையாக எழுந்துள்ள விவகாரத்தைக் குறிப்பிட முடியும். "மோதல் தவிர்ப்பு நிலை" உடன்பாட்டின்போது இராணுவத்தரப்பு அதிகாரிகள் பேச்சு வார்த்தையில் பங்குகொண்டபோதும் தமது நிலைப்பாட்டிற்கு மாறாக, ஒப்பந்த சரத்துக்கள் சில அமைந்துவிட்டதை இராணுவத் தரப்பு ஏற்றுக்கொள்ளத்தயாராகஇருக்கவில்லை.

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்...

## அரசியற் தீர்வா? அன்றாடத்...

பிரச்சினையாகும். எனவே அதனை திடீரெனத் தீர்த்து வைக்கமுடியாது. படிப்படியாகவே இதைச் செய்ய முடியும். எனவே தீர்வு மீது கொண்ட நம்பிக்கையின் அடையாளமாகவே மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் செய்து கொண்டோம். பேச்சுவார்த்தைக்கு நிரந்தரமான போர் நிறுத்தம் அவசியம். ஆனால் அதை சிறீலங்கா இன்னும் செய்யவில்லை. நான்கு கோரிக்கைகளை நாம் அரசிடம் முன்வைத்தோம். இராணுவ முகாமை அகற்றி பூநகரிப் பாதையைத் திறத்தல், வடபகுதிக்கான பொருண்மியத் தடை, மீன்பிடித்தடைகளை நீக்குதல், கிழக்கில் நாம் எமது தற்காப்பிற்கான ஆயுதங்களுடன் நடமாடுவதற்கான அனுமதி ஆகியவையே இக்கோரிக்கைகள். ஆனால் இவை எதுவும் நிறைவேற்றப்படவில்லை. எம்மைப் பிடித்து வைத்துக்கொண்டு சில தீர்வுகளை திணிப்பதற்கு சிறீலங்கா முயற்சிக்கிறது.

கிழக்கு மாகாணத்தில் எவ்வாறு நாமும், ஆயுதப்படைகளும் நடந்துகொள்வது என்பது பற்றி பூரண விளக்கம் எதுவும் அளிக்கப்படவில்லை. 600 மீற்றர் கட்டுப்பாடு யாழ். குடாநாட்டுக்குப் பொருந்தும். ஆனால் இந்த நிபந்தனை கிழக்கு மாகாணத்துக்கு பொருந்தாது. இங்கு நிலைமை வேறாக உள்ளது.

கிழக்கில் பதுங்கியிருந்து தாக்குவதற்குரிய ஆயத்தநிலையில் இராணுவம் இருப்பது நிறுத்தப்பட வேண்டும். வாவியிலும் கடலிலும் சுதந்திரமாக மீன் பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். இவற்றை நிபந்தனைகளாக இல்லாது வேண்டுகோளாகவே சிறீலங்காவிடம் கேட்டோம். ஆனால் இதற்கு இணக்கமெதுவும் கிடைக்கவில்லை.

ஆறு கண்காணிப்புக்குழுக்களை நியமிக்குமாறு கோரியும் 4 குழுக்களே நியமிக்கப்பட்டன. கிழக்கில் உள்ள சோதனைச் சாவடிகள் அகற்றப்பட வேண்டும். இங்கு உள்ள பிரகடனப்படுத்தப்படாத பொருண்மியத் தடை நீக்கப்படுவதுடன் மக்கள் மீதான சோதனைகள் கெடுபிடிகள் நீக்கப்பட்டு சுமூகமாகப் போக்குவரத்து செய்ய வசதி செய்யப்பட வேண்டும்.

முன்னைய பேச்சுவார்த்தைகளின் போது இணக்கம் காணப்பட்ட விடயங்கள் எதுவும் திருப்திகரமாகச் செயற்படவில்லை. வடபகுதிக்கான பாதைத் திறப்பு, மின் விநியோகம், பாதைத்திருத்தம், நூல் நிலையத்தை புனரமைத்தல், பொருட்களைத் தடையின்றி அனுப்புதல் ஆகிய விடயங்கள் குறித்து சிறீலங்காவின் அரச அதிகாரிகள் பேசினர். நாம் வடபகுதியில் மீன்பிடித்தலை அனுமதிக்குமாறும் அகதிகளை மீளக்குடியேற அனுமதிக்குமாறும் வற்புறுத்தினோம்.

எமது பேச்சுவார்த்தைகள் அனைத்தும் வடக்கு-கிழக்கை மையமாக வைத்தே அமைந்தன. ஆனால் சிறீலங்கா அரசோ யாழ்ப்பாணத்தை மையமாக வைத்துப் பேசியது. யாழ்ப்பாணத்துக்கான நாலாயிரம் கோடி ரூபா பின்னர் குடாநாட்டுக்கான 500 கோடியாகி பின் யாழ். மாநகரசபைக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டது.

மோதல் தவிர்ப்பு ஏற்பட்டதன் பின்னர் திட்டமிட்ட குடியேற்றங்கள் நடைபெற்று வருகின்றன. இக்குடியேற்றங்கள் அனைத்தும் நிறுத்தப்படுவதுடன் அகற்றப்பட வேண்டும். வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்கு யேர்மன் அரசு வழங்கிய 5 கோடிரூபா சிங்களக் குடியேற்றத்துக்கே பயன்படுத்தப்படுகிறது. சமாதானத்தை நம்பியே தமிழ்மக்கள் சனாதிபதி சந்திரிகா மீது தொடக்கத்தில் நம்பிக்கை கொண்டனர். எனவே வடக்கு-கிழக்கு இணைப்பை ஏற்று அந்த அடிப்படையில் தீர்வை முன்வைத்தால்அதனைப் பரிசீலனை செய்வோம். போர் இன்றி சிறீலங்கா பேச முனைந்தால் இதன் அடிப்படையிலேயே பேச வேண்டும். கடந்த 50 ஆண்டுகளாக தமிழ்த்தலைவர்கள் சிறீலங்காவுடன் பேசி ஏமாந்துவிட்டனர். எனவே இனிமேலும் ஏமாறமுடியாது என மேலும் தெரிவித்துள்ளார்.

## சிறீலங்காவில் புதிய அரசிய...

மிகக் கொடிய சித்திரவதைகளை அனுபவித்தனர் – அனுபவித்து வருகின்றனர் என்பது யாவரும் அறிந்ததே.

இதற்கிடையில் சிறீலங்கா தான் முன்வைக்க விரும்பும் அரசியற் தீர்வுகளை விடுதலைப் புலிகளுக்கு, பங்குனி 25 இற்கு முன்னதாக அனுப்பி வைக்கப்போவதாகக் கூறிய போதிலும், இதுவரை எவ்வித யோசனைகளையும் முன்வைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## காலக்கெடு நீடிப்பு...

சந்திரிகாவுக்கு அனுப்பியிருந்தார். இக்கடிதம் அப்போது பங்களாதேசில் நின்ற சிறீலங்கா சனாதிபதிக்கு வழிப்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையே பொருண்மியத்தடை நீக்கம், மீன்பிடித்தடை நீக்கம் என்பன தொடர்பான நடைமுறைச் சிக்கல்களைப் பற்றி ஆராய்வதற்கு, ஒரு குழுவை யாழ்ப்பாணம் அனுப்புவது தொடர்பாகச் சந்திரிகா கடிதம் எழுதியிருந்தார் எனவும், அதனை வரவேற்ற விடுதலைப் புலிகள், இக்குழு ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் பேசக்கூடியவாறு வருவது நல்லதெனக் கூறியுள்ளதாகவும் தெரிகிறது.

# வன்னிப் பகுதியில் கால்நடை வளம்

வன்னிப் பெருநிலப்பரப்பின் பயன்நிறை வளங்களில் கால்நடை வளமும் முதன்மையான ஒன்றாகும். கால்நடைகள் நன்கு வளரக்கூடிய சூழல் இயற்கையாகவே அங்கு அமைந்துள்ளதால், அந்தப் பிரதேசங்களிலே பால்வளம்நிறைந்துள்ளது.இவ்வளம் தகுந்த முறையிலே தமிழீழ மக்களின் தேவைக்குப்பயன்படுத்தப்படவில்லையாயின், வீணாகிப்போய்விடும். எனவே வளத்தினை நன்கு பயன்படுத்தவும், பலருக்கு வேலைவாய்ப்பு வழங்கவும், தமிழீழ மண்ணின் பால்வளத்தால் இலாபம் ஈட்டவும், அங்கே பெறப்படக்கூடிய பெருமளவு பால் பதனிப்படுதல் முதன்மையாகின்றது. முல்லை மாவட்டத்தில் ஒட்டுசுட்டானில் பால் பதனிடும்நிலையம்ஒன்றுசெயற்படுகின்றது. மிகப்பாரிய அளவிலே பால்மா ஆகவும், கட்டிப்பாலாகவும் பால் பதனிடப்படும் நாள்வரும்வரை, கிடைக்கக்கூடிய பாலை உபயோகிக்கக்கூடிய வகையிலே பாலைப்பதனிடும்தொழில்நுட்பம் இங்கு கையாளப்படுகின்றது. பால் சேகரிப்பு நிலையங்கள் மூலம், பால் சேகரிக்கப்பட்டு முதலில் நெய் பிரிக்கும் கருவியின் உதவியினால் பாலில் உள்ள நெய் பிரித்தெடுக்கப்படுகின்றது. நெய் பிரித்தெடுக்கப்பட்டு பின்பு சுவையூட்டற் பொருட்களான கொக்கோ, சீனி என்பனவும் வாசனைப் பொருட்கள் என்பனவும் கலக்கப்பட்டுச் சூடாக்கப்படுகின்றது. காய்ச்சப்பட்ட பால் சுத்தமானபோத்தலில்அடைக்கப்படும். போத்தல்களிலே அடைக்கப்பட்ட போதும்பால்விரைவிலேபழுதடைந்து போகும் வாய்ப்பு உண்டு. எனவே பால் கிருமியழித்தலுக்காக மீண்டும் வெப்பமேற்றப்படுகிறது. போத்தல்கள் உடைந்துவிடாமலிருப்பதற்காகக் கூடிய அமுக்கத்தில், 120 பாகை வெப்பநிலையில்நீராவியில்வைத்துஇப்போத்தல்கள் வெப்பமேற்றப்படுகின்றன. கிருமியழிக்கப்பட்ட இவ்விதமான பால் ஏறத்தாழ மூன்று மாதங்கள் வரை பழுதடையாதுஇருக்கும்.

பதனிடப்பட்ட பால் தமிழீழத்தின் பல்வேறு பாகங்களுக்கும் எடுத்துச்செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. மேலும் பெருமளவு பாலினைப் பதனிடும் திட்டத்தை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உணவுபதனிடல்பகுதியினர்,1995ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்த உள்ளனர். அதன் மூலம் மாதமொன்றுக்கு 25X300 லீற்றர் பால் பதனிடப்பட்டும்,300மில்லிலீற்றர்கொண்ட2000 போத்தல் பாலும், 100 மில்லிலீற்றர்கொண்ட 375 போத்தல் நெய்யும் இதன்மூலம் உற்பத்திசெய்யப்படும். பால், போத்தல் ரூபா 9 ஆகவும், நெய் போத்தல் ரூபா 100 ஆகவும் விற்பனை செய்யப்படும். நிறையுணவாகிய பால், எமது தமிழீழத் தேசத்தின் வளங்களில் ஒன்றுஆகும்.

### இலங்கை இனப்பிரச்சனை விவகாரத்தில்

# உலகநாடுகள் தீவிர அக்கறை

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில்உலக நாடுகள் குறிப்பாக மேற்குலகநாடுகளும், சிறீலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளும் தீவிர அக்கறைகாட்டி வருகின்றன. இதனைத்தொடர்ந்து இந்நாடுகளின் மக்கள் தொடர்புச் சாதனங்களின் கவனமும் இனப்பிரச்சினை குறித்துத் திரும்பியுள்ளதுடன், இதன் காரணமாக இலங்கையில் நடக்கும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டும் வருகின்றன. விடுதலைப் புலிகள் இயக்கம், உலகில் இன்று விடுதலைப் போராட்டத்தை முனைப்பாக முன்னெடுத்துச்செல்லும்முன்னணிஅமைப்பாக இருப்பதைத் தொடர்ந்தும் இனப்பிரச்சினைக்கு சமாதானத்தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக இருப்பதைத் தொடர்ந்துமேஇன்று இனப்பிரச்சினை விடயத்தில் மேற்குறிப்பிட்ட கவனம் இலங்கை குறித்து ஏற்பட்டுள்ளது. கடந்த காலத்திலும் இனப்பிரச்சினை தொடர்பாகவே மேற்குலக நாடுகள் தீவிரஅக்கறைகாட்டுவதாகஉள்ளது. இதேவேளை, இவ்வாறான அக்கறை காட்டுவதற்கும் புதிய பொதுசன ஐக்கிய முன்னணி அரசின் எதிர்கால நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வதற்கும் அவசியமாக உள்ளது. இதனைத்தொடர்ந்தே தற்பொழுது மேற்குலகநாடுகளும்உதவிவழங்கும் நாடுகளும் அக்கறை காட்டத் தொடங்கியுள்ளன. இதில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் நடைபெறுவதை அறிவதில் ஆர்வம் கொண்டுள்ளன. இதனைத் தொடர்ந்தே அநேக நாடுகளின் பிரதிநிதிகள் வடக்கே வருவதில் ஆர்வம் கொண்டுள்ளதாகத் தெரிகின்றது. இதே சமயம் உலகில் உள்ள பலநாட்டுப் பத்திரிகை யாளர்களும், படப்பிடிப்பாளர்களும் யாழ். குடாநாட்டிற்குள் படையெடுத்து வந்து சென்ற வண்ணமுள்ளனர்.

# சிங்களத்தில் திலீபன் புகழ்

ராஜரட்ட வானொலிச் சேவையைச் சேர்ந்த கலைஞர் ஒருவர், திலீபனின் தன்னிகர் இல்லா உயிர்த்தியாகத்தைப் புகழ்ந்து சிங்களத்தில்பாடல்ஒன்றைப் பாடியுள்ளார்.

வவுனியாவில் நடைபெற்ற கலை நிகழ்ச்சி ஒன்றிலேயே வாசுதேவ நாணயக்காராவின் குழுவில் வந்த இக்கலைஞர் சிங்களத்தில் தான் இயற்றிய திலீபன் புகழ்ப்பாடலைப் பாடியுள்ளார்.

# யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கலை இலக்கியக் கருத்தரங்கு

பல ஆண்டுகளின் பின்னர், பரந்த அளவிலான கலை, இலக்கியக் கருத்தரங்கு ஒன்று அண்மையில்யாழ்ப்பாணத்தில்தொடங்கியது.1974 ஆம்ஆண்டு யாழ்ப்பாணத்தில்நடந்ததமிழ்ஆராய்ச்சி மாநாட்டின் பின்னர் கலை, இலக்கியம் தொடர்பாக நடைபெறும் குறிப்பிட்ட கருத்தரங்குஎன்றுஇதனைக்கூறலாம். விடுதலைப்புலிகள்கலை,பண்பாட்டுக் கழகமும் வெளிச்சம் கலை, இலக்கிய, சமூக வெளியீடும் சேர்ந்து நடாத்திய இம் மூன்று நாட்கருத்தரங்கில், வட தமிழீழத்தின் பல பாகங்களில் பல பகுதிகளிலிருந்து (தத்துவார்க்க முரண்பாடுகள் எதுவுமற்ற) பேராளர்கள் கலந்துகொண்டார்கள். இதன் காரணமாக இக்கலை, இலக்கியக் கருத்தரங்கானது இரு வகையில் முதன்மையானது.ஒன்றுதமிழீழத்தில் பரந்துபட்ட பிரதேசத்தில் இருந்தும், அதேசமயம் எண்ணிக்கையில் உயர்ந்த அளவில் பேராளர்களைக்கொண்டதாகஇக்கருத்தரங்குஇடம் பெறுவது. மற்றையது ஈழத்தமிழ் மக்களின் வாழ்வியக்கத்துடன்கூடிய கலை, இலக்கியத்தைப் பற்றிய ஆய்வை இது மேற்கொள்வதாகும். கலை, இலக்கிய ஆய்வென்பதும் மொழி ஆய்வென்பதும் கடந்த காலத்தில் தமிழ் நாட்டில் இடம்பெற்ற தமிழாராய்ச்சி மாநாடுகள் போன்ற ஆட்சியாளர்களின் இலாபம் தேடும் விழாக்கள் அல்ல. தமிழ் மொழியின் சிறப்புப் பற்றியும் அதன் கடந்தகால நிகழ்காலக் கலை, இலக்கியங்கள் பற்றியும் மதிப்பீடு ஒன்றைச் செய்வதோடு, எதிர்காலத்தில் அவற்றின் ஆரோக்கியமான போக்கிற்கும் உதவியவையே ஆகும். இந்தவகையில் யாழ்ப்பாணத்தில் நடந்த இக்கருத்தரங்கானது, உலகத் தமிழினத்தை ஒன்றிணைக்காது எனினும் தமிழ்க் கலை, இலக்கியங்களில் உருவாகியுள்ள புதிய அம்சங்களை ஆராய முற்படுவதின் அடிப்படையிலும் மிகவும் முதன்மையான ஒன்றாகும். ஒருவகையில் தமிழில் உருவாகி வரும் புதிய கலை, இலக்கிய வடிவத்தைஆராயமுற்பட்ட முன்னோடியான கருத்தரங்கு என்று கூறலாம். இக்கருத்தரங்கின்முதன்மைஆய்வுக்குரிய அம்சங்கள் வாழ்வியலுடன் இணைந்தவைகள்ஆகும்.அதாவது மக்களின் வாழ்வியலை நெறிப்படுத்தி கலை, இலக்கிய வடிவங்களைக் கதைகள், சிறுகதைகள், கவிதைகள், இசை, பாரம்பரியக் கலை வடிவங்கள், ஓவியம், அரசியல் உட்படப் பல அம்சங்கள் ஆராயப்பட்டுள்ளன. இந்த வகையில் ஆராயப்படும் இக்கலை இலக்கியங்களில்முதன்மையாக இன்று ஈழத்தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து நிற்கும் வாழ்வியலே ஆகும். இதில் வீரம், வெற்றி, பெருமிதம், துன்பம், துயரம் எனப்பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதாக இவை அமைகின்றன. அதேவேளை நவீன தமிழ் இலக்கியத்தை எப்போதிலும் காண முடியாதவை ஆகும். அத்தோடு சிறுகதை, கவிதை, ஓவியம், அரசியல், இசை என்பவற்றில் ஒரு உத்வேகத்துடன் கூடிய வளர்ச்சியை இவை கண்டுள்ளன. இவ்வடிவங்கள் ஈழத்தமிழ் கலை, இலக்கிய வடிவங்களுக்கு மட்டுமல்ல உலகத்தமிழ் கலை, வடிவங்களுக்கும் முதன்மையானதாகும். வீரம் பற்றியும் அதனுடன் இணைந்தவாழ்வியல்பற்றியும்பழைய தமிழ் இலக்கியங்களில் கூறப்பட்டிருப்பினும் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர், நவீன இலக்கிய வடிவங்களுடன் இணைந்ததாகத் தமிழ் உழைப்பின் கலை, இலக்கிய வடிவமானது இங்கே அறிமுகப்படுத்தப்படுகின்றது. இந்த வகையில் இன்றைய ஈழத்தமிழ் கலை, இலக்கிய வடிவங்களின் ஆய்வு என்பது முதன்மையானதும்கூட. ஏனெனில் இவ்வாய்வுகளே இப்புதிய வடிவத்தில் நாம் கடந்துவந்த பாதையையும் எதிர்காலத்தில் அவை செழுமைப்பட்டுச் செல்லவேண்டிய பாதையையும் கண்டறிய உதவி கோரியவை யாகும். மேலும் இவ்வரங்கு புதிய தலைமுறைக்கான தூண்டுதல்களையும் வழங்கக்கூடியதாகும். ஏற்கனவே தமிழீழத்தில் புதிய தலைமுறை ஒன்று கலை, இலக்கியத்தைப் படைக்கத் தொடங்கியுள்ளது. இது கணிசமான வெற்றியையும் பெற்றுள்ளது. இந்நிலையில் இவற்றின் எதிர்காலம் குறித்து மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் உள்ளது. இந்த வகையில் இக்கருத்தரங்குகலை,இலக்கியத்தை வளர்ப்பதில் முதன்மையான நிகழ்ச்சி என்றுகூறுவதில்தப்பில்லை.

# குறுணிக்கல்...

வாகனங்களில் முட்டவேண்டிவரும். வாகனங்களுக்கு விலத்தினால், கிடங்குகளில் இடறுப்படவேண்டிவரும்... பெருங்கஸ்டங்களைத் தவிர்ப்பதற்காகச் சிறு கஸ்டங்களை ஏற்றுக்கொள்கிறார் திருநாவுக்கரசு.

திருநாவுக்கரசுவுக்குப் பக்கத்தில் சைக்கிளை உருட்டியபடிநடக்கிறார்இரத்தினம்.

வடகிழக்குத் திசையிலிருந்து தென்மேற்குத் திசையாக உலங்குவானூர்தி ஒன்று செல்கிறது... இருவரும் தலைநிமிர்ந்து உலங்குவானூர்தியைப் பார்க்கின்றனர்.

"இண்டைக்கு கெலிஓட்டம்கூடவாயிருக்கு... காலமை ஒரு 'பொம்மரும்' உந்தப் பக்கம்போனது... ஏதோ பிரச்சனை இருக்கு..." இரத்தினம் தனது ஊகிப்பைக் கூறுகின்றார்.

இரத்தினத்தின் மனம் இலேசாகச் சஞ்சலப்படுவதைத் திருநாவுக்கரசு உணர்ந்துகொண்டுதனக்குள்சிரிக்கிறார்.

திருநாவுக்கரசு மிகவும் நிதானமானவர். எந்த நிலையிலும் பதற்றப்பட்டுக்கொள்ளமாட்டார். இளவாலையிலிருந்து இடம்பெயர்ந்து வந்தபின் தேங்காய் வியாபாரம்செய்து, மரக்கறி வியாபாரம்செய்து, கூலிவேலைசெய்து... கடைசியாக விறகு கட்டத் தொடங்கினார். விறகுகட்டத்தொடங்கியபோது, பலர்பலவாறு கூறினர்... அவர் எதையுமே சட்டை செய்யவில்லை! எதற்குமே சிரிப்பார்... பார்ப்பவர்களுக்கு அந்தச் சிரிப்பு வெகுளித்தனமானதாகவே தெரியும்... ஆனால் அந்தச் சிரிப்புக்குள் அவரது முடிவுகள் கருக்கட்டியிருக்கும்.

கண்டி றோட்டுடன் தனங்கிளப்பு றோட்டுச் சந்திக்கின்ற சந்திக்கு வந்துவிட்டனர். இரத்தினத்தின்உதவியோடுசைக்கிளில்ஏறிஓட ஆரம்பிக்கின்றார்திருநாவுக்கரசு.

இரத்தினம் அவருக்கருகே சைக்கிளில் ஓடிக்கொண்டிருக்கிறார்.

"இளவாலையிலை இருந்து வந்த சுவாமியார் ஒருவரைப் போனமாதம் சந்திச்சனான். எங்கடை வீடு வாசலெல்லாம் காடாய்க்கிடக்காம்..."இரத்தினம்கூறுகின்றார்.

இருவரும் இளவாலையைப் பிறப்பிடமாகக்கொண்டவர்கள். இராணுவம் இளவாலையை ஆக்கிரமித்தபோது... மக்களோடுமக்களாய்இவர்களும்அங்கிருந்து புறப்பட்டு...சண்டிலிப்பாய் மாவித்தியாலயத்தில் சில நாட்கள் தங்கி, அங்கிருந்து புறப்பட்டுவந்து, மானிப்பாய் அந்தோனியார் கோவிலில்சிலநாள்தங்கி...

அங்கிருந்து திருநாவுக்கரசு குடும்பம் செம்மணி வீதியிலுள்ள வீட்டுக்கு வந்தனர். இரத்தினம்குடும்பம்நுணாவிலில்ஒருவீட்டை எடுத்துக்கொண்டனர்.

"தொழில்லாமல் எவள காலத்துக்குச் சீவிக்கிறது. ஏதாலும் தொழில் செய்யப்பார்..."திருநாவுக்கரசுகேட்கிறார்.

"என்னவேலைசெய்யிறது..."

"மனமிருந்தால் எந்த வேலையையும் செய்யலாம்."

"உன்னைப்போலை விறகு கட்டச் சொல்லுறியே..."

"கட்டினால்என்ன..."

"இளவாலையிலை இருக்கையுக்கை என்ன மாதிரி இருந்தனி. இப்ப என்ன மாதிரி மாறியிட்டாய்... உப்படி என்னையும் வரச்சொல்லுறியே..."

"எந்தத் தொழிலையும் மனநிறைவோடு செய்தால், அதிலை ஒரு சுகத்தைக் காணலாம்..."

இரத்தினம்எதுவுமேபேசவில்லை.

இளவாலையில் திருநாவுக்கரசு இராசவாழ்க்கை வாழா விட்டாலும் அடக்கமாகவும், கௌரவமாகவும் வாழ்ந்தவரென்றுநாக்குப்புரளாமல்கூறலாம்...

கட்டையாக வெட்டப்பட்டு, நடுவகிடிட்டதலை, மூக்கடியில் விரிந்து கடைவாயடியில் கம்பிபோல் சுருங்கிய அளவான மீசை, அளவான உயரம், அதற்கேற்ற உடற்கட்டு, மடித்துவிடாத நீளக்கை சேட்,தடித்தபிறேமுடைய கண்ணாடி... றலி சைக்கிள்... சனசமூக நிலையம், ஆலயம், பாடசாலை அபிவிருத்திச்சபை... சகலதிலும் அங்கத்துவம்...பதவிகள்...

இப்படிவாழ்ந்தவர்திருநாவுக்கரசு...இன்று...

"உனக்குச் சொன்னாலென்ன... எனக்கு வாழ்க்கையே வெறுத்துப்போச்சு... வீட்டிலை பெத்தபிள்ளையள் மதிக்கிற தில்லை... கட்டின பெண்சாதி மதிக்கிறாளில்லை... காலையிலை வெளிக்கிட்டால், இருட்டுப்பட்டு எல்லோரும் படுத்தாப் பிறகுதான் வீடு... அலுப்பெண்டு வீட்டிலை நிண்டால் சண்டை... அரிசிக்குக் காசு... மீனுக்குக்காசு... உப்புக்குக் காசெண்டால் நான் எங்கை போறது... என்னத்தைச் செய்கிறது..."இரத்தினம் மனம்விட்டுக்கூறுகிறார்.

இரத்தினத்தின் குடும்ப ஒட்டுறவைப் பற்றி திருநாவுக்கரசுதீர்மானித்துக்கொள்கிறார்.

தென்மேற்குப் பக்கமாகச்சென்ற உலங்குவானூர்தி இப்போது தென்மேற்குத் திசையிலிருந்து வடகிழக்குப் பக்கமாகச் சென்றுகொண்டிருக்கின்றது.

இருவரும் கைதடிச் சந்தியையும் தாண்டி, நாவற்குழிச்சந்தியையும்தாண்டிவிட்டனர்.

நெல் சேமித்துவைக்கும் அந்தக் கட்டிடம் தலைவிரிகோலமாய்க்கிடக்கின்றது.

"இதிலைதான்'சுப்பசொனிக்'குண்டுபோட்டது. ஞாபகமிருக்கே..."திருநாவுக்கரசுகேட்கிறார்.

"ஓமோம்நல்லஞாபகம்...சுப்பர்சொனிக்இரண்டு குண்டுகள் போட்டு... ஒண்டு இதிலை விழுந்தது... ஒண்டு வீட்டுக்குப் பக்கத்திலை விழுந்தது... வீட்டிலை இருந்ததுகள் செத்தது..."

"பாக்கிற இடமெல்லாம் அகதியளும்... இடிஞ்ச கட்டிடங்களும், குண்டு விழுந்த இடங்களும்... செத்துப்போன பொடியங்களின்ரை படங்களும்... இதுகளுக்கு மத்தியிலைதான் எங்கடை வாழ்க்கைநடந்துகொண்டிருக்கு..."

நாவற்குழிப் பாலத்திற்கு முதல் வருகின்ற சிறியவளைவு... சில வருடங்களுக்கு முன்பு இந்த இடத்தில் இலங்கை இராணுவத்தினர் முகாமிட்டிருந்தனர். அவர்கள் தங்கள் பாதுகாப்புக் கருதி வீதி ஓரத்தில் சரித்துநட்ட ஒன்றரை அடி நீளமான தண்டவாளத்துண்டுகள் இன்னமும் அப்படியே கிடக்கின்றன.

அந்த இடத்தையும் அவர்கள் தாண்டி விட்டனர்...அடுத்துநாவற்குழிப்பாலம்...

நீர்நின்று வற்றிய, நிலம் வரண்டு, கீலங் கீலமாக வெடித்துக் கிளம்பியதைப்போன்ற வீதி... அதிலும்இரண்டுவாகனங்கள்விலத்தமுடியாத அளவிலான ஒடுங்கியபாலம்...அந்தப்பாலத்தில் திரளிமீன்குஞ்சுபிடிப்பவர்களின்கூட்டம்...

இந்தப் பாரத்தோடு பாலத்தைக் கடக்க முடியாதென்பதைத் தீர்மானித்து க்கொண்ட திருநாவுக்கரசு... பிறேக் பிடித்து, சைக்கிளை நிறுத்தி,இறங்க முயற்சிக்கிறார்...அவதானமாக இறங்கிவிட்டார்... திடீரென்று முன்சில்லுக் கிளம்பி...சைக்கிள்மரக்குற்றியுடன்சரிகிறது.

இரத்தினம்மிகவும்பயந்துபோய்விட்டார்.

"இண்டையோடை இந்த வேலையை விட்டிடு..." இரத்தினம் கோபத்துடன் கூறுகிறார்.

கட்டை அவிழ்த்து, மரக்குற்றியையும் சைக்கிளையும் வேறாக்கி, சைக்கிளை நிமிர்த்துகின்றனர். இனி மரக்குற்றியைத் தூக்கிச் சைக்கிள் 'கரியரில்' வைக்கவேண்டும். இன்னும் ஒருவராவது தேவை...எத்தனையோ மனிதர்கள்அவர்களைவிலத்திச்செல்கின்றனர். எல்லோரும் மனச்சாட்சியுள்ள மனிதர்களாக இருக்கவேண்டுமே!

சில நிமிடங்களின் பின்பு... ஆஸ்பத்திரியில் வேலை செய்கின்ற ஒருவர் அவர்களுக்கு உதவிசெய்து, மீண்டும் மரக்குற்றி சைக்கிளில் ஏற்றப்படுகின்றது.

பாலத்தில் சைக்கிளை உருட்டி அதன் பின்பு சைக்கிளில் ஏறி ஓடத்தொடங்குகின்றார் திருநாவுக்கரசு.

"இரத்தினம்... நீ இப்ப சுருட்டுப் பத்திறதில்லையே" இரத்தினத்தார் அடிக்கடி சுருட்டுப்பத்துவதை திருநாவுக்கரசு அறிவார். நரம்பைப் பார்த்து புகையிலையைக் கிழித்து, வீடிப்பருமனில் சுருட்டைச் சுற்றி மிகவும் பக்குவமாய்ப் பத்துவார் இரத்தினம். அவரது சட்டைப்பையுள்புகையிலையும்தீப்பெட்டியும் எந்தநேரமும்இருக்கும்.

"அதெல்லாம்நிப்பாட்டியாச்சு..." இரத்தினத்தின் அவல வாழ்க்கையைப் பார்த்து, திருநாவுக்கரசு மனத்துள் வேதனைப்பட்டுக்கொள்கிறார்.

"இவ்வளவு தூரம் வந்திட்டாய்... என்ரை வீட்டையும்பாத்திட்டுப்போவன்..."

'யாழ்ப்பாணம் வரவேற்கின்றது' என்று எழுதப்பட்ட அந்த வளைவையும், தியாகி அன்னைபூபதியின்மிகப்பெரியஅந்தப்படத்தையும் தாண்டி... செம்மணி வீதியில் சைக்கிள் ஊர்ந்துகொண்டிருக்கின்றது.

திருநாவுக்கரசின்வீடு.

வாசலில் மிகப்பெரியதொரு தீன்முருங்கை மரம்.பத்தோ பதினைந்து பனைமட்டைகளால் செய்யப்பட்டதொரு படலை இன்றோ நாளையோ விழப்போகின்ற பல்லைப்போல அது கிடக்கின்றது.

முருங்கை மரத்தோடு சைக்கிளைச் சாத்துகின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றார் திருநாவுக்கரசு. இரத்தினம் திருநாவுக்கரசின் வீட்டைநோட்டம்விடுகிறார்.

ஒரு பெரிய கொட்டிலும்... ஒரு சிறிய கொட்டிலும்... சிறிய கொட்டிலின் முகட்டால் புகைகிளம்பிக்கொண்டிருப்பதால்,அதுகுசுனி என்பதை இரத்தினம் தீர்மானித்துக் கொள்கிறார். பெரிய கொட்டில்... அண்மையில் மேயப்பட்டிருக்கின்றது. செத்தைக்கிடுகுகள் ஓரளவு உக்கிவிட்டன. முன்பக்கத்தில் சிறியதொரு விறாந்தை வடிவிலான அமைப்பு. அதன் பக்கங்களை மறைப்பதற்கு கிழிந்த பல துவாரங்களுடையதொரு சாக்குக் கட்டப்பட்டிருக்கின்றது... மிகவும் துப்பரவாக இருக்கின்றது. குந்தியிருந்து கை விளக்கு மாறினால் கூட்டுவார்களே அப்படிக் கூட்டப்பட்டதுப்பரவு.

"மங்களம்"–அவரதுமனைவி.

"அம்மா அப்புச்சி வந்திட்டார்..." குசுனிக்குள்ளிலிருந்துஒருகுரல்...

"அப்புச்சி வந்திட்டார்..." கொட்டிலின் பின்புறத்திலிருந்துஇன்னொருகுரல்...

"அப்புச்சி... அப்புச்சி..." இன்னொரு கீச்சிட்ட குரல்...

இரத்தினத்தின் மனத்தளவில் ஒரு சிந்தனைச் சுளியடித்தது...

திருநாவுக்கரசும் இரத்தினமும் முற்றத்துக்கு வருகின்றனர். "புள்ளை அப்புச்சிக்குத் தேத்தண்ணிபோடு" குசுனிக்குள்ளிருந்த தனது மகளுக்கு கூறியபடி வருகின்றாள் மங்களம். வந்தவள் இரத்தினத்தைக் காண்கிறாள்.

"இரத்தினண்ணை வாருங்கோ.. புள்ளை இரத்தினம் மாமாவும் வந்திருக்கிறார். அவருக்கும்தேத்தண்ணிபோடு".

"அப்புச்சி... இண்டைக்கு நான் மீனும் சோறும் சாப்பிட்டனான்..." திருநாவுக்கரசின் இளையவள் திருநாவுக்கரசின் கால்களைக் கட்டிப்பிடித்தபடி கீச்சுக்குரலில் திரும்பத் திரும்பக் கூறுகிறாள்... திருநாவுக்கரசும் மங்களமும் சிரிக்கின்றனர்...

இரத்தினத்தின் மனதில் அடித்த சுளி, அவரது இதயப்பொக்கணையைக் கலக்குகின்றது...!

"அப்புச்சி நானும் மீனும் சோறும்..." அந்தக் கீச்சுக்குரல் பெருநாதமாய் இரத்தினத்தின் செவிப்பறைகளைஅதிரவைக்கிறது...

திருநாவுக்கரசு வியர்வையால் நனைந்து போயிருந்த சேட்டைக் கழட்டிக்கொண்டு பெரியகொட்டிலுக்குள்செல்கிறார்...அவருக்குப்பின்னால்சென்றமங்களம்...

இடுப்பில் செருகியிருந்த சீலையின் முந்தானையை இழுத்தெடுத்து துடைப்பம்போல் மடித்து... திருநாவுக்கரசின் முகத்தில் வடிந்த வியர்வையைத் துடைக்கின்றாள்... ஓலைக் குடிசைக்குள் ஒல்லித்தேங்காய் வாழ்க்கை... அதற்குள்...இப்படியொருபாசம்...உறவு...!

கிழிந்துபோன சாக்குத் துவாரத்தினூடாக... அந்தக் காட்சி...!...? இரத்தினத்தின் இறந்தகால குடும்ப வாழ்க்கை சிரட்டைத்தணலாய் அவர் நெஞ்சைச்சுடுகின்றது!

இரத்தினத்தின் மனதில் அடித்த சுளி இதயப்பொக்கணையைக் கலக்கி, இப்போது உடலிலுள்ள அத்தனை நரம்புகளையும் ஊடறுத்துவருகின்றது...!

திருநாவுக்கரசுவெளியேவருகின்றார்.

"என்னஇரத்தினம்கடுமையானயோசினை..."

"ஒண்டுமில்லை..."

"நீ என்ன யோசிக்கிறாயெண்டு எனக்குத் தெரியும்... இரத்தினம்..." திருநாவுக்கரசின் ஆத்மாவிலிருந்து வார்த்தைகள் ஜனிக்கின்றன...

"மனிசன்ரை புற அழகு காலத்துக்குக் காலம் மாறும்... அதைப் பாதுகாக்கேலாது... ஆனால் அகஅழகு...அதைமாறாமல்பாதுகாக்கலாம்... ...நீயும் நானும் ஒரே பிரச்சினைக்குள்ளைதான் வாழ்றம்...

...எங்கைபாத்தாலும்அகதியள்...

எங்கை பாத்தாலும் குண்டுவிழுந்து சிதறின கட்டிடங்கள்...

எதைப்பார்த்தாலும்குண்டுபட்டகாயங்கள்...

வீதிக்குவீதி...மதிலுக்கு மதில்... செத்துப்போன புள்ளையளின்ரைபடங்கள்...

...இதுக்குள்ளைதான்நாங்கள்வாழ்றம்...

...இதுகளுக்கூடாகத்தான் நாங்கள் வாழவேண்டியிருக்கு... முடிஞ்சது முடிஞ்சதுதான்... அதுகளை நினைச்சு ஆவலாதிப்படுகிறதிலைஅர்த்தமில்லை...

...குறுணிக்கல்லை கண்ணுக்குக் கிட்டப் புடிச்சுப் பார்த்தால், அது உலகத்தை மறைக்கும்...பயங்கரமாக இருக்கும்.அதையே கண்ணுக்கு எட்டப் புடிச்சுப் பார்த்தால், அது குறுணிக்கல்தான்எண்டதுதெரியும்...

...நான் குறுணிக்கல்லை, குறுணிக்கல்லாகவே பாக்கிறன்.

நீ குறுணிக்கல்லை... பாறாங்கல்லாய்ப் பாக்கிறாய்...

...அவ்வளவுதான்...!" திருநாவுக்கரசின் பேச்சுக்கள் இரத்தினத்தின் மனக்கிணற்றுள் எதிரொலிக்கின்றன.

# பேச்சுவார்த்தையில்...

இதன் காரணமாகவே, கிழக்கில் புலிகள் ஆயுதங்களுடன் நடமாடுவதற்கு இராணுவம் தடை விதித்தது.இது கிழக்கு இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்பதின் அடிப்படையிலானதாகும்.இது போன்றதே மீன் பிடிப்பதற்கு உடன்பாட்டின் மூலம் வழங்கப்பட்ட அனுமதியை இராணுவத்தரப்பு ஏற்றுக்கொள்ளமறுத்தநிலையும்ஆகும்.

ஆனால் அரச தரப்பு இராணுவத்தின் நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ளும் நிலை உருவாகிவிட்டமையால் உடன்பாட்டில் விரோதமாக ஏற்பட்டுவிட்ட சரத்துக்களை அரசின் மூலமே நிவர்த்திக்க இராணுவம் விரும்பியது. இதன் பிரகாரமே ஒப்பந்த்தின் பின்னர் மீன் பிடிக்கு அரசு விதித்ததடைகளும் கட்டுப்பாடுகளும்ஆகும்.

மேலும் கிழக்கில் புலிகளின் பிராந்திய தளபதிகளுடன் இணக்கம் காணப்பட்ட சில விவகாரங்களை மோதல் தவிர்ப்பு உடன்பாட்டு நகலுடன் இணைத்துக் கொள்ளச் செய்த முயற்சியும்ஆகும்.

ஆனால் இம்முயற்சிகள் இன்று சமாதானப் பேச்சிற்கு முட்டுக்கட்டைகளாகத் தோன்றியுள்ளன. ஆனால் இராணுவத்தரப்பு இதில் விட்டுக் கொடுப்பதற்கென சமாதானத் தீர்விற்கு ஒத்துழைப்பதற்கான சாத்தியப்பாடுகளோ இருப்பதாகத் தெரியவில்லை. இதன் காரணமாக மோதல் தவிர்ப்பு நிலை உடன்பாட்டின் அடிப்படையில் செயற்பட வேண்டிய கண்காணிப்புக் குழக்கள் செயற்பட முடியாத நிலைஉருவாகியுள்ளது.

மறுவளமாக இராணுவத் தலைமைப்பீடம் இன்று தமது கட்டமைப்பை மாற்றியமைப்பதிலும் இராணுவத்திற்கு மீள்பயிற்சி அளிப்பதிலுமே தீவிர அக்கறை

தொடர்ச்சி 7 ஆம் பக்கம்...

## அறப்போர்தொடுத்தஅன்னை....

அன்னையர் முன்னணியினரின் போட்டியைத் தீர்ப்பதற்கு அதிஸ்டச்சீட்டு குலுக்கப்படுகிறது. அன்னம்மா டேவிட் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்.

## 19 ஆம் நாள் 2 ஆம் மாதம் 1988 ஆம் ஆண்டு

மாமாங்கக் கோவில் முன்றலில் அன்னம்மா டேவிட் சாகும்வரை உண்ணாவிரதத்தைத் தொடங்குகின்றார். அன்னையர்களின் மன உறுதிமிக்க போராட்ட உணர்வின் இறுக்கம் அதிகரித்துச்செல்வதைத் தடுக்கத் திட்டங்கள் தீட்டியது இந்தியப்படை.

சாகும்வரை உண்ணாவிரதம் அறிவிக்கப்பட்டதும் தென்தமிழீழம்முழுவதும்திரண்டனர் அன்னையர்கள். கிராமம் கிராமமாக ஆதரவு உண்ணாவிரதப்போர் தொடங்கியது. அணி அணியாக ஆதரவு ஊர்வலங்கள் நடந்தன. இந்திய அமைதிப்படை பெண்களுக்கு இழைத்துவந்த கொடுமைகளைத் தடுக்க, முக்காடுக்குள் முகம்புதைத்து, மூலைக்குள் முடங்கிக்கிடந்த முசுலிம் பெண்கள் வீதியில் திரண்டனர். மாமாங்கக் கோவிலை நோக்கி மாதர் அணி திரண்டது.

மாமாங்கக் கோவில் முன்றலில் உள்ள இந்தியப்படையின் முகாம் வெள்ளம்போல் திரண்ட பெண்களால் முற்றுகைக்கு உள்ளாக்கப்படுகிறது. உண்ணாவிரதப் போரை நிறுத்தவேண்டுமென ஆயுதந் தாங்கிய இந்தியப்படை அன்னையரை மிரட்டுகிறது. அன்னம்மா டேவிட் மரணிக்க நேர்ந்தால், மக்கள் மீது கொலைக் குற்றஞ்சாட்டி, வழக்குத் தொடருவோமென அன்னையர் முன்னணியினரை மிரட்டுகிறார்கள் இந்தியப்படையினர்.

இந்தியப் படையினரின் மிரட்டல்களுக்குப் பணியாது, அன்னம்மாடேவிட்டின் உண்ணாவிரதம் தொடர்கிறது.

இந்த உண்ணாவிரதத்தை முறியடிப்பதற்குப் பகீரத முயற்சிகளை மேற்கொள்கிறது இந்திய இராணுவம். அன்னம்மாவின் பிள்ளைகளைக் கைதுசெய்து, அவர்களுக்கு ஆசை வார்த்தைகூறி, அவர்களிடமிருந்து ஒரு கடிதத்தை எழுதி வாங்குகிறார்கள் இந்திய இராணுவ அதிகாரிகள். அந்தக் கடிதத்தில் அன்னம்மா டேவிட் பலவந்தமாக உண்ணாவிரதத்தில் ஈடுபடுத்தப்பட்டார் எனப் பிள்ளைகள் கூறுவதுபோலஎழுதப்பட்டது.

அந்தக் கடிதத்தை ஆதாரமாகக் காட்டி, உண்ணாவிரதமிருந்த அன்னம்மா டேவிட்டைப் பலவந்தமாகத் தூக்கிச்செல்கிறது இந்தியஇராணுவம்.

இந்திய இராணுவத்தின் நயவஞ்சக நடவடிக்கை காரணமாக அன்னையர் முன்னணிக்கு ஏற்படுத்தப்பட்ட களங்கத்தைக்கண்டு ஆவேசமடைகிறாள் அன்னை பூபதி. அன்னையரின் போராட்ட இலட்சியத்தை வென்றெடுக்க வேண்டுமென உறுதிபூண்ட அவர், சாகும்வரை உண்ணாவிரதத்தைத் தான் தொடர்வதற்கு முன்வந்தார். அன்னம்மா டேவிட்டுக்கு நேர்ந்த கதி தனக்கும் நேர்ந்துவிடக்கூடாது என்பதற்காக ஒரு கடிதத்தை எழுதிக்கொடுத்தார்.

"நான் எனது சுயவிருப்பின் பேரிலேயே எனது கோரிக்கை நிறைவேறும்வரை சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கிறேன். நான் நினைவிழந்துபோகும்நிலையிலும் என்னை எனது கணவனோ, பிள்ளைகளோ, உறவினர்களோ காப்பாற்றவோ தூக்கிச்செல்லவோ முடியாது" என அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

அன்னையர் முன்னணியினரின் ஆவேச நெருப்பை அணைத்துவிட்டோம். சாகும்வரை உண்ணாவிரதத்தினைத் தடுத்துவிட்டோம். மக்கள் எழுச்சியைமழுங்கடித்துவிட்டோம் என இந்தியப்படை எக்காளமிட்டு, இரண்டு நாட்கள்கூட ஆகவில்லை. அன்னை பூபதி புயலாய்ப் புறப்பட்டு, மாமாங்க வீதியை வலம்வந்தாள். மக்கள் உணர்ச்சி வெள்ளத்தில் மிதந்தனர். இந்தியப்படைக்கு எதிரான கோசங்களை எழுப்பி வரவேற்றனர்.

## 19.03.1988 சனிக்கிழமை காலை 10.45மணி

அன்னைபூபதியின் அகிம்சைப்போர் தொடங்கியநேரம், மாமாங்க வீதியில் அகற்றப்பட்ட இந்தியப்படையின் முகாம் மீண்டும் அவசர அவசரமாக புனரமைப்புச்செய்யப்பட்டது. மேலதிக இந்தியச் சிப்பாய்கள் கொண்டுவந்து குவிக்கப்பட்டனர். பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது. பயமுறுத்தல்களும் தொடர்ந்தன.

## அலைஅலையாகத்திரண்டமக்கள்

இந்தியப்படைகளின் மிரட்டல்களும் அடக்குமுறை நடவடிக்கைகளும் அன்னைபூபதியின் உறுதிமிக்க போராட்ட உணர்வுக்குஉரமூட்டிக்கொண்டிருந்தன.

"இந்தியப்படையே திரும்பிப் போ . அன்னைபூபதியைச் சாகடிக்காதே. புலிகளுடன் பேசிப் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண். தமிழீழமண்ணைசுடுகாடாக்காதே"

இவ்வாறு பாடசாலைக்குச் சென்ற மாணவ மாணவியர்கள் கொளுத்தும் வெய்யிலிலும், கொடி பிடித்துக்கொண்டு கோசமிட்டவண்ணம் அலை அலையாக அணிதிரண்டு அன்னையவளுக்கு ஆதரவாக அடையாள உண்ணாவிரதம் அனுட்டித்தனர்.

மட்டக்களப்பு எங்கும் ஊர்வலங்களும் அடையாள உண்ணாவிரதங்களும் நடாத்தப்பட்டன. அன்னை பூபதியின் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கோரி, வெகுசனப் போராட்டம் வியாபிக்கத் தொடங்கியது. இந்தியப் படைகளின் ஒவ்வொரு முகாம்களும் அன்னையர்களால் சூழப்பட்டு, மகஜர்கள்கையளிக்கப்பட்டன.

அன்னை பூபதியின் அகிம்சைப்போர் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை எனத் தென்தமிழீழமெங்கும் பரவி, மக்கள் எழுச்சிப்போராகமாறத் தொடங்கியது.

இந்தியப்படை மிரண்டது. அன்னை பூபதியின் உண்ணாவிரதப் போரைத்தடுப்பதற்குவழிதெரியாதுதிணறியது.

அடக்குமுறைகளைக்கட்டவிழ்த்துவிட்டு, அன்னையர்களை அடக்குவதற்கு, இந்தியப் படையினர் முடிவெடுத்தனர். அன்னை பூபதியின் அகிம்சைப் போருக்கு ஆதரவு தெரிவித்து, ஆரையம்பதியில் இருந்து அன்னையர்களின் மாபெரும் எழுச்சிப்பேரணி பதாதைகளோடும் சுலோக அட்டைகளோடும் கோசங்களைஎழுப்பியவண்ணம் மாமாங்கக்கோவிலைநோக்கி, வந்துகொண்டிருந்த ஊர்வலத்தை இடைமறித்த இந்தியப் படையினர் அன்னையர்மீதுதடியடிப்பிரயோகம்செய்கின்றனர்.

இராணுவவன்முறையால் ஊர்வலம்சிதறுண்டுகலைகின்றது.

இந்தியச் சிப்பாய்களின் இவ்வன்செயலைக் கண்டித்துக் கடைகள் மூடப்பட்டன. பாடசாலைகள் புறக்கணிக்கப்பட்டன. மட்டக்களப்பு எங்கும் கர்த்தால் அனுட்டிக்கப்பட்டது. இந்திய இராணுவத்தின் ஒவ்வொரு நடவடிக்கைகளுக்கும் எதிர் நடவடிக்கைகள் தொடருவதையும், மக்கள் அச்சமின்றி அன்னை பூபதிக்கு ஆதரவு தெரிவிப்பதையுங் கண்டு அரசு அஞ்சியது.

திடீரென்று மாமாங்கக் கோவில் இந்தியப் படையினரால் சுற்றிவளைக்கப்படுகின்றது. மூலைக்கு மூலை சிப்பாய்கள் நிலையெடுத்து நிற்கின்றனர். அன்னை பூபதி அமைதியாகத் தூங்குகின்றாள். அன்னையர்கள் சூழ இருந்து பயனைகள் பாடுகின்றனர். கிறீஸ்த்தவ கீதங்கள் இசைக்கின்றனர். சர்வ மதஅனுட்டானங்கள்நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

## இந்தியப்படையின்மிரட்டல்கள்

ஓர் இந்தியச் சிப்பாய் உண்ணாவிரதப் பந்தலுக்கு ஓடிவருகின்றான். "மாற்று இயக்கத் தோழர்கள் பூபதி அம்மாவைத் தூக்கிக்கொண்டு செல்லப்போகின்றார்கள்" என்ற பயப்பீதியை ஏற்படுத்துகின்றான். கோவில் வீதியில் அமர்ந்து பயனை நடத்திக்கொண்டிருந்த மக்கள், அன்னை பூபதியின் அருகே நெருங்கிக்கொள்கின்றனர். அன்னையர் முன்னணியினர் ஆத்திரம்கொள்கின்றனர். "எங்கே வரட்டும் பார்ப்பம். முடிந்தால் தூக்கட்டும்பார்ப்பம். எங்களின்பிணங்களின் மேல்தான் அன்னைபூபதியைஅவர்களால்கைவைக்கமுடியும்" எனஆவேசத்தோடுஆரவாரித்தனர்.

இந்தியச் சிப்பாய் கூறுகின்றான், "அப்படி அவர்கள் வந்தால், நாங்கள் துப்பாக்கிப்பிரயோகம் செய்வோம். நீங்கள் அனைவரும் நிலத்தில் விழுந்துபடுத்துக்கொள்ள வேண்டும்." இப்படிக் கூறிவிட்டு, அவசரமாகஓடுகின்றான்.

அன்னையர்கள் பூபதி அம்மாவைவிட்டு அசையவில்லை. வருவதை எதிர்கொள்ளத் தயார்நிலையிலிருந்தார்கள். இந்தியச் சிப்பாய் கூறியதைப்போல் தூரத்தே ஒரு துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்கிறது. அதனைத் தொடர்ந்து மாமாங்க வீதியைச் சுற்றி நிலையெடுத்து நின்ற இந்தியச் சிப்பாய்கள் அனைவரும் ஒரே நேரத்தில் ஆகாயத்தை நோக்கித் தொடர்ச்சியான துப்பாக்கி வேட்டுக்களைத்தீர்த்தனர். அன்னையர்களைஅச்சுறுத்தி, பூபதி அம்மாவின் உண்ணாவிரதப் போரை முறியடிப்பதற்கே இந்தியப்படை இத்தந்திரோபாய நடவடிக்கையில் ஈடுபடுகிறது என்பதைப் புரிந்துகொள்ள அன்னையர் முன்னணியினருக்கு வெகுநேரமெடுக்கவில்லை.

"உன் துப்பாக்கி மிரட்டல்களுக்கெல்லாம் இந்தப் பூபதி அசையமாட்டாள்" களைத்து இளைத்துப்போன பூபதி அம்மாவின்உதடுகள்மெல்லியஓசையில்அசைகிறது.

உலக நாட்டுச் செய்தியாளர்கள் அன்னை பூபதியின் உண்ணாவிரதப் பந்தலை முகாமிட்டனர். அன்னையின் உண்ணாவிரதம் பற்றி உலகச் செய்தித்தாள்கள், வானொலிகள் மூலம்செய்திகள்பரவுகின்றன.

ஆனாலும் அன்னை பூபதியின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு இந்தியப் படையினர் எந்தவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளவில்லை. மாறாக அன்னையின் உண்ணாவிரதப் போரை முறியடிக்கும் முயற்சிகளில் அவர்கள் மும்முரமாகஈடுபட்டிருந்தனர்.

## ஆதரவாளர்பிள்ளைகள்கைது

அன்னை பூபதி தனது உறுதியான உண்ணாவிரதப் போரினால் உணர்விழந்து செல்கின்றார். மருத்துவர்கள் பரீட்சித்து அறிக்கை சமர்ப்பிக்கின்றார்கள். ஆபத்தான கட்டத்தை அடைந்துவிட்டதாக அறிவிக்கப்படுகின்றது. மட்டக்களப்பு நகரம்பரபரப்படைகின்றது. இந்தியச் சிப்பாய்களின் இறுக்கமான நடவடிக்கைகளும் தொடர்கின்றன. வீதிக்கு வீதி இராணுவ வண்டிகள். அன்னை பூபதியின் உண்ணாவிரதப் போருக்கு உறுதுணையாக நின்றவர்கள், அன்னையர்களுக்கு ஆலோசனை வழங்கியவர்கள் கைது செய்யப்படுகின்றார்கள். அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தலைவர் வணசிங்கா, வண. பிதா சந்திரா பெர்ணாண்டோ, பூபதி அம்மாவின் பிள்ளைகள், விடுதலை செய்யப்பட்டிருந்த அன்னையர் முன்னணியினரின் ஆலோசகர் கிங்ஸ்லி இராசநாயகம் மீண்டும் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு, முகாமில் சிறைவைக்கப்படுகின்றார்கள்.

வேட்டை நாய்கள்போல் வீதிகளெங்கும் இந்தியப்படைகள் வெறிகொண்டலைகின்றன. அன்னையின் கணவர் திரு. கணபதிப்பிள்ளையை ஓர் இந்திய அதிகாரி தனியே அழைத்துச் செல்கின்றான். ஆசை வார்த்தைகள் கூறிப்பார்க்கின்றான். ஆனால் அவரோ எதற்கும் அசையவில்லை. "நியாயம் தேடித்தான் என் மனைவி தன் உயிரைத் தியாகம்செய்ய உறுதி பூண்டிருக்கின்றாள்" எனஅவர்உறுதியாகக்கூறுகின்றார்.

இந்திய அதிகாரிகள் முயற்சிகள் எதுவுமே பயனளிக்கவில்லை. அன்னை பூபதியின் இலட்சியப் போராட்டம் முடிவுக்கு வருகின்றது. 19.03.1988 ஆம்நாள் உண்ணாவிரதம் தொடங்கி, 31 ஆம் நாள் அன்னை பூபதியின் உயிர்பிரிகின்றது. தென்தமிழீழ மக்கள் சோகவெள்ளத்தில் மிதக்கின்றனர். அலை அலையாக மக்கள் மாமாங்கக் கோவிலை நோக்கி ஓடிவருகின்றனர். இந்தியப்படைகள்வீதிகளைஇடைமறித்துவிரட்டுகின்றன.

மிரட்டல்களுக்கும் இடைமறிப்புகளுக்கும் மக்கள் அஞ்சவில்லை. வீட்டு வேலிகளை உடைத்து, மக்கள் வெளியேறுகின்றனர். மாமாங்கக் கோவில், மக்கள் வெள்ளமாய் நிறைகின்றது. இந்தியச் சிப்பாய்கள் மிரள்கின்றனர். மக்களின் உணர்வலைகளை அடக்குவதற்கு இந்தியப்படையால் முடியவில்லை.

அன்னையின் புகழுடலைப் பரிசோதிக்க வேண்டும் எனக்கூறி, இந்தியச் சிப்பாய்கள் அவரின் உடலைத் தூக்க முயல்கின்றனர். அன்னையர்கள் ஆவேசம்கொண்டு, ஒன்றுதிரண்டு அன்னையின் புகழுடலைப் பாதுகாக்கின்றனர். இடையில் சிங்கள சிறீலங்காப் படையினரும் பூபதி அம்மாவின் புகழுடலைக் கைப்பற்றக் கங்கணம் கட்டிநிற்கின்றனர். இந்தியப்படையும் சிறீலங்காப்படையும் அன்னையின் இலட்சிய உடலுக்காகப்போட்டிபோடுகின்றனர். இந்த இழுபறிநிலையைப் பயன்படுத்தி, அன்னையர்கள், பூபதி அம்மாவின் புகழுடலைத் தூக்கிச்சென்று மறைவிடம் ஒன்றில் ஒளித்து வைத்துக்கொள்கின்றனர்.

## தடைகளையும்மீறிஇறுதிஊர்வலம்

அன்னையின் புகழுடலை எழுச்சிகரமான ஊர்வலத்தோடு நல்லடக்கம் செய்யவேண்டுமென மக்கள் திட்டமிடுகின்றனர். இந்தியப்படைகள்வீதிக்குவீதி காவல்நிற்கின்றது. அன்னையர் மலர் மாலைகளை மறைத்துக்கொண்டு, இந்தியப்படைகளின் கண்களில் படாதவாறு குச்சொழுங்கைகள் வழியாகச்சென்று அன்னையின்புகழுடலுக்குஅஞ்சலிசெலுத்துகின்றனர்.

இது இவ்வாறிருக்க கைதுசெய்யப்பட்டு, முகாமில் சிறைவைக்கப்பட்டிருந்த முக்கியத்தர்களும்பூபதி அம்மாவின் பிள்ளைகளும்விடுவிக்கப்படுகின்றனர்.

அன்னையின் புகழுடல் அலங்காரத்தோடு ஊர்வலமாகக்கொண்டு செல்லப்படவேண்டும். அதற்கேற்ப இரகசிய வேலைத்திட்டங்கள் நடைபெறுகின்றன. அலங்காரச் சோடனைப் பொருட்கள் ஏற்பாட்டுநிலையில் வைக்கப்படுகின்றன. சட்டத்தரணி பொன் வேணுதாஸ், செய்தித்தாள் ஆசிரியர் நித்தியானந்தம் ஆகியோர் இறுதியேற்பாடுகளைக் கவனிக்கின்றனர். இரவோடு இரவாக வீதிகள் அலங்கரிக்கப்படுகின்றன.

அன்னையின் உயிர்பிரிந்த மூன்றாம் நாள், வெள்ளை ஆடையணிந்த அன்னையர்களின் அணிவகுப்பில் மக்கள் திரளுக்கு மத்தியில் அன்னை பூபதியின் புகழுடல், அலங்கரிக்கப்பட்ட வண்டியில் ஊர்வலமாக வந்துகொண்டிருந்தது.

வீதிகளில் காவல்நின்ற இந்தியச் சிப்பாய்கள் அன்னை பூபதியின் புகழுடலுக்கு சிரம் தாழ்த்தி வணங்கிநின்றனர். ஊர்வலம் கல்லடிப் பாலத்தைக் கடந்துசெல்வதைக் கண்ட மக்கள், ஓடோடி வந்து அணியில் சேர்ந்துகொள்கின்றனர். நாவலடிக் கடற்கரையை நோக்கி, நீண்ட மக்கள் பேரணிகளோடு அன்னையின்புகழுடல்சென்றுகொண்டிருக்கின்றது.

அன்னை பூபதியின் உயிரற்ற உடலைக்கூட இந்திய ஆக்கிரமிப்புப் படைநெருங்க முடியாமற்போயிற்று. தமிழ் மக்களின் எழுச்சியினையும் விடுதலை வேட்கையினையும் அடக்குமுறையால் அடக்கிவிடமுடியாது என்பதனை அன்னைபூபதியின்இறுதிஊர்வலம்எடுத்துக்காட்டியது.

*ஒரு தாயின் ஒப்பற்ற தியாகமாக தமிழீழப் பெண் இனத்தின் எழுச்சிவடிவமாக அன்னை பூபதியின் அறப்போர் முடிவுற்றது. அன்னையின் துணிவும் உறுதியும் அற்புதமான தற்கொடையும் இந்திய வல்லாதிக்கத்தைத் தலைகுனியவைத்தது.*

# நாங்கள் அரசு:
# எந்தவொரு காலக்கெடுவையும் ஏற்கப்போவதில்லை

**■ செய்தியாளர் மகாநாட்டில் சந்திரிகா**

"அரசியற் தீர்வு தொடர்பான நிகழ்ச்சித் திட்டம் ஒன்று தயாரிக்கப்படவேண்டும் என்பது ஒரேயொரு நிபந்தனையாகும்". இவ்வாறு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா 31.03.1995 இல் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். அம்மாநாட்டில் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்கள் வருமாறு.

கேள்வி: நாளை (01.04.95) நடைபெறும் பேச்சுக்களின் நிலை என்ன மாதிரி உள்ளது?
பதில்: 28 ஆம் நாள் இரவே எமக்குப் புலிகளின் கடிதம் கிடைத்தது. நேற்றுத்தான் (30 ஆம் நாள்) நான் நாடு திரும்பினேன். நான் இங்கு இல்லாததால், எந்த முடிவும் எடுக்கமுடியவில்லை. எங்களுக்கு இதனால் நேரம் இருக்கவில்லை. எனினும் 2 ஆம் நாளுக்கும் 10 ஆம் நாளுக்கும் இடையில் பேச்சுக்களை நடத்தலாம் என்று முன்னர் அறிவித்திருந்தேன். அந்தக்கால எல்லைக்குள் பேச்சுக்கள் நடத்தலாம்.

கேள்வி: பூநகரி முகாம் அகற்றப்படுதல், கிழக்கில் போராளிகள் ஆயுதங்களுடன் நடமாடுதல் ஆகியவிடயங்கள்தான் தூதுக்குழுவினர் பேச்சுக்களில் இடம்பெறுமா?
பதில்: பூநகரி முகாமை நீக்கமுடியாது என்பதே எமது நிலைப்பாடு. அரசியல் ரீதியான நிலையான தீர்வு ஒன்று காணப்படும்வரை, பூநகரி முகாமை அகற்றமுடியாது என்பதே எமது நிலைப்பாடு. நாங்கள் அதனை 600 மீற்றர் வரைப் பின்னோக்கித் தள்ளி இருக்கின்றோம். இந்த நிலைப்பாட்டில் எம்மால் இப்போது எந்த மாற்றமும் செய்யமுடியாது.

கேள்வி: எரிபொருள் மற்றும் பொருட்களுக்கான தடை விலக்கப்படுவது பற்றி, உங்கள் நிலையென்ன?
பதில்: இராணுவத் தேவைகக்குப் பயன்படும் பொருட்கள் தவிர, மற்ற எல்லாவற்றினதும் தடைகள் நீக்கப்பட்டுள்ளன. எரிபொருள் தொடர்பாகத் தடைநீக்குவது பற்றி ஆலோசித்து வருகின்றோம்.

கேள்வி: கடல்வலயத்தடையைத் தளர்த்துவதுபற்றி என்ன கருதுகின்றீர்கள்?
பதில்: யாழ்ப்பாணம் சென்றுதான் அதுபற்றி ஆராயப்படும்.

கேள்வி: புலிகள் விடுத்துள்ள ஏப்ரல் 19 காலக்கெடுவிற்கு உங்களது பிரதிபலிப்பு என்ன?
பதில்: எங்களுக்கு காலக்கெடு எதுவும் இல்லை. சிறீலங்கா அரசு எவரிடமும் இருந்தும் காலக்கெடு ஏற்காது. நாங்கள் அரசு. நாங்கள்தான் அதனைத் தீர்மானிப்போம். எனவே நாங்கள் எந்தஒரு காலக்கெடுவையும் ஏற்கப்போவதில்லை.
கேள்வி: புலிகள் அரசியல் தீர்வுபற்றி நீங்கள் கொண்டுள்ள கருத்து?
பதில்: புலிகள் தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டும். பேச்சுக்கள் தொடங்கும் போது நிபந்தனைகள் எதுவும் அவர்கள் விதிக்கவில்லை. இது எழுத்திலும் உள்ளது. இப்போது இராணுவரீதியில் சில நிபந்தனைகளை அவர்கள் போடுகின்றனர். உதாரணமாக பூநகரிமுகாமை விலக்கிக் கொள்வதையும் வேறு சில விடயங்களையும் கூறலாம். அவற்றில் சில வழங்கப்படலாம். ஏனையவை முடியாததாகலாம். நிகழ்ச்சித் திட்ட அடிப்படையில் நாங்கள் பேச விரும்புகின்றோம். அடுத்தமுறை யாழ்ப்பாணம் செல்வதற்கு முன்பாக அவர்களிடம் இது குறித்து கேட்கப்படும்.

கேள்வி: அரசியல் தீர்வுத்திட்டம் புலிகளுக்கு அனுப்பப்பட்டுவிட்டதா?
பதில்: இது என்ன 'சொக்கலட்' பெட்டியை அனுப்புவது போலவா? அரசியல்தீர்வு அங்கு கொண்டு செல்லப்பட்டு ஆராயப்பட வேண்டும். இது எமது நிலைப்பாடு. அதற்கொரு விளக்கம் வேண்டும்.

கேள்வி: உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகளை அரசு அனுப்பியது என புலிகள் கூறுகின்றனர். இது உண்மையா?
பதில்: அரசு அவ்வாறு எந்த உத்தியோக பற்றற்ற பிரதிநிதிகளையும் அனுப்பவில்லை. ஆனால் 'ராவய' செய்தித்தாள் ஆசிரியர் யாழ்ப்பாணம் சென்றுவந்தார். ஆனால் அவர் அரச பிரதிநிதி அல்ல என்பதை யாவரும் உணரவேண்டும். அவர் தமது விஜயத்தில் நடந்ததை எமக்குக் கூறினார்.

கேள்வி: புலிகள் தமது 16 கைதிகளை விடுவித்து உள்ளனர். அரசு அதற்கு நிகராக ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளதா?
பதில்: நாங்கள் பலவற்றை பொதுவான அளவு செய்துள்ளோம். அதனால் புலிகள் 20-25 போர்க்கைதிகளை விடுவித்துள்ளனர். நாங்கள் பொருட்களுக்கான தடையை எடுத்துள்ளோம். மீன்பிடித்தடையில் 50வீதமளவு தளர்த்தப்பட்டுள்ளது. வடக்குக்கு இரண்டு தரைவழிப்பாதைகள் திறக்கப்பட்டுள்ளன. புலிகளின் போராளிகள் சில கட்டுப்பாடுகளின் கீழ் சுதந்திரமாக நடமாடுகின்றனர். ஆயுதங்களை களையக் கூறாமலே ஒரு கெரில்லா அமைப்புடன் பேச்சுவார்த்தைகளை நடத்துகின்றோம். இதனை வேறு எந்த அரசும் கடந்த காலத்தில் செய்யவில்லை. பிரித்தானிய அரசுகூட, ஐ.ஆர்.ஏ ஆயுதங்களைக் களைந்தால் மட்டுமே பேச்சுக்களை நடத்துவோம் என்று கூறியுள்ளதை நீங்கள் கவனிக்கவேண்டும். 25 பேர் விடுவிக்கப்பட்டமைக்கு அதிகமாகவே நாங்கள் நல்ல சமிக்கைகளை காட்டியுள்ளோம்.
கேள்வி: பேச்சுக்களை தாமதப்படுத்தப் தந்திராபாயங்களை புலிகள் கடைப்பிடிக்கிறார்கள் என நினைக்கிறீர்களா? அல்லது தேவைகளைக் கோரிக்கைகளாக விடுக்கிறார்கள் என நினைக்கிறீர்களா?
பதில்: 12 ஆண்டுகளாக செய்து வந்ததை அவர்கள் இப்போது செய்து வருகின்றார்கள். அதனை நாம் நன்கு அறிவோம். அதன் அடிப்படையிலேயே தந்திரோபாயங்களையும், செயற்பாடுகளையும் செய்து வருகின்றோம். இதனால் நாம் புலிகள் குறித்து ஆச்சரியமாக இல்லை. புலிகள் கருணையற்ற, சனநாயகமற்ற ஆயுதக்குழு என நாம் அறிவோம். அரசியல் தீர்வு தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும் என்பதே எமது ஒரேயொரு நிபந்தனையாகும். வேறு எந்த ஒரு நிபந்தனையும் எம்மிடம் இல்லை. இதற்கு மேலாக, தந்திரோபாயங்கள், மூலோபாயங்கள் தொடர்பான விடயங்களை நாங்கள் வெளியிட முடியாது. ஏனெனில் குறிப்பான ஒரு செய்தித்தாள் சமாதான முயற்சிகளை சீர்குலைக்கக்கூடிய வகையில் அபாயகரமான பொய்களைச் செய்தியாக வெளியிடுகின்றது. இந்தச் செய்தித்தாளோடு, ஒரு தொலைக்காட்சியும் கூட இதில் ஈடுபடுகின்றது. உத்தியோகப் பற்றற்ற முறையில் செய்திகள் கிடைப்பதாக இவைகள் குறிப்பிடுகின்றன.


தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - யேர்மன் கிளையினர் நடாத்தும்

## புனர்வாழ்வுக் கலைத்தென்றல்

**காலம்:** 22-4-1995 சனிக்கிழமை மாலை 4 மணி

**இடம்:** Evangeische-Kirchengemeinde
Berlin-Dahem
Thielalleel-3 Berlin
*U-Bahn riehtung Dahemdorf*

நிகழ்ச்சி நிரல்
- தமிழீழம் இசைக்குழுவின் பாச இசைமழை
- தமிழாலய மாணவர்களின் நடனம்
- தனிநடிப்பு லூஸ்மாஸ்ரர்
- வீணை இசை
- வில்லிசை
- அபிநயம்
- கதாப்பிரசங்கம்

உதவிக்கரங்கள் நீளட்டும்!
உரிமையுடன் வரி வழங்கட்டும்!!

ஊரோடிணைந்த இளங்கொடியுறவை
வேரோடறுக்க முடிந்ததோ எமக்கு?
பாரோடிணைந்து பணிதனைச் செய்து
கண்ணீர் துடைக்கும் கைகளாவோம்!

இதயத்தில் இன்னமும் மனிதத்தின் ஆளுமை இருப்பதைக் காட்டுவோம்!



நெதர்லாந்தில் 'சித்திரை மாலை'

அரச பயங்கரவாதத்தினால் தமிழீழப் பகுதிகளில் பெற்றோரை, பாதுகாவலரை இழந்து ஆதரவற்று இருக்கும் ஆயிரக்கணக்கான மழலைகளின் வளமான எதிர்கால வாழ்வைக் கருத்திற்கொண்டு, செயற்படுத்தப்பட இருக்கும் செஞ்சோலை மகளிர் பாடசாலைக் கட்டிட நிதிக்காகத் தமிழர் கலை, பண்பாட்டுக் கழகம் நடாத்தும்

## சித்திரை மாலை

அடிப்படைக் கல்வி வசதியையே பெற்றுக்கொள்ள முடியாத பிள்ளைகளுக்கு அவ்வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும்முகமாக 'செஞ்சோலை'யினரால் திட்டமிடப்பட்டுள்ள செஞ்சோலை மகளிர் பாடசாலை கட்டிட நிதிக்காக நடாத்தப்பட இருக்கும் இந்நிகழ்ச்சிக்கு உணர்வுபூர்வமான தமிழ் மக்கள் அனைவரையும் அழைக்கிறோம்.

நிகழ்ச்சிகள்
- ஞானசௌந்தரி (நாட்டுக்கூத்து) (மத்திய நெதர்லாந்து)
- சோலோக்கச்சேரி (வடநெதர்லாந்து)
- பண்பும் பகட்டும் (தாளநயம்) (தெற்கு நெதர்லாந்து)
- ஞானக்குழந்தை (வில்லுப்பாட்டு) (வடநெதர்லாந்து)
- இசை அமுதம் (நெதர்லாந்து இசைக்கலைஞர்கள்)

காலம்: 22.04.1995
நேரம்: மாலை 4 மணி
இடம்:
AULA VAN INTERNAAT,
OUDENBOSCH,
NEDERLAND.

பிரவேசம்: 10 கில்டன்கள்



TAMIL COORDINATING COMMITTEE - FRANCE
பிரான்ஸ் செய்திச் சேவை
Mul House
தொலைபேசி இலக்கங்கள்
1 6 8960 4537
4636 4949
3032 3226


## யேர்மனியில் அன்னைபூபதி நினைவுநாள்

யேர்மன் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினர் Kirchheim - Teck நகரில் 15.04.1995 (சனிக்கிழமை) அன்று அன்னைபூபதி நினைவு நாளை நடாத்த உள்ளனர்.
விடுதலை இசை, நடனம், வில்லுப்பாட்டு உட்படப் பல கலை நிகழ்ச்சிகள் இடம்பெற இருக்கின்றன.
அன்னைபூபதி நினைவுப் போட்டி 1995 இற்கான முடிவுகள் தெரிவிக்கப்பட்டு, பரிசுகளும் நினைவுநாளின்போது வழங்கப்படும்.
நினைவுநாள் நடைபெறும் இடம்:
Stadthalle,
Teckcenter,
Stuttgarter str - 2,

# சுட்டுக்கடிக்கவா சுதந்திரம்?

வெண்புறா சிறகுவிரித்துவெளியேவந்து
விரிந்த வானமெங்கும் திரியட்டும்.
அலகுகளில் "ஒலிவ்" கிளை சுமந்து
தாளப்பதிந்து பறக்கட்டும்.
அவைபாடும் கானாமிர்தம்,
எங்கள் செவிகளில் ரீங்காரமிடட்டும்.
குருதிவழிந்த சுவர்களெங்கும்
சமாதானத் தேவதையின் சாந்தமுகம்
சிரிக்கட்டும்.
"நம்பிக்கைக்கனவின் நாயகர்கள்" வரும்
"பறக்கும் பல்லக்கு"
"மலைவேம்புவளவுக்குள்" அடிக்கடி
இறங்கட்டும்.
படித்தவரும் பாமரரும்
வானமரர் வரும் இந்திரவிமானத்தை
தொட்டுப்பார்த்து முத்தமிடட்டும்.
எந்த நேரமும் "தங்கை" வரலாம்.
அந்திமந்தாரப்பூவில் மாலைகட்டி
வந்திறங்கும் போது சூட்டுவோம்.
என்னதான் இருந்தாலும்
இரத்தஉறவைஎப்படி உதறலாம்?

"கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம்
வாங்கினால்
கைகொட்டிச் சிரியாரோ"
யாரடா பாடுவது?
உள்ளதையும் கெடுக்கும் கொள்ளிக்
கண்ணன் யார்?
அடநீயா?

முண்டாசுக்கவிஞன் பாரதியே!
உன்னைமுன்னுக்குவரச்சொன்னதுயார்?
பொங்கிவரும் நேரத்தில் பானையைப்
போட்டுடைக்கவா வந்து நிற்கிறாய்?
போய்விடு.
சிட்டுக்குருவிக்கும் சுதந்திரம்தேடிய
எட்டயபுரத்து அரசே!
நீவாழத்தெரியாத வகையினன்:
எங்களையும் குழப்பாதே, போய்விடு.

மின்சாரம்
நெடுஞ்சாலை
"சம்சாரம்" விரும்பும் சிலசாமான்கள்
இந்தளவுமேமெத்தத் திருப்தி.
இதற்குமேல் சுதந்திரம் எதற்கு?,
சுட்டுக்கடிக்கவா?
தீபாவளிக்கிடையில் தீர்வு
வருமென்றால்
பாவாடை மலியும்
பாத்திரங்கள் விலை குறையும்.

பெற்றோல்வந்தால் புதுக்கார் வாங்கலாம்
தண்டவாளங்கள் இணைந்தால்
றெயிலேறிச் சாமான்கள் வரும்.
அடிக்கடி கொழும்பில் "அலுவல்கள்"
பார்க்கலாம்
யாழ்தேவி தமிழரைச் சுமந்து செல்லும்
திரும்பி வரும்போது "சகோதரங்களை"
அழைத்துவரும்.
நாகவிகாரை வளவுக்குள்
தூபியுடன்கூடிய புத்தகோவிலில்
தாமரைத் தட்டேந்திச் சிங்களப்பெண்கள்
சிரிப்பர்.
"காமினிரீறூம்" கதவுகள்
திறக்கும்.
கற்பனையே எத்தனை அற்புதம்
"விதந்தருகோடி இன்னல்
விளைந்தென்னை
அழித்திட்டாலும்
சுதந்திரதேவி நின்னைத்
தொழுதிடல் மறக்கிலேனே!"

போரிடச் சொல்லிப்
பாடுவதாரடா?
சுதந்திரம்பற்றிச் சொல்பவன்
யாரடா?
என்ன திமிரிருந்தால்
இப்படிப்பாடுவான்?
அதுவும் இந்த நேரத்தில்
யாரடா அவன்?
அடபாரதியா?
நீயின்னும் இங்கேயா
நிற்கின்றாய்?
கவியரசே!
பாலுக்கும், சீனிக்கும்,
பருப்போடுமாவுக்கும்
நாலுக்கும்தானே நாங்கள்
போரிட்டோம்?
ஏனய்யா உனக்கிந்தப்
பொல்லாப்பு?

நீட்டோலைக்கிதுவல்ல நேரம்
பாட்டரசே! உனக்கென்ன பாட்டு?
போய்விடுக!
சும்மாவராது சுதந்திரம் என்று
சூரியத்தலைவன் சொன்னதை மறந்தார்.
இன்னுயிர் இழந்து மண்ணுளே புதைந்த
கண்ணின்மணிகளின் கல்லறை மறந்தார்.
சிதறிப்போன வாழ்வை மறந்தார்.
திசைகளுக்கொன்றாய்ப் பறந்ததை மறந்தார்
மறப்பது எங்களின் மரபென ஆனதால்
கிடைப்பதில் மகிழ்வதே விடுதலை
என்றார்.
பாரதியே!
அஞ்சற்க: வேங்கை அசையாது
அனல்மூண்டு
பிஞ்செல்லாம் அதில் வீழ்ந்து
பொசுங்கிடினும்
கல்லறையில்
கண்துஞ்சும் வீரர் கனவுநனவாகும்
அஞ்சற்க: வேங்கை அசையாது.
போய்வருக!

**புதுவை இரத்தினதுரை**




U.T.O
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

L.T.T.E
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

W.T.C.C
Gold Gasse-8, 7000 Chur
SWITZERLAND
Tel/Fax: 077-816609

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F091-611 3179

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F 435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

T.C.C
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

T.C.C
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943


Printed by Observer Group Newspapers.